பக்கங்கள் 20

20/=

08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

*Ethiroli*

08-14 ஒகஸ்ட் 2018 வார

Raja Bojun
Sri Lankan Buffet
Liberty Arcade,
No 282, R.A.De Mel Mawatha Colombo 03.
Tel. 4 71 61 71 / 2577097-8 web : rajabojun.lk



## பூவைக் கசக்கி வாசம் நுகரும் புலமைப் பரிசில்

## கூட்டமைப்பை விட்டு ரெலோ ஒருபோதும் விலகாது

## வெறு வெளியின் அரங்க மேலாண்மை

## வேலியில் போன பாம்பைப் பிடித்து வீட்டுக்குள் விட்ட கதை

சிறந்த பாஸ் இற்கு சிறந்த பிரஷ் ஒன்று
இலங்கையில் முதன் முறையாக

இத்தாலி தொழில்நுட்பத்தில் இயந்திரங்களால் தயாரிக்கப்பட்டு மிருக உரோமங்கள் இல்லாமல் எங்கள் நாட்டிற்கு ஏற்ற விதத்தில் தயாரிக்கப்படும் சிறந்த பிரஷ் ஒன்றை மல்டிலெக் உங்களுக்கு அறிமுகப்படுத்துவது உங்களை வணிகத்தில் நிபுணராக்கும் நோக்குடன்.

சுவரிற்கு பலகைகளுக்கு இரும்பிற்கு மற்றும் எந்தவொரு மேற்பரப்பிற்கும் இலகுவாக பெயின்டினை பூசுவதற்கு தங்க நிற மற்றும் கறுப்பு நிறத்திலான இரண்டு பிரஷ்கள் இப்போது உங்களுக்கு.

1/2 தொடக்கம் 6 அங்குலம் வரை எந்தவொரு அளவிலும் கொள்வனவு செய்யலாம்.

இலங்கையின் தயாரிப்பு

விலை . ரூ.150 தொடக்கம்

HOTLINE 077 2222 555

Multilac
www.multilac.com

உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்



# பூவைக் கசக்கி வாசம் நுகரும் புலமைப்பரிசில்

● செந்தூரி

"கடைசியா நடந்த சோதினையில இவளுக்கு மார்க்ஸ் காணாது" - "இவை செய்யிற பேப்பர்கள் அவ்வளவு திறமில்லை"

- "சிங்கள ஏரியாப் பேப்பர்கள் எடுத்து, செய்தால் தான் ஐடியா வரும்"

- "ஞாயிற்றுக்கிழமை விடிய ஆறு மணிக்குப் போய், பின்னேரம் ஐஞ்சரைக்குத் தான் வீட்டை வாற, ஏழு மணிக்கு குரூப் கிளாஸ் ஒண்டிருக்கு"

- "எத்தின தரம் சொன்னாலும் இந்தப் பிள்ளை நாலுமணிக்கு எழும்ப மாட்டேங்குது"

- "ரி.வி அன்டனா வயரைக் கழட்டி எறிஞ்சுபோட்டன்"

- "இந்த வருஷம் தேர், தீர்த்தம் பாக்காட்டி ஒண்டும் குறைஞ்சு போயிட மாட்டா"

உணரத்தக்க, ஆக அண்மைய சூழலில், எங்களில் பெரும்பான்மையானவர்களின் ஒப்புதலுடன் நடைபெற்றுக் கழிந்த சிறுவர் அவப்பிரயோகத்தின் வெவ்வேறு அவதாரங்களுக்கான உதாரணங்கள் இவை!

கடந்த ஞாயிற்றுக்கிழமை தீவளாவிய ரீதியில் நடைபெற்று முடிந்த தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை எங்களது குழந்தைச்சூழலில் தந்து போயுள்ள அதிர்வுகள்,

கலைஞர் கருணாநிதி முள்ளிவாய்க்காலை ஒப்பிட்ட : "மழை விட்டும் தூவானம் நிற்காதது" போல.

வழக்கமாக ஓகஸ்ட் மாதப் பின்வாரத்தில் நடைபெறும் புலமைப்பரிசில் பரீட்சை இம்முறை மாற்றத்துடன், க.பொ.த உயர்தரப் பரீட்சை ஆரம்பமாவதற்கு முன்னரே முதல் வாரத்தில் முற்போடப்பட்டதை - புலமை அம்மாக்கள் அவ்வளவாக ரசிக்கவில்லை?

என்ன வகையில் எதிர்ப்பு காட்டுவதென்ற உபாயம் தெரியாததால் - ரியூசனுக்குப் போன பிள்ளை திரும்பி வரும்வரைக்குமான இடைவெளியில் வீதியோரத்தில் நடைபெறுகிற பரீட்சை தந்திரோபாயக் கலந்தாய்வு அரட்டைச் சமரில் களமாடியதோடு நின்று விட்டார்கள்.

"இன்னுமொரு இருபதுநாள் பின்னால் கிடைத்திருந்தால் பிள்ளையை மேலுமொரு 20 புள்ளிக்குத் தயார் செய்திருக்கலாம்"- வகையறா வீரப்பிரதாபங்கள் இந்தக் கலந்தாய்வு அரட்டையில் முக்கிய பேசுபொருளாக இருக்கும்.

மறுமுனையில், இந்த இடைப்பட்ட இருபது நாளுக்கு முன்னரே புலமைப்பரிசில் பரீட்சை நகர்த்தப்பட்டிருப்பதால்,

தனியார் வகுப்புக்கள் - விசேட செயலமர்வுகள் - எதிர்பார்க்கை வினாத்தாள்கள் - விரைவு அமர்வுகள் என்று கல்வி வியாபாரிகள் கோட்டைவிட்ட சில பல இலட்சம் ரூபாக்களுக்காக, பரீட்சை ஆணையாளருக்கு நெருக்குதல் கொடுக்கிற வகை தூண்டல்களும் தவறவில்லை.

ஊடக சந்திப்பில் பரீட்சை ஆணையாளர் சொன்னதைப் போல் "பரீட்சை பிள்ளைகளுக்கானது - பரீட்சையை முடித்துக்கொண்டு அவர்கள் இரண்டாம் தவணை விடுமுறையை முழுமையாக அனுபவிக்க வேண்டும். இந்தப் புலமைப்பரிசில் பரீட்சை, பிள்ளைகளைத் தவிர வேறெவருக்காகவுமல்ல.

இலங்கையில் தற்போதுள்ள கல்வி நடைமுறைகளுக்கமைவாக தனது பத்து வயதில், முதலாவது பொதுப்பரீட்சைக்கு தோற்றுகின்ற ஒருபிள்ளை - பரீட்சையை எதிர்கொள்ளத் தேவையான விடய அறிவினைக் கொண்டிருந்தாலோ அல்லது விடய அறிவுக்கேற்றதாகத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டாலோ கூட, பரீட்சை என்ற தெரிவுமுறையின் வில்லத்தனத்துக்கு எதிர்வினையாற்றுவதற்கு போதுமான உளவியல் முதிர்ச்சியைக் கொண்டிருப்பதேயில்லை.

மறுபுறமாக, புலமைப்பரிசில் பரீட்சை சாதாரணத் தெரிவுப்பரீட்சை மாதிரிகளில் ஒன்றுதானென்று கல்விக் கொள்கை வகுப்பாளர்களும் - கொள்கை நடைமுறைப்படுத்துனர்களும் சத்தியம் செய்யாத குறையாக வாதிட்டாலும் கூட, புலமைப்பரிசில் பரீட்சை இந்த தேசத்தின் முதலாவது போட்டிப்பரீட்சை என்பது மாற்றில்லாத உண்மை!

குடும்ப கௌரவத்தின் அடையாளமாகப் பிள்ளையை முன்னிறுத்தி - புலமைப்பரிசில் பரீட்சைக்குப் போட்டிப் பரீட்சை என்ற களேபரத் தெரிவுத் தன்மையை வாங்கிக்கொடுத்தது, பள்ளிக்கூடம் - அதிபர் - ஆசிரியர் - பெற்றோர் - பிள்ளை உள்ளிட்ட தேருநர் தரப்பினரே!

ஆசிரியர்களில் குறிப்பிட்ட ஒரு பகுதியினர் ஒருபடி மேலுயர்ந்து தனியார் வகுப்புக்கள் வழியில், இலவசக் கல்விக்கொள்கையைத் தண்டப்பிரயோகம் செய்து சாகடிக்காத குறையாகப் புலமைப்பரிசில் பரீட்சைக்கான போட்டிப் பரீட்சை அந்தஸ்து கிடைப்பதற்கான முன்னணி பிரயோகவியலாளர்களாகத் தங்களைப் பிரகடனம் செய்து - வெற்றியும் கண்டுள்ளனர்.

> **குடும்ப கௌரவத்தின் அடையாளமாகப் பிள்ளையை முன்னிறுத்தி – புலமைப்பரிசில் பரீட்சைக்குப் போட்டிப்பரீட்சை என்ற களேபரத் தெரிவுத்தன்மையை வாங்கிக்கொடுத்தது, பள்ளிக்கூடம் – அதிபர் – ஆசிரியர் – பெற்றோர் – பிள்ள உள்ளிட்ட தேருநர் தரப்பினரே!**

வன்னிமாவட்டத்தின் குறிப்பிட்ட பிரதேசமொன்றின் முன்னணிப் பாடசாலையொன்றில், பெறுபேறு வெளியாகிய பிறகு ஆசிரியருக்கு தங்க ஆபரணம் அணிவித்து அழகுபார்க்கும் வழக்கம் இன்று முள்ளதாயின், இலவசக்கல்வி செத்தாலென்ன? சி டபிள்யு. டபிள்யு கன்னங்கரா பிழைக்கத் தெரியாத பேதையில்லையா?

புலமைப்பரிசில் பரீட்சையின் வெட்டுப்புள்ளி மூலம் குறித்ததொரு மாவட்டத்தில் தெரிவுசெய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கை - ஏறத்தாழ முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட ஒன்று.

- குறிப்பிட்ட மாவட்டத்தின் பிரபல பாடசாலைகளின் எண்ணிக்கை

- தரம் ஆறுக்கான வகுப்புக்கள் எண்ணிக்கை

- அனுமதி பெறவுள்ள மாணவர் எண்ணிக்கை

- மாவட்டத்தின் பொருளாதார அடைவு

- தனிநபர் வருமானச்சுட்டி போன்ற சில காரணிகள், வெட்டுப்புள்ளிக்கு மேல் பெறும் மாணவர் எண்ணிக்கையை முன்கூட்டியே தீர்மானிக்கின்றது.

எளிமையாகச் சொல்வதானால், அனுமதிக்கும் - உதவிப்பணம் வழங்கவும் தேவைப்படுகிற மாணவர் எண்ணிக்கைக்கு கீழுள்ள உடனடிப்புள்ளியை வெட்டுப்புள்ளியாகத் தீர்மானிப்பதன் மூலம் இந்த எண்ணிக்கை கிட்டத்தட்ட ஒரு எதிர்வுகூறலை ஒத்திருக்கும்.

ஆனால் துரதிஷ்டவசமாக, தீர்மானிக்கப்பட்ட வெட்டுப்புள்ளிக்கு அதிகமாக புள்ளிகளைப் பெற்ற குழந்தைகளையே "சித்திபெற்றவர்கள்" என்ற குடையின் கீழ் கொண்டாடித் தீர்க்கிறது இந்த ஆழிசூழ் சிறுதீவு!

வெட்டுப்புள்ளி விடயம் இங்ஙனமிருக்க, பிரபல பாடசாலைகளுக்கு அனுமதி பெறுவதற்கான விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு வெட்டுப்புள்ளியை விட இன்னுமொரு பத்தோ - பதினைந்து புள்ளி மேலதிகமாக பிரபல பாடசாலை அனுமதிப்புள்ளி தீர்மானிக்கப்படுகின்றது. வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றிருந்தும் கூட, மாதாந்த அரச உதவிப்பணம் பெறுவதோடு மட்டும் திருப்தியடைந்து கொண்டு, நகரின் பிரபல பாடசாலைகளில் அனுமதியைத் தவறவிடும் பிள்ளைகள் தரப்பொன்றும் எம் நடுவிலிருக்கின்றார்கள். சித்தியடைந்த பிறகும் இன்னொருமுறை தரப்படுத்தலுக்கு உள்ளாகிற பிள்ளைகளும் சேர்ந்து மன உளைச்சலுக்கு ஆளாகின்ற பரீட்சை முறைக்கு எவ்வளவு அழகியதொரு பெயர் - "புலமை"!

வெட்டுப்புள்ளி என்கிற கோடு பற்றி கவலைப்படாமல், பரீட்சைத் திணைக்களமும் - மாகாணங்களும் - வலயங்களும் அடிக்கடி பேச்சளவில் கணிப்பிடுகிற இன்னொரு வகைப்படுத்தலுமுண்டு :- "நூறு புள்ளிகளுக்கு மேல்"

பத்து வயதுக் குழந்தையொன்று, நீகுழந்தையல்லவென்று வலுக்கட்டாயமாகத் தட்டி முதிர்த்தப்படுவ்தற்கு வலுச்சேரலாக அமையும் வெட்டுப் புள்ளி முறையோடு ஒப்பிடுகையில், பரீட்சை உளவியலைப் புரிந்து கொள்ள முடியாத வயதில்மொத்தப்புள்ளியான இருநூறில் பாதிப்புள்ளியான நூற்றினை தொட்டவர்கள் என்ற அடைவு ஓரளவு ஏற்றுக்கொள்ளத்தக்கது.

'நூறு புள்ளிகளை ' அல்லது 'நூற்றுக்கு மேல்' என்ற எல்லையை கல்விக்கொள்கைகள் ஊக்குவித்தாலும், அதெல்லாமிருக்க நூற்றுக்கு மேல் பெற்றாலே போதுமென்று பிள்ளைகளை உபதேசித்த அதிபரை அடிக்கப் பாய்ந்த பெற்றோர்களுமிருக்கிறார்கள்.

(16ஆம் பக்கம் பார்க்க)

எதிரொலி
Ethiroli

அம்பலம் பதிப்பகம்,
இல. 241, கைதடி – மானிப்பாய் வீதி,
உடுவில், யாழ்ப்பாணம்.
ethirolimedia@gmail.com, 0212243818

## தேவையில்லா ஆணிகள்

எது தேவையோ அதில் அலட்சியமும், எது தேவையில்லையோ அதில் அக்கறையும், அவசரமும் காட்டுவது தமிழ் அரசியல்வாதிகளுக்குப் புதிதல்ல. காணாமலாக்கப்பட்டோரின் பிரச்சினைக்காக மக்கள் 500 நாட்களைக் கடந்து போராடும் போதும், பல வருடங்களாக அரசியல் கைதிகள் காரணமின்றிச் சிறைகளில் அடைத்து வைக்கப்படாமல் விடுவிக்கக் கோரி உண்ணாவிரதங்கள் இருக்கும் போது, தமிழ் அரசியல்வாதிகளுக்கு நவதுவராங்களும் அடைத்து விடும். அப்போது அவர்கள் ஏதுமுணராத சடப்பொருளாகி விடுவார்கள். பின்னர் தங்கள் பதவிநலன், கட்சி நலன் சார்ந்த பஞ்சாயத்துக்களின் போது, கோமா நிலையில் இருந்து மீண்டு, சண்டித்தனத்தில் இறங்கி விடுவார்கள்.

அப்படி தமிழ் அரசியல்வாதிகள் அண்மையில் பிடுங்கிய தேவையில்லாத ஆணிகள் நிறைய.

மாகாண அமைச்சர்களை நீக்க முதலமைச்சருக்கு அதிகாரமில்லை என்ற தீர்ப்பைப் பெற்றுக் கொடுத்த டெனீஸ்வரனின் வழக்குத் தொடக்கம், மாநகர சபை எல்லைக்குள் வசிக்காதமையால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த மணிவண்ணன் யாழ். மாநகர சபை உறுப்பினராகச் செயற்பட விதிக்கப்பட்ட இடைக்காலத் தடை வரை இந்தத் தேவையில்லாத ஆணிகளின் பட்டியல் தொடர்கின்றது.

ஏற்கனவே மாகாண சபையும், மாநகரசபையும் இருக்கின்ற குழப்பத்துக்குள் இப்படிப் புதிய குழப்பங்களை உருவாக்கி அவற்றைச் செயற்பட விடாமல் முடக்குவது சிங்கள அரசுக்கும் உவப்பானதாகவே இருக்கின்றது. அதனால் தான் மற்றைய அவசரமான, மக்களுக்கு அவசியமான, வழக்குகளில் காட்டாத அக்கறையை இப்படிப்பட்ட அரசியல்ரீதியான வழக்குகளில் காட்டுகின்றது. வீட்டைக் கொளுத்த நினைக்கும் சிங்கள ராசாக்களுக்கு, தமிழ் அரசியல்வாதிகள் நெருப்பெடுத்துக் கொடுக்கும் மந்திரி வேலையைக் கனகச்சிதமாகச் செய்து வருகின்றனர்.

மணிவண்ணன் தன் இருப்பிடம் தொடர்பான தவறான தகவல்களை வழங்கியதாகக் கூறியே இந்த வழக்கைக் கூட்டமைப்புத் தொடர்ந்திருந்தது. அப்படித் தவறான தகவல்களை வழங்கியிருந்தால், அது பிழையான முன்னுதாரணமே. ஆனால் மணிவண்ணன் மாநகரசபைக்குட்பட்ட பகுதியில் தன் அலுவலகத்தை கடந்த சில வருடங்களாக நடத்தி வருவது உள்ளங்கை நெல்லிக்கனி. எனவே சட்டபூர்வமான ஆவணங்களில் சில தவறுகள் இருப்பினும், மாநகரசபை எல்லைக்குள் மணிவண்ணனின் ஏதோவொரு இருப்பிடம் இருப்பது உண்மையே. ஆனால் சட்டபூர்வமான ஆவணங்களில் உள்ள ஓட்டையைத் தூக்கிப் பிடித்து தமது அரசியல் பழிவாங்கலுக்கான இடமாக மாநகர சபையை ஆக்குவதுதான் தவறானது.

மாநகரசபையில் எத்தனையோ மக்கள் பணிகளை அவசரமாகச் செய்து முடிக்க வேண்டிய தேவையுள்ளது. அதையெல்லாம் விட்டு விட்டு, இப்படி முட்டையில் மயிர் பிடுங்கும் வழக்குகளைப் போட்டு, குழப்பங்களை நீடிக்கச் செய்வதற்குப் பெயர் அரசியல் அல்ல. அதற்குப் பெயர் வேறு. இனியாவது இந்தக் காழ்ப்புணர்ச்சி அரசியலை விடுத்து மக்கள் பணியில் கவனம் கொள்ளுங்கள்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"



# வெளியில் சென்ற பாம்பைப் பிடித்து வீட்டுக்குள் விட்ட கதையாக

● ஜெரா

வேலியில் போன ஓணானைப் பிடித்து சட்டைக்குள் விட்ட கதையாக என்ற பழமொழியை கேள்விப்பட்டிருப்பீர்கள். தமிழர்களின் சில செயற்பாடுகள் அப்படி அமைந்திருக்கின்றன.

1983 ஆம் ஆண்டு கலவரத்தைத் தொடர்ந்து தென்னிலங்கை அரசினாலும், அது ஏவிய அரச பயங்கரவாதத்தினாலும் நாடுமுழுவதுமிருந்த தமிழர்கள் மிகுந்த அவலத்துக்குள்ளானார்கள். அப்போது இதற்கு எதிராக உருவாகியிருந்த ஆயுத இயங்கங்கள் தவிர, தமக்கு பாதுகாப்பு தர இந்தியா நேரடியாகக் களத்தில் இறங்க வேண்டும் என பிரார்த்தித்தனர். அந்த மன்றாட்டத்தின் விளைவாக விரைவாகவே இந்தியா யாழ். மண்ணில் கால்பதித்தது. வெற்றித்திலகமிட்டு, வாழ்த்துப்பாடி, ஆலாத்தி தமிழர்கள் வரவேற்றனர். அவ்வாறு தமிழர்களின் பெருவிருப்போடு ஈழத்தில் கால்பதித்த இந்தியப் படைகள் வெகுவிரைவிலேயே தன் கோர முகத்தைக் காட்டியது. வல்வெட்டித்துறை, யாழ். போதனாவைத்திய சாலை, கலட்டி சந்தி, முள்ளியவளை என தமிழர்களைக் கொன்று குவித்தது. ஆயிரக்கணக்கான பெண்களைப் பாலியல் வன்புணர்வுக்குள்ளாக்கியது.

இதன்பின்னர் ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் இரத்தம் சிந்தியே அந்தக் கொடூர இராணுவத்தை வெளியேற்றவேண்டிய நிலை ஏற்பட்டது.

இதேபோலத்தான் இப்போதும், போர் முடிவின் பின்னர், இராணுவம் அடாத்தாக ஆக்கிரமித்திருக்கும் தமிழர்களது காணிகளை விடுவிக்கக்கோரி போராட்டங்கள் ஆங்காங்கே இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. பல வருடங்களாக நீடித்த அப்போராட்டங்களின் விளைவாக சில இடங்கள் விடுவிக்கப்பட்டுமிருக்கின்றன.

ஆனால் இப்போது தமிழர்களின் அறிவுசார்ந்த சமூகம் எனச் சொல்லப்படும் யாழ். பல்கலைக்கழக சமூகமே, கோட்டை பகுதியை கலாசார சீரழிவுகளில் இருந்து பாதுகாப்பதற்காகப் பொலிஸ் பாதுகாப்பை கோரியிருக்கின்றது. அதன் விளைவாக இராணுவமும் அதற்குள் நுழையவும், முகாம்களை நிறுவவும் தயாராகிநிற்கிறது. இவ்விடத்தில் நாம் பொலிஸ் பாதுகாப்பைத்தான் கோரினோமே தவிர, இராணுவத்தை அல்ல என வாதிடலாம். ஆனால் கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் பார்த்தால் இராணுவத்துக்கும், பொலிஸாருக்கும் பெரியளவு வித்தியாசம் இருப்பதில்லை. இருதரப்பும் தமிழர்களை போட்டியிட்டுச் சுட்டுக் கொன்றவர்கள்தான்.

இந்த அழைப்பை சாதாரணமானதொன்றாக பார்த்துவிட்டு கடந்துபோக முடியாது. கடந்த போர் முடிந்த காலத்திலிருந்து, வடக்குக்கு வரும் வெளிநாட்டு தூதுவர்களும், அரசியல் தலைவர்களும் வடக்கில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும், வெளியேற்றப்படும் என வலியுறுத்தி வருகின்றனர். அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

அதன் காரணமாக கடந்த வருடமே ஒருவிடயம் சலசலத்தது. அதாவது யாழ். நகரை அண்மித்த பகுதியில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தை கோட்டை பகுதிக்குள் கொண்டு சென்றால், நகரை சூழ காணப்படும் இராணுவ முகாம்களின் எண்ணிக்கை குறையும் என்பதே அவ்விடயம்.

இந்த விடயம் சலசலப்பு அடங்கும் முன்னரேயே தொல்லியல் திணைக்களத்தின் அனுமதியுடன் ஆரியகுளம் நாகவிகாரை பிக்கு ஒருவரின் மரணச் சடங்கு பெரும் சர்ச்சைகளுக்கு மத்தியில் இடம் பெற்று முடிந்தது.

இந்தச் சம்பவங்கள் முன்திட்டமிடப்படாதவையாகப் பார்வைக்குத் தெரிந்தாலும், அவற்றுக்குப்பின்னால் தொடர்ச்சியான அறாத்தன்மை இருப்பதைக் காணலாம்.

யாழ்ப்பாணம் என்றவுடன் யாவருக்கும் முதலில் நினைவுக்கு வருவது, அது தமிழர்களின் நகரம் என்பதுதான். அத்தகைய தமிழர்களது நகரின் மிகமுக்கிய அடையாளமும், நகரின் இதயமாகவும் யாழ். கோட்டையே விளங்குகின்றது. ஏ 9 சாலை முறியும் இடமும், யாழ்ப்பாணத்தைச் சூழவுள்ள அனைத்துத் தீவுகளையும் இணைக்கும் முனையாகவும் இக்கோட்டை காணப்படுகின்றது. அத்துடன் இந்துமா கடலையும், அதற்கு அழகும், அரசியல் ஈர்ப்பும் கொடுக்கும் தீவுக்கூட்டங்களையும் இலகுவாக தொடர்புபடுத்தும் மையமாகவும் இக்கோட்டை விளங்குகின்றது. இதனைக் காரணமாகக் கொண்டே, போத்துக்கேயர்கள், ஒல்லாந்தர்கள், பிரித்தானியர்கள் இக்கோட்டையை தமது பிரதான நிர்வாகத் தலைமைப்பீடமாக மாற்றினார்கள். இந்த முக்கியத்துவம் ஈழ விடுதலைப் போரில் பாரிய திருப்பங்களையும் ஏற்படுத்தியிருக்கிறது. ஈழ விடுதலைப் போரில் தமிழர்கள் கோட்டையைக் கைப்பற்றுவது இன விடுதலையின் அடையாளமாகவும், சிங்கள இராணுவம் இக்கோட்டையைக் கைப்பற்றுவது தமிழர்களை அடிமைப்படுத்துவதன் அடையாளமாகவும் அரசியல் அர்த்தம் பெற்றதைக் கடந்த காலங்களின் பார்த்திருக்கின்றோம்.


இவ்வாறான கோட்டையை கடந்த 2010 ஆம் ஆண்டு நெதர்லாந்து அரசாங்கத்தின் மரபுரிமைகள் காப்பிற்கான அமைச்சு மீள் புனருத்தானம் செய்யத் தொடங்கியது. பாரியளவு நிதிபங்களிப்பின் மூலம் ஆரம்பமான இத்திட்டம், கோட்டையின் ஆரம்பத்தோற்றத்தை அப்படியே மீளக்கொண்டு வருதலை இலக்காகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் மூலம் காலனியாதிக்க காலத்தில் தாம் எந்தத் தேசமெல்லாம் அபகரித்து, கோட்டை கொத்தணிகளை அமைத்து ஆட்சி புரிந்தோமோ அந்தத் தேசங்களிலெல்லாம் அதற்கான வரலாற்றுத் தடயங்களை விட்டுச் செல்வது என்பதை நெதர்லாந்து அரசு நோக்கமாக வைத்திருந்தது. இப்போது நிறைவுக்கு வந்திருக்கும் கோட்டை தொல்லியல் ஆய்வின் பிரதான நோக்கம்கூட போர்த்துக்கேயரால் கோட்டை பகுதியில் கட்டப்பட்டிருந்த (போரில் அழிந்துவிட்டது) தேவாலயத்தை மீளக் கண்டுபிடிக்கவே மேற்கொள்ளப்பட்டதாகச் சொல்லப்பட்டது.

அந்த ஆய்வு நடைபெற்ற சமகாலத்திலேயே யாழ். கோட்டை பகுதி தொல்லியல் திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ் சென்றது. யாழ். மாநாகர சபையின் எந்தவித நடவடிக்கையும் கோட்டை பகுதிக்குள் இடம்பெறாதவண்ணம் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது.

இவ்விடத்தில் இலங்கையின் தொல்லியல் துறைகுறித்தும் தமிழர்கள் அவதானம் கொண்டிருப்பது நன்மை பயக்கும். தொல்லியல் என்பது வரலாற்றெழுத்தியலின் கூரிய வாளாக மாறிவிட்டது.

(08ஆம் பக்கம் பார்க்க)

# அவதானியின் அவதூறு



## அவைத் தலைவரின் மறுப்பு

தங்களது வார இதழின் 25-31 ஜூலை 2018 ஆம் திகதிய வெளியீட்டில் 'அவதானி' என்பவர் எழுதிய 'தமிழரசுக் கட்சியில் பனிப்போர்' என்ற கட்டுரையில் எனது கௌரவத்தையும் சுயமரியாதையையும் பாதிக்கும் வகையிலும் எனக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் விதத்தில் இரண்டு விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

கடந்த 16.07.2018ஆம் திகதிய விசேட அமர்வு பற்றி "19 உறுப்பினர்கள் கலந்துகொண்டிராத இந்த சிறப்பு அமர்வுக்கு" எனக் குறிப்பிட்டிருப்பதன் மூலம் இந்தக் கட்டுரையாளரின் மாகாண சபை சார்ந்த சட்டம், விதிகள் என்பன பற்றிய அறிவிலித்தனம் புலப்படும். இதற்கு மேல் இதுபற்றி கூறவேண்டியதில்லை.

ஆனால் "காசைக் கரியாக்குவதில் அவருக்கு நிகர் அவரேதான். கூட்டுறவுத் தலைவராக இருக்கையில் கோடிக்கணக்காக கொண்டுபோய் பிரமுகர வங்கியில் கொட்டினார். தங்க முலாம் பூசப்பட்ட சான்றிதழ் மட்டுமே இப்போது மிச்சமிருப்பதாகக் கேள்வி" என்றுள்ள கருத்து மிகவும் ஆட்சேபகரமானது.

தங்கமுலாம் அல்ல என்ன முலாம் பூசிய சான்றிதழையும் நான் பெற்றிருக்கவில்லை என்று அறுதியிட்டு கூறுவதோடு அப்படி நான்பெற்றதாகக்கட்டுரையாளர் கூறுவாராகில் அதனை உடனடியாக நிரூபிக்கும்படி சவால் விடுவிக்கின்றேன்.

யாழ்.மாவட்ட கிராமிய வங்கி ஒரு கூட்டுறவுக் கட்டமைப்பு ஆகும். ஆதன் செயற்பாடுகள் யாவும் அதன் இயக்குநர் சபையால் கூட்டுறவுத் திணக்கள அதிகாரிகளினதும்பங்கேற்புடனும்மேற்பார்வையுடனும் செயற்படும் ஒன்று. அவ்வாறு இருக்க அதீத காழ்ப்புணர்ச்சி காரணமாக என்னை தனிமைப்படுத்தி அவமானப்படுத்த எனது அரசியல் எதிரிகள் கடந்த 18 வருடமாக இதையே திரும்பத்திரும்ப கூறிவருகின்றனர்.

உண்மையில் இலங்கை மத்திய வங்கி உருவாக்கிய இலங்கை சேமிப்பு வங்கி முழு முதலுக்குமான சான்றிதழை யாழ். மாவட்ட கிராமிய வங்கிக்கு வழங்கியுள்ளதுடன் 2009 நவம்பர் மாத்தில் இருந்து 5 வீத வட்டியும் வழங்கி வருகின்றது. முதலும் வட்டியும் 2017ஆம் ஆண்டுக்குப் பின்னர் மீளளிக்கப்படும் என்றும் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

இந்த விடயத்தில் கௌரவ முதலமைச்சருக்கும் நான் எழுதிய 26.02.2016ஆம் திகதிய கடிதத்தின் ஒரு பந்தி கீழே தரப்படுகின்றது.

"நான் தலைவராக இருக்கும் போது இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற பிரமுக வங்கியிலேயே வடக்கு, கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் என்ஈ.பி. V/GEN/5E/44 இலக்கம் கொண்ட 1999.05.31 திகதிய சுற்றறிக்கையின் 3ஆம் பந்திக்கு அமையவே இந்த முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டன. பிரமுக வங்கி இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்றதாகும். பிரமுக வங்கி உட்பட வேறு வங்கிகளிலும் வட்டி விகித கூறுவிலை கோரப்பட்டு பிரமுக வங்கி கூடிய வட்டி வீதம் வழங்குவதாக கூறுவிலை சமர்ப்பித்ததாலேயே அந்த வங்கி தெரிவுசெய்யப்பட்டது."

"இச்சுற்றறிக்கை சமாசத்தின் இயக்குநர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள அதிகாரிகள் சமுகமளித்திருந்த இயக்குநர் சபைக் கூட்டங்களிலேயே தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. தனி ஒருவனாக நான் எடுத்த முடிவல்ல."

இதேபோன்று இச்சமாசத்தில் அண்மையில் இடம் பெற்ற சிமெந்து விற்பனை தொடர்பான ஒரு கோடி ரூபாவுக்கு மேலான ஊழல் சம்பந்தமான மகளிர் விவகார கூட்டுறவு அமைச்சருக்கும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கும் பிரதியுடன் மகளிர் விவகார கூட்டுறவு அமைச்சின் செயலாளருக்கு கடந்த 06.07.2018 எழுதிய பந்தி அப்படியே தரப்படுகின்றது.

"அதே கடித்தத்தின் 3ஆவது பந்தியில் பிரமுக வங்கி ஹற்றன் நசனல் வங்கி, செலான் வங்கி போன்றவை உயர் வட்டி வீதங்களை வைப்புகளுக்கு வழங்கி வருகின்றன என்று உள்ளது. இதற்கமைய வட்டி வீதம் பற்றி கூறுவிலை கோரப்பட்டு கூடுதல் வட்டியை பிரமுக வங்கி வழங்குவதாகத் தெரிவித்தமையால் கூட்டுறவு திணைக்கள அதிகாரிகள் சமுகமளித்திருந்த இயக்குநர் சபைக் கூட்டங்களிலேயே சமாசத்தின் முதலீட்டுத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தன. ஆயினும் அப்போதிருந்த இயக்குநர் சபை தன்னிச்சையாகச் செயற்பட்டு தவறாக முதலீடு செய்தது போன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்தி திணைக்களத்தினர் தமது தவறை மறைக்கும் முயற்சிகளைத் தொடர்ந்து வருவது காணப்படுகின்றது. மேலும் யாழ்.மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசம் மட்டும்தான் இவ்வாறு முதலீடு செய்தது என்ற தோற்றத்தையும் ஏற்படுத்த முயலப்பட்டுள்ளது. ஆனால் நாடு பூராகவும் உள்ள 24 கிராமிய வங்கிகளின் சமாசங்கள் பிரமுக வங்கின் கூட்டுறவுத் திணைக்களத்தின் ஆலோசனையின் பேரில் முதலீடு செய்தமை பற்றிய தகவல் திட்டமிட்டு மறைக்கப்பட்டு வருகின்றது.

மேலும் பிரமுக வங்கியின் செயற்பாடுகள் மத்திய வங்கியினால் இடைநிறுத்தப்பட்டதும் அது சம்பந்தமாக பொருத்தமான அறிவித்தலை திணைக்களம் அங்கத்துவ சங்கங்களுக்கு வழங்கியிருக்கவேண்டும். இவைகள் யாவுமே கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டவை என்பதும் இவற்றுக்கு வேறு தனியான சட்டபூர்வ அடையாளம் கொள்ள முடியாது என்பதும் கருத்தில் எடுக்கப்பட்டு அட்டுறு முறையில் 5 வீதத்துக்கு மேலாக வட்டியை அங்கத்துவ சங்கங்கள் கணிப்பதைத் தவிர்க்கும் வகையில் ஆலோசனை வழங்கியிருக்கவேண்டும்.

இவ்வாறு திணைக்களத் தவறுகளை மறைப்பதற்கு முயலப்படுது மேலும் தொடரமுடியாது என்பது வலிறுத்தப்படுவது மட்டுமன்றி மோசடியை மறைக்க இதனுள் பாதுகாப்புத் தேடவும் முடியாது."

இந்தக் கட்டுரையில் மேலே குறிப்பிட்ட கருத்தின் மூலம் இந்த முதலீடு முழுவதும் இழக்கப்பட்டுவிட்டதாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் நான் இங்கே குறிப்பிட்டவாறு இந்த முதலீட்டுத் தொகை எதுவும் இழக்கப்படவில்லை என்பது தொடர்பாக சம்பந்தப்பட்ட சங்கங்களுக்கு மீளளிக்கப்படும் நடவடிக்கை தற்போது நடைபெறுவதைச் சுட்டிக்காட்டலாம். உதாரணமாக தமது சங்கத்துக்கான மீளளிப்பு கிடைக்கப்பெற்றதை உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் நேரடியாக உறுதி செய்துள்ளார். அத்துடன் பண்டத்தரிப்பு மற்றும் நீர்வேலி, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஏனைய பல சங்கங்களுக்கும் மீளளிப்புகள் வழங்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். ஆகவே முதல் இழப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை என்பது வலியுறுத்தப்படுகின்றது.

இவை யாவும்இக்கட்டுரையாளரின்அரைவேக்காட்டுத் தனம் மட்டுமன்றி திட்டமிட்ட காழ்புணர்ச்சியுடன் கூடிய எமக்கு அபகீர்த்தி ஏற்படுத்தக்கூடியது என்பது தங்களுக்குத் தெளிவாகும் என திடமாக நம்புகின்றேன். எனவே இந்த அறிக்கையை முழுமையாகப் பிரசுரித்து விடயத்தைத் தெளிவுபடுத்துமாறு கோருகின்றேன்.

இக்கட்டுரையில் உள்ள நிர்வாக மற்றும் சட்ட அறிவிலித்தன்மையான வார்த்தைகளுக்கும் கருத்துக்களுக்கும் பதிலிறுத்து எனது நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை.

**- சீ.வீ.கே.சிவஞானம்**
**அவைத்தலைவர், வடக்கு மாகாண சபை.**

# குண்டக்க மண்டக்க



## கைப்பிள்ளை பதில்கள்

**கேள்வி: என் மகனுக்குத் திருமணம் செய்து வைக்கலாம் என்று எண்ணினோம். நிலா மாதிரிப் பெண் பாருங்கள் என்றான். அது என்ன நிலா போல?**

**ஆர். சிவகுரு, வவுனியா**

**பதில்:** இது கூடப் புரியாத அசட்டு அப்பாவியாக இருக்கிறீரே. தினமும் இரவில் வந்திட்டு, காலையில் போயிடனும்.

**கேள்வி: ஒரு நாள் வேலைக்காரி இல்லைன்னா கூட வீடே சரியில்லையே. உங்க வீட்ல எப்படி?**

**இராமசாமி செந்தில், கண்டி**

**பதில் :** இது பரவாயில்லை சார். எனக்கு மனசே சரியில்லாமப் போயிருதே.

**கேள்வி: சத்தியவானை எமதர்மராஜாவிடம் இருந்து சாவித்திரி போராடி மீட்டாளாமே உண்மையா?**

**எஸ். மலர்வேந்தன் ,கொழும்பு**

**பதில்:** ங்.. கொய்யால ஒரு புருஷனை பொண்டாட்டிகிட்ட இருந்து எமதர்மனால கூட காப்பாற்ற முடியாதுன்னு நல்லாவே புரியுது.

**கேள்வி: இப்போது வரும் திரைப்படங்களின் பெயர்கள் கொஞ்சம் நீளமாகவும் வித்தியாசமாகவும் இருக்கிறதே?**

**ஏ. மதுமிதா, கிளிநொச்சி**

**பதில்:** "ஹலோ நான் பேய் பேசுறேன்" என்று ஒரு படம். எதுக்கு இவ்வளவு நீளமா? சுருக்கமா "என்னங்க" என்று வச்சிருக்கலாம் தான்.

**கேள்வி: லோன் வாங்கிக் கட்ட முடியாமல் திணறியதுண்டா?**

**வி. சுதர்சன் ,சாங்கானை**

**பதில்:** மாதத் தவணை கட்ட முடியாததால என் காரப் பிடுங்கிக்கொண்டு போனபோது தான் யோசித்தேன். இப்பிடி செய்வாங்க எண்டு தெரிஞ்சிருந்தா என்ர கல்யாணத்துக்கும் நான் லோன் வாங்கியிருப்பேனே.

வீட்டில் வெட்டியாக இருந்து எதிரொலியை வாசித்து விட்டு, முகட்டைப் பார்த்துக்கொண்டிருக்கிறீர்களா? இப்படி இருக்கும் போது உங்கள் மூளைக்குள் குறுகுறுவென்று ஏதேதோ கேள்விகளெல்லாம் எழுமே. எல்லாவற்றையும் உடனே எழுதி அனுப்புங்கள். எங்கள் கைப்பிள்ளை அவற்றுக்கெல்லாம் பதில் சொல்லி உங்களைப் கலகலப்பூட்டக் காத்திருக்கிறார். ம்ம்...! கேள்விகள் புறப்படட்டும்!!!

## சொல்லுங்கோ டொக்டர்!

**மருத்துவ ரீதியாக உங்களுக்கு எழும் சந்தேகங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள். அவை தொடர்பில் உரிய மருத்துவர்களின் எதிரொலியில் பிரசுரமாகும்.உங்கள் சுயவிபரம் இரகசியமாகப் பேணப்பட வேண்டுமாயின் அதனை மறக்காமல் குறிப்பிடுங்கள். நோயற்ற வாழ்வுக்கு கேளுங்கள். பதிலோடு பயனும் பெறுங்கள்.**



# அவதூறல்ல ஆதாரங்கள் உண்டு!

வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் கௌரவ சி.வி.கே சிவஞானம் அவர்கள் 'அவதானியின்' கட்டுரைக்கு அனுப்பி வைத்துள்ள எதிர்வினை தொடர்பில், குறித்த கட்டுரையாளரிடமும்,ஏனைய மூலங்களிடமும் எதிரொலி பெற்றுக்கொண்ட ஆதாரங்கள், தகவல்களின் அடிப்படையில் சில விளக்கங்கள் முன்வைக்கப்படுகின்றன. இதில் தெரிவிக்கப்படும் கருத்துக்களுக்கான ஆதாரங்களை அவைத்தலைவர் கோரினால், அவற்றை வழங்க 'எதிரொலி' தயராக உள்ளது என்பதையும் தெரியப்படுத்துகின்றோம்.

- அவைத்தலைவர் குறிப்பிட்ட 1999 ஆம் ஆண்டு மே மாதம் 31 திகதி வடகிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள ஆணையாளர் க.சண்முகலிங்கம் அனுப்பிய கடிதத்தை அவர் முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லைப் போல உள்ளது. அதில் இலக்கம் 3 இல் "மேல் மிகை நிதி" என்ற உப தலைப்பில் "சமாசத்தால் பெறப்பட்ட வைப்புக்களில் இருந்து உறுப்புரிமைச் சங்கங்களுக்கு கடன் வழங்கிய பின்னரும் எஞ்சியுள்ள நிதியை வணிக வங்கிகளில் கூடுதலான வட்டி பெறக்கூடிய வகையில் முதலீடு செய்யலாம்" என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் என்ன நடந்தது? குறித்த கடிதத்துக்கு மாறாக அங்கத்துவச் சங்கங்களின் சுமார் முப்பது மில்லியன் ரூபாவும் மொத்தமாக சி.வி.கே. சிவஞானம் அவர்களால் 'பிரமுக' வங்கியில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

இச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் இறுதி விடயம் இவ்வாறு அமைகிறது. "துணைவிதியில் திருத்தங்களை மேற்கொள்ளலாம். துணைவிதி திருத்த வரவினை எனது முன் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கும் படி வேண்டுகிறேன்"

. துணை விதிகளில் திருத்தங்களை மேற்கொள்ளலாம் என்பதன் அர்த்தம் பொதுச் சபையைக் கூட்டி இத் திருத்தங்கள் செய்யவேண்டும் என்பதே. பொதுச் சபையைக் கூட்டாமல் துணைவிதிகளைத் திருத்த முடியாது. ஆனால் அவ்வாறு எதவும் நடைபெற வில்லை.இதன் மூலம் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் ஆகிய க.சண்முகலிங்கத்தின் அறிவுறுத்தல் தன்னிச்சையாக மீறப்பட்டுள்ளதாகவே கருத வேண்டியுள்ளது.

- 2009 ஆம் ஆண்டுக்குப் பின் ஐந்து வீத வட்டி வழங்கப்பட்டுள்ளதாக தாங்கள் குறிப்பிட்டிருப்பது உண்மையே. ஆயினும் இடைப்பட்ட ஏழு வருடங்களுக்கும் இழக்கப்பட்ட வட்டிக்கணக்கை தாங்கள் கவனத்தில் கொள்ளாதது ஏன்?

யாழ். மாநகரசபை ஆணையாளர், வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் போன்ற உயர் பதவிகளை வகித்த / வகிக்கின்ற ஒருவர் இவ் விடயத்தை அலட்சியம் செய்தமை குறித்து வருந்துகிறோம்.

- உண்மையில் யாழ்ப்பாணத்தில் கிளைகளைக் கொண்டிராத , அந்தக்காலகட்டத்தில் தரைவழிப் பாதையூடாகப் போகமுடியாத 'பிரமுக' வங்கியில் 25 சங்கங்களினதும் மொத்தத் தொகையும் முதலிடப்பட்டுள்ளது. இந்த வகையில் 2017 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 திகதி வரை மொத்த வட்டியிழப்பு 10 கோடியே 77 இலட்சத்து 96 ஆறாயிரத்து 406.64 ரூபா ஆகும். இதில் சங்கங்களுக்கு ஏற்பட்ட நட்டம் 5 கோடி 46 இலட்சத்து 20 ஆயிரத்து 421 .45 ஆகும். மிகுதி சமாசத் துக்கு ஏற்பட்ட நஷ்டம். இதற்கான ஆதாரமான புள்ளி விபரங்கள் எம்மிடம் உள்ளன.

> **"நாங்கள் அறிந்த வரையில் அமைச்சர்களை நியமிக்கும் தற்துணிவு அதிகாரம் முதலமைச்சருக்கே உண்டு. கூட்டுறவுத்துறையை பொ. ஐங்கரநேசனிடம் ஒப்படைக்கத் தீர்மானித்த சமயம் அந்த அமைச்சு தமிழரசுக் கட்சிக்கே உரியது என அவைத்தலைவர், முதலமைச்சருக்கு கடிதம் எழுதியது என்ன 'தனம்' என்பதை மக்கள் தீர்மானிக்கட்டும்."**

மிகச்சிரமமெடுத்து விமான மூலமோ, கப்பல் மூலமோ கொண்டு சென்று முதலிட்டு இந்த நட்டம் யாழ். குடா நாட்டு மக்களுக்கும், கூட்டுறவுத் துறைக்கும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- கட்டுரையாளரின் மாகாணசபை சார்ந்த சட்டம், விதிகள் என்பன பற்றிய அறிவிலித்தனம் பற்றிக் அவைத் தலைவர் குறிப்பிட்டுள்ளார். ஆறை விட இரண்டு தொகையில் கூடியது என்று மாகாண சபை எமது மக்களுக்கு கற்பிக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் மீது நம்பிக்கையில்லையெனவும் புதிய எதிர்க்கட்சித் தலைவராக ஜெயதிலகாவை நியமியுங்கள் என்றும் ஆறுபேர் கையொப்பம் இட்டு அவரிடம் சமர்ப்பித்த கடிதம் அதனை எடுத்துக் காட்டுகிறது. ஏனெனில் குறித்த 6 பேரின் கோரிக்கையை தவராசா என்னும் ஒற்றை நபருக்காக அவைத்தலைவர் உதாசீனம் செய்திருந்தார்.

- நாங்கள் அறிந்த வரையில் அமைச்சர்களை நியமிக்கும் தற்துணிவு அதிகாரம் முதலமைச்சருக்கே உண்டு. கூட்டுறவுத்துறையை பொ. ஐங்கரநேசனிடம் ஒப்படைக்க தீர்மானித்த சமயம் அந்த அமைச்சு தமிழரசுக் கட்சிக்கே உரியது என அவைத் தலைவர், முதலமைச்சருக்குக் கடிதம் எழுதியது என்ன 'தனம்' என்பதை மக்கள் தீர்மானிக்கட்டும்.

- தங்கள் மீது வேண்டுமென்றெ அவதூறு செய்யும் எண்ணம் கட்டுரையாளருக்கோ, எதிரொலிக்கோ அறவே கிடையாது. தமிழ் மக்களுக்கு தாங்கள் செய்த பணிகளை நாம் மறவோம். ஆயினும் சில உண்மைகளை காய்தல், உவத்தல் இன்றி வெளிப்படுத்தும் போது அது 'அவதூறு' என்று அர்த்தம் கொள்ளப்படுவது துரதிர்ஷ்டமே. தவறுகள் திருத்தப்பட வேண்டுமே தவிர, நியாயப்படுத்தல் அதை விடத் தவறானது.

(ஆ-ர்)

# நாட்டுக்கோழி முட்டைக்கு நல்லபாம்பு காவலா?

**கோடிப் பக்கம்**

"ஏய் சின்ராசு மேட்டு லயத்துக்கு போயிட்டு இந்த அரிசி கொத்த புஷ்பா அக்காவுக்குக் குடுத்துட்டு வாடா" என தாய் கறுப்பாயிடமிருந்து கட்டளை பறந்தது.

"ஐயோ... கொஞ்சோ பொறும்மா, இப்பதா பிக்பொஸ் –02 ஆரம்பிச்சிச்சு. அது முடிஞ்சதும் பட்டுன்னு போயிட்டு வாரேன்" என வேண்டா வெறுப்பில் பதிலளித்துவிட்டு தொலைக்காட்சி சத்தத்தைக் கூட்டிவைத்தான் மகன் சின்ராசு.

"ஆமாண்டா.... தலகீழா தொங்குதா வௌவாலு .அத அண்ணாந்து பாத்தானாம் கோவாலு" என கூறிக்கொண்டே அடுப்பங்கரையை நோக்கி நடையைக் கட்டினாள் கறுப்பாயி.

டவுனுக்கு சென்றிருந்த மாடசாமி அண்ணை, பொருட்களை எல்லாம் வாங்கிக்கொண்டு காலா படம் சிடியுடன் வீட்டுக்குள் நுழைந்தார்.

"ஏங்க லேட்டு...? டேட்டா காட் வாங்கீட்டு வந்தீங்களா?" என கணவன் மாடசாமியிடம் கேட்டாள் கருப்பாயி.

" ஆமாண்டி, ஒங்க ஐயா, "ஐ வே' போட்டு குடுத்திருக்காரு... போயிட்டு டக்கு, டக்குனு வாரதுக்கு...டேட்டா கார்டு...பாட்டா கார்டுனுக்கிட்டு"என சீறியபடி கதிரையில் அமர்ந்தார் மாடசாமி.

"என்னா... அண்ணே ஒரே சத்தமா இருக்குது, காலைல பெரட்டுக்கும் வரல, வட்ஸ்அப் குரூப் பக்கமும் காணோம்" என வினவியபடியே வீட்டுக்குள் நுழைந்து காலா 'சிடி'யை கையிலெடுத்தார் தோட்டத்து சின்னக் கங்காணி.

"வாங்க சின்னக் கங்காணி. பேப்பரப் பாத்தீங்களா? ஓட்டுக்காக அடிச்சிக்கிட்ட நம்ம அரசியல்வாதீங்க, இப்போ ரோட்டுக்காக சண்ட போடுறாங்க. நமக்கு விமோசனம் பிறக்க விடமாட்டானுங்கபோல" எனக் கூறினார் மாடசாமி.

" அட..யாரு குத்தினால் நமக்கு என்ன, அரிசி வந்தா சரிதானே? உண்மையச் சொன்னா உலகோ சிரிக்கும், மத்த பக்கத்துல மண்டையும் உடையும்"என ஒரு போடு போட்டார் சின்ன கங்காணி.

"என்ன கங்காணி சொல்லுறீங்க" என கேள்வி கேட்டான் மாடசாமி.

" புரிஞ்சவங்களுக்குப் புரியும்டா. புரியாதவங்களுக்கும் இன்னும் சில நாட்களில் புரியும் டாசரி காலா படத்த பாருமக்கள் பிரதிநிதியென்றால் காலா போல இருக்கனும். நம்ம பெரட்டாசி தோட்டத்துக்கு ரோட்டு போட்டு கொடுப்பவங்கதா நமக்கு காலா. அந்த இடத்த புடிக்கதான் இவனுங்க அடிச்சிக்கிறாங்கள்" என கூறிவிட்டு புறப்பட தயாரானார் கங்காணி.'

"யானை நடக்குறதும்...பானை உடையிறதும் சகஜம் தானே" என சம்பந்தமே இல்லாமல் 'பஞ்ச்' பேசிக்கொண்டு அவ்விடத்துக்கு வந்தார் அப்பாத்தா.

"ஐயோ, அப்படிச் சொல்லாதீங்க கங்காணி... அவுங்களெல்லாம் நமக்காகவே வாழ்றவங்கள். எங்க ஐயாவுட்டு கட்சி ஆக்கள பத்தி எதுவும் பேசாதீங்க இப்போ ரோட்டு ஒண்ணுதான் கேடு"என்று கூறிவிட்டு வெற்றிலை இடிக்கும் உரலை கையிலெடுத்தார் அப்பத்தா.

"அப்பத்தா சும்மா வாய கிண்டிக்காத.உன் மாதிரி ஆக்களாலதான் மலையகம் இன்னும் இப்படியே இருக்கு. உலகம் முன்னேறிவிட்டது. இங்கு நமக்கு ரோட்டுகூட இல்ல. இன்னும் கக்கூஸுக்காக போராடுறோம். எங்களயாவது மாற்றம் பற்றி சிந்திக்க விடு. எப்படியாவது ரோட்ட பெற்றே தீருவோம்." என சபதமெடுத்தான் மாடசாமி.

"பி கூல் மாடசாமி. டென்ஷன் ஆகாத. பீபீ தான் எகிரும். சட கட்டுனவனெல்லாம் சாமியாராகிட முடியுமா? நாட்டுக் கோழி முட்டைக்கு நல்லப்பாம்ப காவலுக்கு வச்சா நாட்டுல இதுவும் நடக்கும், இன்னு நடக்கும்" எனக் கூறிவிட்டு அங்கிருந்து புறப்பட்டார் சின்ன கங்காணி.

"ஏன்டா சின்ராசு..நாடகத்த போடு செய்திய நாளைக்கு பாக்கலாம்" என கூறியபடியே முன்னறைக்கு விரைந்தார் கறுப்பாயி.

" அடியே கலைஞருக்கு ஒடம்பு சரியில்ல... காவிரி ஆஸ்பத்திரில வச்சியிருக்காங்க இப்ப எப்படின்னு தெரியல. தெரிஞ்சிக்கனும் நியூஸ் போகட்டும்" என கூறியபடி அவ்விடத்துக்கு வந்தார் மாடசாமி.

"ஐயோ! முடியாதுங்க!.யாருக்கு என்ன நடந்தா நமக்கென்ன? நமக்கு சீரியல்தான் முக்கியம்" என மறுத்துபேசி ரிமோட்டை கையிலெடுத்து வைத்துக்கொண்டார் கறுப்பாயி.

மலையகத்தை அழிக்கும் – வளர்ச்சியைத் தடுக்கும் தொலைக்காட்சி நாடகங்களைப் பற்றி சிந்தித்தபடியே படுக்கையறைக்குச் சென்றான் மாடசாமி.

**■ அலப்பறை ஆறுமுகம்**




# சிட்டுக்குருவியும் ஆல மரமும்

ஓர் ஆற்றங்கரையில் இரண்டு பெரிய ஆல மரங்கள் இருந்தன. அந்த வழியாக வந்த ஒரு சிட்டுக் குருவி "மழை காலம் தொடங்க இருப்பதால் நானும் என் குஞ்சுகளும் வசிக்கக் கூடு கட்ட அனுமதிக்க முடியுமா" என்று அங்கிருந்த ஆலமரத்திடம் கேட்டது.

முதலில் இருந்த மரம் 'முடியாது' என்றது.

அடுத்த மரத்திடம் கேட்டது, அது அனுமதித்தது.

குருவி கூடு கட்டி சந்தோசமாக வாழ்ந்து வந்தது.

இவ்வாறிருக்க ஒரு நாள் பலத்த மழை பெய்தது. ஆற்றில் வெள்ளம் வந்து முதல் மரத்தை அடித்துச் சென்றது.

அந்த மரத்தை வெள்ளம் இழுத்துச் செல்லும்போது, அந்தச் சிட்டுக் குருவி, "எனக்கு கூடு கட்ட நீ இடம் இல்லை என்று சொன்னாய். அதனால் தான் இப்போது உன்னை வெள்ளம் அடித்துச் செல்கிறது" என்று சிரித்துக் கொண்டே சொன்னது

அதற்கு அந்த மரம் "எனக்குத் தெரியும் நான் பலவீன மடைந்து விட்டேன். எப்படியும் இந்த மழைக்கு நான் தாங்க மாட்டேன். தண்ணீரில் அடித்துச் செல்லப்படுவேன். நீயும் உன் குழந்தைகளும் நல்ல வாழ்க்கையை வாழ வேண்டும் என்று தான் உனக்கு இடம் இல்லை என்றேன். மன்னித்து விடு" என்றது.

நீதி: உங்களை யாரும் நிராகரித்தால் தயவு செய்து தவறாக நினைக்காதீர்கள்.

அவரவர் சூழ்நிலை அவரவர்களுக்கு மட்டும் தான் தெரியும்.



## கதை சொல்வோம்...

சிறுவர்களே! உங்கள் கற்பனை உலகத்தில் உருவாகும் கதைகளை எங்களுக்கு அனுப்பி வையுங்கள். தரமான கதைகள் எதிரொலி வாரமலரில் பிரசுரமாகும் .

அனுப்ப வேண்டிய முகவரி....

**'கதை சொல்வோம்'**
அம்பலம் பதிப்பகம்,
இல. 241,
கைதடி – மானிப்பாய் வீதி,
உடுவில், யாழ்ப்பாணம்.
**அல்லது**
ethirolimedia@gmail.com

# வாழ்த்தலாம் வாங்கோ



2 ஆவது

## பிறந்தநாள் வாழ்த்து

நல்லூரைச் சேர்ந்த யுகசுதன் – பிருந்தா தம்பதியரின் செல்வப் புதல்வனான

**நிவின்**

தனது 2ஆவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் 12.08.2018 அன்று வெகு விமர்சையாகக் கொண்டாடுகின்றார்.
இவரை மனதார வாழ்த்துகிறது
**'எதிரொலி' குடும்பம்**

13 ஆவது

## பிறந்தநாள் வாழ்த்து



அரசடி, நல்லூரைச் சேர்ந்த ரட்ணராஜா – லலிதா தம்பதியரின் செல்வப் புதல்வனான

**சானுஜன்**

தனது 13ஆவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் 08.08.2018 அன்று வெகு விமர்சையாகக் கொண்டாடுகின்றார்.
இவரை மனதார வாழ்த்துகிறது
**'எதிரொலி' குடும்பம்**

**ஹாய் குட்டீஸ்!**

ஒகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் பிறந்தநாள் கொண்டாடும் சிறார்களின் விவரங்களை, இப்படிவத்தில் பூர்த்தி செய்து, வெட்டி, தெளிவான புகைப்படத்துடன் அனுப்புங்கள். உங்களை வாழ்த்துவதற்கு எதிரொலி தயாராக உள்ளது.

பெயர் : ______
பிறந்த திகதி : ______
வயது : ______
முகவரி : ______
______
தொலைபேசி இலக்கம் : ______

**வாழ்த்தலாம் வாங்க**
அம்பலம் பதிப்பகம்,
இல. 241,
கைதடி – மானிப்பாய் வீதி,
உடுவில், யாழ்ப்பாணம்.
**அல்லது**
ethirolimedia@gmail.com

# வார்த்தை சூறாவளி அனிகா ஷர்மா!




எத்தனை பேருக்கு வார்த்தையைக் கொண்டு செயல்கள், கனவு மற்றும் உணர்வுகளுக்கு வடிவமும், அர்த்தமும் கொடுக்க முடியும். கைபேசி மற்றும் செயலிகள் இருக்கும் இந்தக் காலத்திலும், எம்மில் பலர் இதழ் அல்லது நாட்குறிப்பைப் பராமரிக்கிறோம். 12 வயதான அனிகா ஷர்மாவின் விடயத்திலும் கூட அது தான் நடந்திருக்கிறது. தன்னுடைய எண்ணங்களுக்கு வண்ணம் தீட்டும் அவளுடைய ஆசை, அவளை ஒரு கவிதை எழுத வைத்துள்ளது. தன்னுடைய எளிமையின் வெளிப்பாடுகளே அவளின் கவிதைகளாக இருந்தன. அவளுடைய மூளையில் என்ன ஓடிக் கொண்டு இருக்கிறதோ அதைக் காகிதத்தில் எழுதி உயிர் கொடுப்பாள்.

துபாயைச் சேர்ந்த இந்த 12 வயதுச் சிறுமியின் புகழுக்கு அவரின் கவிதைத் தொகுப்பே காரணம்.

அனிகாவின் பெற்றோர் பொறியியலாளர்கள். தங்களுடைய இளைய மகளுக்கு எழுத்து ஒரு வரப்பிரசாதமாகக் கிடைத்திருப்பதை அவர்கள் உணர்ந்தார்கள். அந்த வரம் அவரை விட்டு விலகி விடக் கூடாது என்றும் கருதினார்கள். அவர்கள் அனிகாவின் கவிதைகளை ரிப்பில்ஸ் என்ற புத்தகத்தின் பெயரில் வெளியிட்டனர். கடந்த ஆண்டு குழந்தைகள் தினத்தின் போது அது வெளியிடப்பட்டது.

"என்னுடைய கவிதைகள் நான் 11 வயதாக இருக்கும் போது வெளியிடப்பட்டது. நான் எழுதிய பெரும்பாலான கவிதைகள் என் சிந்தனையில் அவ்வப்போது உதித்தவை. அந்த நேரத்தில் எழுத்து எனக்கு உணர்வுகளை வார்த்தைகளில் வெளிப்படுத்த வடிவம் தந்தது. என்னுடைய புத்தகம் வெளியான பின்பு, அனைவரும் என்னைப் பாராட்டினர். அப்போது தான் நான் 'எழுத்தை' தீவிரமாக எடுத்துக் கொண்டேன். இப்போது ஒவ்வொரு நாளையும் எழுத்தைத் தீவிரமாக்குவதற்கான திறன்களை கற்றுக் கொள்வதற்காக நான் செலவிடுகிறேன்" என்கின்றார் அனிகா.

'வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்று உண்டோ' என்ற வரிகளை மெய்ப்பிக்கும் வகையில் நம்மிடையே பல இளம் சாதனையாளர்கள் உள்ளனர். உங்களுக்குத் தெரிந்த இளம் சாதனையாளர்கள் பற்றி நீங்களும் எழுதலாம்.

**அக்கினிக் குஞ்சு**
அம்பலம் பதிப்பகம்,
இல. 241,
கைதடி – மானிப்பாய் வீதி,
உடுவில், யாழ்ப்பாணம்.
**அல்லது**
ethirolimedia@gmail.com

# கனவுகளின் நாயகன் கலாம்!




இந்தியாவின் தலைசிறந்த விஞ்ஞானி, தொழில்நுட்ப வல்லுநர், இந்தியாவின் 11 ஆவது குடியரசுத் தலைவர், இந்திய ஏவுகணை நாயகன், இந்திய விஞ்ஞான வளர்ச்சியின் தந்தை, சிறந்த ஆசிரியர் இவ்வாறு பல பெயர்களுக்குச் சொந்தக்காரர் ஏ.பி.ஜே அப்துல் கலாம். இவர் 1931 ஆம் ஆண்டு, ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி ஜைனுலாப்தீனுக்கும், ஆஷியம்மாவுக்கும் மகனாக இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள இராமேஸ்வரத்தில் பிறந்தார்.

கலாம் தனது பள்ளிப்படிப்பை இராமேஸ்வரத்தில் உள்ள தொடக்கப்பள்ளியிலும், மேற்படிப்பை திருச்சிராப்பள்ளியில் உள்ள "செயின்ட் ஜோசப் கல்லூரியிலும், 1955 ஆம் ஆண்டு விண்வெளி பொறியியல் படிப்பை சென்னையிலும் கற்றார்.

1960 ஆம் ஆண்டு வானூர்தி அபிவிருத்தி அமைத்தல் பிரிவில் (DRDO) விஞ்ஞானியாகத் தன்னுடைய ஆராய்ச்சி வாழ்க்கையைத் தொடங்கிய கலாம், ஒரு சிறிய ஹெலிகொப்டரை இந்திய இராணுவத்துக்காக வடிவமைத்துக் கொடுத்தார். இவர் துணைக்கோள் ஏவுகணைக் குழுவில் (SLV) செயற்கைக் கோள் ஏவுதலில் முக்கிய பங்காற்றினார். 1980 ஆம் ஆண்டு SLV - III ரொக்கெட்டைப் பயன்படுத்தி ரோகினி-ஐ என்ற துணைக்கோளை வெற்றிகரமாக விண்ணில் ஏவச் செய்தார். இது அவருக்குமட்டுமல்லாமல், இந்தியாவுக்கே சாதனையாக அமைந்தது.

2002ஆம் ஆண்டு நடந்த குடியரசுத் தலைவர் தேர்தலில் வெற்றி பெற்று, இந்தியாவின் 11 ஆவது குடியரசுத் தலைவராகப் பதவியேற்று 2007 ஆம் ஆண்டு வரை குடியரசுத் தலைவராக இருந்தார்.

கலாம் 2015 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27 ஆம் திகதி ஷில்லாங்கில் வைத்து மேடையில் பேசிக்கொண்டிருந்த போதே மயங்கி விழுந்து உயிரிழந்தார்.

இறுதிவரைக்கும் பிரம்மச்சாரியாக வாழ்ந்த ஏ.பி.ஜே அப்துல் கலாமின் எளிமையான வாழ்க்கையும், அவரது இனிமையான பேச்சும் எல்லோரையும் கவர்ந்தது என்றால் வியப்பில்லை. 'எதிர்கால இந்திய இளைஞர்கள் கையில்' என்ற அவர் "கனவு காணுங்கள்" என்னும் வாக்கியத்தை இளைஞர்களின் மனதில் வேரூன்றச் செய்தவர் ஆவார்.



## மைத்திரியுடன் இரகசியப் பேச்சு

பிரதமரின் காலை வாரிவிட்டு - ஜனாதிபதியைக் கைவிரித்துவிட்டு மஹிந்தவின் கரம்பிடித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 பேர் கொண்ட அணி தற்போது இரண்டாகப் பிளவுபட்டுள்ளது.

மஹிந்தவிடம் முழுமையாகச் சரணடையவேண்டுமென ஒரு தரப்பும், இல்லை- இல்லை சுயாதீனமாக இயங்கவேண்டுமென மற்றுமொரு தரப்பும் பிடிவாதம் பிடிப்பதே சண்டைக்குக் காரணமென கருதப்படுகின்றது.

இவ்வாறானதொரு பின்புலத்தில் 16 பேர்கொண்ட அணியின் முக்கியஸ்தர்களான எஸ்.பி. திஸாநாயக்க, சுசில் பிரேமஜயந்த, டிலான் பெரேரா, திலங்க சுமதிபால ஆகியோர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை இரவோடிரவாக இரகசியமாகச் சந்தித்துப் பேச்சு நடத்தி உள்ளனர்.

அதுவும் சு.கவின் பொதுச்செயலாளரான ரோஹன லக்ஷ்மன் பியதாஷ, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலாளரான அமைச்சர் மஹிந்த அமரவீர ஆகிய இருவரையும் வெளியேற்றிவிட்டு மூடிய அறைக்குள் - மைத்திரியுடன் அவர்கள் மந்திராலோசனை நடத்தியுள்ளமையானது, அரசியல் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இதன்போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வெளிப்படுத்தப்படக் கூடாதென சந்திப்புக்குச் சென்றிருந்தவர்கள், ஜனாதிபதியின் காலைப் பிடித்து கெஞ்சாத குறையாக கேட்டுகொண்டதாக தகவல் கசிந்துள்ளது.

எதுஎப்படியோ மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னர் கூட்டரசிலிருந்து சு.க. முழுமையாக வெளியேறவேண்டுமென்ற கோரிக்கை மைத்திரியிடம் முன்வைக்கப்பட்டது என்பதே லேட்டஸ் தகவலாகும். ■

## கூட்டணிக்குள் குத்து வெட்டு



'தமிழை' அதிகம் நேசிக்கும் முற்போக்குச் சிந்தனை கொண்ட அந்தக் கூட்டணிக்குள் குடுமிச்சண்டை ஆரம்பித்துவிட்டதாக அரசல், புரசலாகக் கதை அடிபடுகின்றது.

வீட்டுக்குள் நடக்கும் சண்டை முச்சந்திக்கு வந்துவிடக்கூடாது என்பதில் மும்மூர்த்திகளும் குறியாக இருப்பதால், கூட்டணிக்குள் எவ்வித பிரச்சினையுமில்லை என்ற தோற்றமே வெளியுலகுக்குக் காண்பிக்கப்படுகின்றது.

ஆனால், கூட்டணிக்குள் ஆயிரம் பிரச்சினைகள், தேர்தலொன்று அறிவிக்கப்பட்ட பிறகே அவை வெளிக்கிளம்பும் என்றும் அந்த நாளுக்காகவே எதிர்க்கட்சிக்காரர்கள் வழிமீது விழிவைத்து காத்திருப்பதாகவும் மலை மண்ணில் கதை அடிபடுகின்றது.

கூட்டணிக்குள் இருந்தபடியே தனிக்கட்சியைப் பலப்படுத்தல், நிதி ஒதுக்கீட்டில் பாகுபாடு, வெட்டுக்குத்து என பல விடயங்களே குழப்பத்துக்குரிய காரணங்களென கண்டறியப்பட்டுள்ளன.

இவற்றைச் சரிசெய்து, ஓரணியில் பயணிப்போமென மூத்த உறுப்பினர்கள் சிலர் ஆலோசனை முன்வைத்து சமரச முயற்சியிலும் இறங்கி உள்ளனர்.

பழனி முருகனும், மதுரை கணேஷனும், ராதையின் கிருஷ்ணனும் இணைந்து கட்சியைக் காக்க வேண்டுமென தொண்டர்கள் சிலர், கதிர்காமத்துக்குக் காவடி எடுத்ததாகவும் தகவல். எது எப்படியோ, மலைநாட்டு மக்களுக்கு நன்மை நடந்தால் சரி. ■







## ஜனவரி 10 இற்குள் தேர்தல்!

மாகாணசபைகளுக்கான தேர்தலை எப்போது நடத்துவது? எந்தமுறைமையின்கீழ் நடத்துவது என்பவை தொடர்பில் ஆராய்வதற்காகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கடந்த புதன் இரவு கட்சித் தலைவர்கள் கூட்டத்தை கூட்டு எதிரணி, ஜே.வி.பி. ஆகியன புறக்கணித்துள்ளன.

எனினும், ஐக்கிய தேசியக்கட்சி, பிரதான எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சுதந்திரக்கட்சி, தமிழ் முற்போக்கு கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஈ.பி.டி.பி., அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது எல்லை நிர்ணய அறிக்கையில் உள்ள குளறுபடிகளைச் சுட்டிக் காட்டிய தமிழ்பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள், பழைய முறைமையில் (விகிதாசார) தேர்தலை நடத்துவதே சிறந்த தேர்வாக அமையுமென்றும் சுட்டிக் காட்டியுள்ளன.

புதியமுறையில் (கலப்பு) தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதே தமது நிலைப்பாடாக இருக்கின்றது என்று சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் திட்டவட்டமாக அறிவித்துள்ளனர். எனினும், பெரும்பாலான கட்சிகள், பழைய முறைமையை விரும்புவதால் அந்த முறையிலேயே தேர்தலை நடத்தலாம் என பிரதமர் அறிவித்துள்ளார். அத்துடன், இது குறித்து சபாநாயகருக்கும் அவர் கடிதம் எழுதவுள்ளார்.

இதன்படி 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5ஆம் திகதி மாகாணசபைத் தேர்தல் நடைபெறும் என நம்பப்படுகின்றது.

2012 ஆம் ஆண்டு தேர்தல் நடைபெற்ற கிழக்கு, வடமத்திய, சப்ரகமுவ ஆகிய மூன்றுசபைகளினதும் பதவிகாலம் கடந்த ஒக்ரோபர் மாதத்துடன் நிறைவுக்கு வந்தது.

அதேவேளை, 2013ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் தேர்தல் நடைபெற்ற வடக்கு, மத்திய, வடமேல் ஆகிய மாகாணசபைகளின் ஆயுட்காலம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துடன் நிறைவுக்கு வருகின்றது. மேற்படி ஆறுசபைகளுக்கும் ஒரே தினத்தில் தேர்தல் நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தென், மேல், ஊவா ஆகிய மாகாணசபைகளின் ஆயுட்காலம் 2019 ஆம் ஆண்டு நிறைவுக்கு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ■

## செப்ரெம்பர் 2 இல் என்ன நடக்கும்?



ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வருடாந்த மாநாடு எதிர்வரும் செரெம்பர் மாதம் 2 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெறவுள்ளது.

மாகாணசபைகளுக்கான தேர்தல் நெருங்குவதால் குறித்த மாநாட்டை வரலாறு காணாத வகையில் பிரமாண்டமாக நடத்துவதற்கு கட்சித் தொண்டர்கள் திட்டமிட்டுள்ளனர். இதற்குரிய ஏற்பாடுகள் தற்போதே ஆரம்பித்துவிட்டன. ஆடி முடிந்ததும் அடுத்தக்கட்ட செயற்பாடுகளும் அசுரவேகத்தில் அரங்கேறவுள்ளன.

பொதுச்செயலாளர், தேசிய அமைப்பாளர் உள்ளிட்ட பதவிகளில் மாற்றம் வரவுள்ளதுடன், கட்சியை முழுமையாக மறுசீரமைக்கும் நிலைப்பாட்டிலேயே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இருக்கின்றார்.

இதன்படி சிறுபான்மையின உறுப்பினர்களுக்கு முக்கிய பதவிகள் வழங்கப்படலாம் என்றும், பௌசி, அங்கஜன் ஆகியோரின் பெயர்கள் பட்டியலில் முன்னணியில் இருப்பதாகவும் கைக்கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. ■

# முகவரி தொலைந்த சமூகம் ஆகிப்போவோமா?

● வேதநாயகம் தபேந்திரன்



சுடலையில் கூல் பார் தொடங்கின எங்கட ஆக்கள் இப்போ சாராய பாரும் எல்லோ திறந்து போட்டினம்."

அது என்ன ஐயா புதுக்கதை தொடங்கிறியள் என்றேன்.

தம்பி முந்தி ஒரு செத்த வீடு என்றால் ஆம்பிளையள் சுடலை வரை சென்று பயபக்தியாக இறந்தவருக்கு இறுதி அஞ்சலி செய்வார்கள். அப்போது சுடலை வரை செல்பவர்களுக்கு ஆறுதல் அளிக்கவென யாரும் தண்ணி வென்னி கொடுப்பதில்லை.

பின்னாளில் வசதி கூடிய போது சுடலைக்கு செல்பவர்களுக்கு தாகம் தணிக்கவென சோடா வழங்கும் முறை வந்தது. அதில் ஒரு வித நியாயம் இருந்தது.

சனத்தின்ரை வாழ்க்கை வேகம் கூடக் கூட சுடலைக்குப் போகும் அக்கறை குறைந்தது.

இறந்தவரின்ரை இரத்த உறவுகள் அயல் அட்டம் எண்டு தான் போகத் தொடங்கினார்கள்.

சுடலைக்கு வரும் ஆள்களின் எண்ணிக்கை குறையக் குறைய புது ரெக்னிக்பாவிக்கத் தொடங்கி விட்டார்கள்.

சுடலைக்கு வரும் ஆள்களுக்கு கால் போத்தல் சாராயம் வழங்கி ஆள்களை மெல்லமெல்ல இழுக்கும் முறை ஒன்று வருகிறது.

எல்லா இடங்களிலும் அல்ல சில கிராமங்களில் மெல்லமாக இந்த முறை வளர்ந்து வருகிறது.

வெளிநாட்டுக் காசு வரும் சில சனங்கள் காசை வைத்து என்ன செய்வது என்று தெரியாமல் இப்படி ஒரு கிலுகிலுப்புக் காட்டி சுடலைக்கு வர வைக்கும் முறைவந்துள்ளது.உண்மை தான் ஐயா என்றேன்.

இதை விடச் சில விசயங்கள் உள்ளன. இந்து மயானத்தில் (சுடலை) இறுதிக்கிரியை செய்யும் போது பல சாத்திரிகள் தோன்றி அப்பிடிச் செய்யுங்கள், இப்படிச் செய்யுங்கள் எனப் படுத்தும் ஆக்கினைகளும் உள்ளன.

இறந்தவரின் உடலை 3 முறை சுற்றுவதிலிருந்து கொள்ளிக்குடம்தூக்குவதிலிருந்து, கொள்ளி வைப்பது வரை சாத்திரங்கள் கூறி பிரச்சினைகளை

உருவாக்கும் புதுச் சாத்திரிகள் தொல்லை அதிகம்.

சிலர் சாராய வெறியில் வந்து இந்தச் சாத்திரங்களைச் சொல்ல முற்படும் போது

புதிது புதிதாகப் பிரச்சினைகள் உருவாகின்றது.

நன்றாகப் படித்த குடும்பங்களில் இந்தப் பிரச்சினைகள் மிகவும் குறைவு.

கல்வித் தரங்கள் குறைந்த குடும்பங்களில் நடக்கும் இறப்பு நிகழ்வுகளில்தான் இது போன்ற பிரச்சினைகள் உள்ளன.

முன்னைய நாள்களில் இறந்த ஒருவரை இறுதிக் கிரியைக்காக எடுத்துச் செல்லும்போது செல்லும் பாதையில் யாரும் நன்மை காரியங்களுக்குச் சென்றால் விலகிச்செல்லுமாறு 500 யார் முன்பாக பட்டாஸ் வெடி போட்டு அடையாளப்படுத்துவார்கள்.

ஆனால் பின்னாளில் பண வசதி கூட பல ஆயிரக் கணக்கில் பட்டாசுகளை வாங்கிவீதியை மறித்து அட்டகாசம் செய்யும் முறை வந்தது.

மதச் சடங்கு முறைகளைப் போதிப்பவர்கள் இதுதொடர்பான விளக்கங்களைச் சரியான

முறையில் முன்னெடுக்காமை இத் தவறுக்கு எல்லாம் காரணமாகி விட்டதாகச் சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

பறை மேளமடித்தல் எனும் முறை மரண வீடுகளில் இருந்தது. பின்னாளில் கிறீஸ்தவ

முறையைப் பின்பற்றி பான்ட் எனப்படும் மேள முறைமை வந்து வீதிக்கு வீதிபயணிகளைத் தடுத்து சிரமங்களை உண்டாக்கி பான்ட் அடிக்கும் முறைமைவந்தது.

முன்னாளில் இறப்பு வீடு நடைபெற்று செலவு எனும் சடங்கு நடைபெற்றால்இறந்தவர் மச்ச மாமிசம் பாவிப்பவராயின் அவர் உண்ட மாமிச உணவு வகைகள்யாவும் படைக்கப்படும்.

வறுமை உச்சமாக இருந்த அக்காலங்களில் மாமிச உணவுகளை விரும்பி உண்பதற்குப்போட்டி போட்டார்கள். ஆனால் இந்த நாள்களில் செலவு வீட்டு உணவு உண்பதற்குஆள்களைத் தேடிப் பிடிக்க வேண்டிய நிலை உள்ளது.

இது பணவசதி தந்த மனமாற்றம். கோயில்கள் பெருகி விரதங்கள் கூடியதன் விளைவு.

பாதகமாகச் சொல்ல முடியாத நிலை இது. முன்னாளில் அந்தியேட்டிக் கிரியைகள் ஒரே நாளில் நடத்தப்பட்டு முடிந்து விடும்.

தற்போது இறப்பு நடைபெற்று 29 ஆம் நாள் கீரிமலை சென்று சடங்குசம்பிரதாயங்கள் இந்து மதக் குருக்கள் மூலமாக நடத்தப்படும்.

அப்போது இறந்தவரின் இரத்த உரித்துக்கள் உணர்வு பூர்வமாகக் கடைப்பிடிக்க இன்னுமொரு பகுதி கேளிக்கை வினோதங்கள் நிறைந்ததாக அந்த நிகழ்வின் கௌரவத்தைக் குறைக்கும் விதமாக நடக்கின்றனர்.

கடலை அவித்துக் கொண்டு போய் கீரிமலைக் கடலில் குளித்த பின் அவற்றை உண்டு

பொழுதைப் பைம்பலாகக் கழிக்கும் ஒரு பழக்கம் வந்துவிட்டது.

இறந்த ஆத்மாவை கௌரவமாக நினைவு கூர்ந்து சடங்கு சம்பிரதாயங்களை செய்யும்

முறைக்குப் பதிலாக கேளிக்கை வினோதங்கள் நிறைந்த ஒரு முறை வந்து விட்டது.

புலம் பெயர் நாடுகளில் எம்மவர் மிகவும் கஸ்ரப்பட்டு உழைக்கும் பணமே இவ்விதம் ஊதாரித்தனமாக செலவாகிறது.

எல்லாக் குடும்பங்களிலும் இந்த நிலை இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

புலம் பெயர் நாடுகளில் இருந்து வரும் பணம் இறப்பு நடைபெறும் வீடுகளில்எவ்விதம் சடங்கு சம்பிராதாயங்களில் ஊதாரித்தனமாகச் செலவாகிறது என்பதைச்சுட்டிக் காட்டவே இதனைப் பதிவு செய்துள்ளேன்.

இந்து மதம் தொடர்பாக இயங்கும் மத நிறுவனங்கள் மதப் பெரியார்கள் இவை தொடர்பான சரியான வழிப்படுத்தலைச் செய்யாவிட்டால் கால கதியில் கூழாம்பாணியான ஓர் சமூகக் கூட்டமாக நாம் உருவெடுத்து விடுவோம்.

எமது வாழ்வியல் குறித்தான புரிதல்கள் தெளிவுகள் உண்டாக்கப்படுதல் வேண்டும்.

பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய மத நிகழ்வுகள் அவர்களது பாரம்பரியங்களைப் பிழையின்றிக் கடைப்பிடிக்கும் போது நாமும் அது போலக் கடைப்பிடிக்க வைக்கவேண்டும்.

இந்தச் சமூகப் பொறுப்பிலிருந்து விலகினால் முகவரி இல்லாத ஓர் சமூகமாக உலகவரலாற்றில் கரைந்து போய் விடுவோம். ■

---

# வேலியில் போன பாம்பைப் பிடித்து வீட்டுக்குள் விட்ட கதையாக

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை தொல்லியல் திணைககளம் வரலாற்று எச்சங்களைக் கண்டுபிடித்து நாடுமுழுவதையும் பௌத்த மேலாதிக்கத்தின் கீழ் கொண்டுவருவதலுக்கான வேலைத்திட்டங்களையே முன்னெடுத்துவருகின்றது. வடக்கு, கிழக்கில் தொல்லியல் திணைக்களம் உரிய ஆய்வுப் பணிகளை முன்னெடுத்ததைவிட பௌத்த விகாரைகளை நிறுவிய, அதற்கான அத்திவாரங்களையிட்ட சந்தர்ப்பங்கள்தான் அதிகம் இடம்பெற்றுள்ளன. இதே வேலையைத்தானே இராணுவமும் வடக்கு, கிழக்கு பகுதிகளில் செய்துவருகின்றது. எனவே இலங்கை இராணுவத்துக்கும், தொல்லியல் திணைக்களத்துக்கும் பெரியளவு வித்தியாசங்கள் இருப்பதில்லை. இருதரப்பும் வடக்கு, கிழக்கில் ஆற்றுவது ஒரே பணியைத்தான்.

இவ்வாறாக நெதர்லாந்து அரசின் ஆராய்ச்சிக் காலத்திலேயே தொல்லியல் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக்குள் சென்றுவிட்ட யாழ். கோட்டை பகுதி, இப்போது இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழும் கொண்டு செல்ல வாய்ப்புக்கள் அதிகமாகி வருகின்றன. அவ்வாறு இராணுவத்தின் கீழ் சென்றால் யாழ். நகரின் இதயம் இராணுவமயமாகிவிடும். ஒருபக்கம் ஆரியகுளம் - நாகவிகாரை பகுதி முழுவதுமான கண்டி நகரின் சாயலைப் பெற்றுவிட்டது. அத்துடன் பௌத்த விழாக்களின்போது இராணுவம் இரவு - பகலாகப் பணியாற்றி, யாழ். நகரை பௌத்த நகராக மாற்றிவிடுகிறது. இந்நிலையில் யாழ். கோட்டையையும் தமிழர்களே வலிந்து இராணுவத்துக்குக் கொடுப்பதானது, தமிழர் நகரின் இதயத்தில் இராணுவத்தைக் குடியமர்த்துவதற்கு ஒப்பானதாகும்.

ஆனால் மறுபுறத்தில் இராணுவத்தை தமிழ் சமூகத்தின் தவிர்க்க முடியாத ஓர் அங்கமாக தமிழர்களே ஏற்றுக்கொண்டு விட்டார்களே என விவாதிக்கத் தூண்டும் செயற்பாடுகளும் இங்கு நடந்தேறிக்கொண்டேயிருக்கின்றன.

தமிழ் சமூகத்தின் அவமானமாகக் கருதப்படும் சாதிய நடைமுறைகள் பெரும் விடுதலைப் போராட்டத்தின் பின்னரும் அஸ்தமிக்கவில்லை. மிக இறுக்கமாக கிராம மட்டங்களில் பின்பற்றப்படுகின்றது. அதுவும் ஆலய நடைமுறைகளில் இன்னும் விசேட மேலுருவாக்கங்கள் வந்துகொண்டேயிருக்கின்றன. அண்மைய நாட்களில் வரணியில் இடம்பெற்ற ஆலய தேர்திருவிழாவின் போது கீழ் சாதியினர் தேரிழிப்பதையும் பார்க்க ஜே.சி.பி ரக இயந்திரத்தைக் கொண்டு தேரை இழுக்கலாம் என்ற சாதிய மேலுருவாக்கத்திற்கே தமிழன் வந்திருந்தான்.

இப்போது அளவெட்டியில் இன்னொரு மேலுருவாக்கமும் இடம்பெற்றிருக்கிறது. அதாவது குறைந்த சாதியினர் தேர்வடம் பிடிப்பதையும் பார்க்க,நம்மைக் கொன்றொழித்த இராணுவம் மேலாடையைக் கழற்றி விட்டு வந்து தேர் இழுக்கலாம் என்ற நடைமுறை வந்துவிட்டது. இவ்வாறு தமிழர்களது பண்பாட்டில் மிகப் புனிதமானதாகக் கருதப்படும் ஆலயம், சடங்கு, தேரிழுப்பு உள்ளிட்ட நிகழ்வுகளுக்கு இராணுவத்தை வலிந்து அழைத்து அனுமதிப்பதானது, தமிழ் பண்பாட்டின் இதயத்துக்குள்ளேயே ஆக்கிரமிப்பை ஏற்படுத்திக்கொள்வதற்கு சமமானது.

சிங்களப் பண்பாடு, மெதுமெதுவாக தமிழ்ப் பண்பாட்டின் பல்வேறு கூறுகளையும் தனக்குரியதாக மாற்றி வருகின்றது. கதிர்காம முருகன், பிள்ளையார், சரஸ்வதி, இலட்சுமி, பார்வதி எனப் பல தெய்வங்கள் மிக அண்மைக்காலத்திலேயே பௌத்த கடவுளர்களாக மாறியிருக்கின்றனர். இப்போது ஆலயத்துக்குள்ளும் சிங்கள பண்பாட்டை இராணுவ தளத்தில் கட்டமைப்புக்கும், விஸ்தரிக்கும் தரப்பை ஆலயத்துக்குள் இழுத்து வந்துவிடுவது பொருத்தமான செயலாகப்படவில்லை. வேலியில் போன பாம்பை பிடித்து வீட்டுக்குள் விட்ட கதையாக தமிழர்களின் எதிர்காலம் மாறப்போவதையே அண்மைய இச்சம்பவங்கள் கட்டியம் கூறி நிற்கின்றன. ■



மண் மூடும் சுவடுகள் 7

■ ந.சத்தியபாலன்

# சுமை தாங்கும் சைக்கிள்

மிகப் பிரதானமான போக்குவரத்துச் சாதனம் என்ற பெரிய அந்தஸ்து சைக்கிளுக்கு இருந்த காரணமொன்று உண்டு.

வேலைக்குச் செல்பவர்கள், பிள்ளைகளைப் பள்ளிக்கு அழைத்துச் செல்பவர்கள், அன்றாடத் தேவைகளுக்காகப் பயணிக்கும் அவசியம் உடையோர் போன்ற பலரும் சைக்கிளையே பெரும்பலமாக எண்ணிப் பயன்படுத்தியிருந்தார்கள்.

இன்றுவரை தபால் விநியோகிப்பதற்கு தபாற்காரர்கள் சைக்கிளையே பயன்படுத்துவது குறிப்பிடத்தக்கது.

வயது , தரம் போன்ற எவ்வித வேறுபாடும் சைக்கிளைப் பயன்படுத்தும் விடயம் தொடர்பாக இருந்ததில்லை.

சைக்கிளை உருட்டத் தெரிந்திருந்தாலே போதும். ஒன்பது வயதுச் சிறுவர், சிறுமியர்கூட சைக்கிள் 'பாரின்' கீழாக காலை விட்டு சைக்கிள் பழகியதும் ,அவ்விதமாகவே ஓடித் திரிவதும் சர்வ சாதாரணமாகக் காணப்பட்ட ஓர் 'அந்த நாள் ஞாபக' நினைவாக நிலைகொண்டிருக்கிறது.

போக்குவரத்து நெருக்கடிகள், யுத்தகாலச் சூழ்நிலைகளின் போது, 'கரியரில்' பலகை பூட்டி, மனைவியையோ மகளையோ ஏற்றிக்கொண்டு கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற இடங்களுக்குச் சென்று வந்ததையும் பலரும் அறிவார்கள்.


மின்சாரம் இல்லாத ஒரு நிலை -ஒரு காலத்தில் -இருந்தது. படிப்பதற்கு சிக்கன விளக்கு உதவியது போல சைக்கிள்,டைனமோவைப் பயன்படுத்தி பி.பி.ஸி கேட்கக் கூடியிருந்தோரையும், கால் உளைவையும் பொருட்படுத்தாமல் சைக்கிள் பெடலை மிதித்து பாட்டுக் கேட்டவர்களையும் மறந்துவிட முடியாது.

சகல தெருக்களையும் தொடர்ந்து மோட்டார் சைக்கிள்களே வியாபித்திருக்கிற இந்த நாட்களைப் போலன்றி சைக்கிள்களே எங்கும் காணப்பட்ட நெருக்கடி நிறைந்த நாட்களில் நமது இளசுகளின் காதல் பயிர் முளை விடவும், தளிர் ஏந்தவும் மலர்ந்து , மணம் பரப்பி ( சில சமயங்களில் ஊரார் திடுக்கிடும் வகையில் கூட) வளர்ந்தோங்குவதற்கு உதவிய பெருந்துணையாக சைக்கிள்கள் விளங்கியதையும் பலரும் மறந்திருக்க மாட்டார்கள்.

ஒழுங்கைகளிலும் முடக்குகளிலும் சைக்கிளில் சாய்ந்த படி, கனவுலக சஞ்சாரம் செய்த பலர் இன்று பெரியவர்களாகி விட்டார்கள். அந்தக் காலத்துக் கல்யாண மரபுகளில் ஒன்றான 'ஓடிப்போகும்' நடைமுறையைச் செயல் வடிவப்படுத்துவதில் சைக்கிள் வகித்தபாகம் வியந்து பேசத்தக்கதாயிருந்தது.

அதுபோலவே மண்மீட்பு யுத்தத்தில் இணையும் இளைஞர்கள் அவ்வாறிணைந்த பிறகு அவர்களது சைக்கிள் மாத்திரமே வீட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டு ஒரு துயர சாட்சியாக வீட்டாரைக் கலங்க வைத்த துயரங்களோடு கூட சைக்கிள் சம்பந்தப்படிருந்ததையும், பலரும் மறந்து போயிருக்க மாட்டார்கள்.

பெரும் சோதனைகளாக நமது மக்கள் முகம்கொடுத்த இடப்பெயர்ச்சி அனுபவங்களின் போது சைக்கிள்கள் குடும்பங்களையே சுமந்து போன காட்சிகள் இன்றும் மனக்கண்முன் நிழலாடுகின்றன.





# அது தனக்குத் தெரியாதாம் காதிலை பூ வைக்கிறார் ஜீ.ஏ?

போன மாதம் யாழ்ப்பாணத்திலை ஒரு பொம்பிளையளின்ரை மகளிர் மகாநாடு நடந்தது. அது நடந்தது பல மகளிர் அமைப்புக்குத் தெரியாதாம். அவை எல்லாருக்கும் அறிவிக்கேல்லை எண்டதை ஒரு குறையாச் சொல்லிச்சினம். ஒரு குடும்ப மாநாடாத்தான் அது நடந்திருக்குது. அங்கை என்ன நடக்கிதெண்டு நான் பாக்கப் போனன். மாநாடு எண்டால் வழமையா என்ன நடக்குமோ அப்பிடித்தான் பெரிய பொருட் செலவிலை மாநாடு நடந்தது. கன பேர் இந்தியாவிலையிருந்தும் பிற இடங்களிலையுமிருந்து வந்திருந்தவை. மாநாட்டுக்காரார் ஆர் ஆரைத் திருப்திப் படுத்த நினைச்சினமோ அவை எல்லாரையும் கூப்பிட்டிருந்தினம். ஆய்வை வாசிக்க வந்தவை தாங்கள் எழுதிக் கொண்டு வந்ததை முக்கி முக்கி வாசிச்சினம். எல்லாரும் சொன்னது மகளிரை உயர்த்துவம் எண்டும் கிராமத்துப் பொம்பிளையளின்ரை தரத்தை உயர்த்துவம் எண்டும். வழமையா எல்லாரும் வைக்கிற ஒப்பாரிதான் அங்கையும் நடந்தது. அதாவது "யுத்தத்துக்குப் பின்னாலை ஏற்பட்ட பிரச்சினைகளிலை இருந்து பெண்களை எப்பிடி மீட்பம்" எண்டமாதிரியான கோஷந்தான். இப்ப எல்லாம் வியாபாரமாப் போனமாதிரி சர்வதேச மாநாடுகளும் வியாபராமாப் போச்சுது. நுழைவுக்குக் காசு வேண்டினவை.

இல்லைத் தெரியாமல்தான் கேக்கிறன், காலா காலமாப் பொம்பிளையளின்ரை தரத்தை உயர்த்திறம், பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கிறம், தலைமைப் பண்பை வளக்கிறம், அப்பிடிச் செய்யிறம், இப்பிடிச் செய்யிறம் எண்டு தலைகீழா நிக்கிறனியள் பொம்பிளையள் முகம் குடுக்கிற ஏதாவது ஒரு பிரச்சினையை இல்லாமல் செய்திருக்கிறியளோ? இல்லை குறைச்சிருக்கிறியளோ? கடைசி நுண் கடனுக்கு எதிரா ஒரு போராட்டம். ஒரு எதிர்ப்பு. ஒரு கூக்குரல் தன்னும்...? ஒண்டும் இல்லை. அதாலை எத்தின பொம்பிளையள் செத்துப் போச்சினம்? எத்தினை குடும்பங்கள் நடுத்தெருவிலை நிக்குதுகள்?. எத்தினை குடும்பங்களின்ரை தலைவிதியே மாறிப் போச்சுது?

அதைத் திட்மிட்டுச் செய்யிறது பெரிய பெரிய நிறுவனங்கள் எண்டது எல்லாருக்கும் தெரியும். அவைக்கு எதிரா ஏன் நீங்கள் ஒண்டும் செய்யேல்லை? இந்தியாவிலை போடுற மாதிரி ஒரு பொது நல வழக்கு? செய்ய மாட்டியள். ஏனெண்டால் அவை மாதிரி நீங்களும் ஒரு வியாபாரிதானே? அப்ப அந்த லட்சணத்திலை ஒரு சர்வதேச மாநாடு எங்களுக்கு ஏன்? சரி மாநாட்டிலை தன்னும் அப்பிடியான நிறுவனங்களைக் கண்டிச்சு ஒரு தீர்மானம் எடுத்தனியளோ? ஆனபடியாலை உதைவிட்டிட்டுப் போய்க் குப்பை மேட்டைக் கிளறிவிட்டாலும் எப்பன் அதின்ரை சூடாவது ஆறும்.

அதிலையும் ஒரு பகிடி என்னெண்டால், காணாமல் ஆக்கப்பட்ட ஆக்களின்ரை கணக்கை அரசாங்கம் சொல்லுற மாதிரி, ஆளுக்கு ஆள் ஒவ்வொருவிதமான கணக்கைச் சொல்லுச்சினம். காணாமல் ஆக்கப்பட்ட ஆக்களின்ரை சொந்தக்காரர் படத்தையும் சேட்டுபிக்கற்றையும் வைச்சுக் கொண்டு தங்கடை ஆக்களை ஆமி தான் பிடிச்சுக் கொண்டு போனது எண்டு அடிச்சுச் சொல்லினம். அதுக்கு ஆமி ஒரு கணக்குச் சொல்லுது, நேவி ஒரு கணக்கு, எயார்போஸ் ஒரு கணக்கு. அரசாங்கம் ஒரு கணக்கு. எதிர்கட்சி ஒரு கணக்கு. ஐக்கிய நாடுகள் ஒரு கணக்கு. மனித உரிமைகள் அமைப்புகளிட்டை ஒரு கணக்கு எண்டு பலவிதமான கணக்கைச் சொல்லினம். ஆனால் அதின்ரை உண்மையான கணக்கை வைச்சிருக்க வேண்டிய தமிழ் கட்சிகளிட்டை கணக்கே இல்லை. இதைப் பற்றித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிட்டைக் கேட்டால் அப்பிடி ஒண்டு இஞ்சை நடந்ததோ எண்டு கேப்பினம் போலை கிடக்கு.

அப்ப இதுமாதிரி அந்தச் சர்வதேச மகளிர் மாநாட்டிலை இலங்கையிலை அதுவும் தமிழ் பகுதிகளிலை பாதிக்கப்பட்ட பெண்கள் பற்றின தகவல்களை ஒவ்வொரு வரும் ஒவ்வொரு மாதிரிச் சொல்லிச்சினம். ஆரிட்டையும் சரியான கணக்கு இல்லை.விதவைகள் எத்தினை பேர்? ஆரும் சரியான கணக்கைச் சொல்லேல்லை. பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் எத்தினை பேர்? ஆரிட்டையும் சரியான கணக்கில்லை. எத்தினை பேருக்கு அரச உதவி கிடைக்கிது? எத்தினை பேருக்குத் தனியார் உதவி கிடைக்கிது? அப்பிடிப்பட்ட குடும்பங்களின்ரை பொதுவான வாழ்க்கை முறை என்ன? ஆர் உதையெல்லாம் துல்லியமா ஆய்வு செய்தவை எண்டு கேக்கிறன். ஆனால் ஆய்வு செய்தனாங்கள் எண்டு ஒரு கோஷ்டி வெளிக்கிட்டிருக்கினம். அவை செலவு செய்தது லட்சங்களைத் தாண்டும். ஆனால் சரியான கணக்கில்லை. பின்னை என்னத்துக்கு மாநாடு நடத்திறியள்?

கட்சியள் மேதினத்துக்கு ஆக்களைக் கொண்டு வந்த மாதிரி, சாப்பாடும், மாநாட்டுக்கு வாறதுக்கு வாகன வசதி அல்லது போக்குவரத்துச் செலவு குடுத்து ஆக்களைக் கொண்டு வந்து ஒரு பெண்கள் மாநாடு. அதுகும் கிராமப்புற மகளிர் வாழ்க்கையை மேம்படுத்தப் போகினமாம். எப்பிடி விளையாட்டு? கிராமத்துப் புறத்தை மேம்படுத்த நகரத்திலை ஏசி மண்டபத்திலை ஒரு மாநாடு. உது தேவையோ? கோட்டும் ரையும் போட்டுக் கொண்டு பத்தாயிரம் ரூபா மூக்குக் கண்ணாடியை ஏழைகளுக்கு எப்பிடிக் குடுக்கிறது எண்டு தீர்மானிக்க ஒரு லட்சம் ரூபா செலவு செய்து 5ஸ்டார் ஹோட்டலிலை கூட்டம் போடுற கிளப்புகள் மாதிரி இருந்திது அவையின்ரை செலவு சித்தாயங்களைப் பாக்க. இதுக்குச் செலவிட்ட தொகை காணும் ஒரு கிராமத்திலை உள்ள பொம்பிளையளின்ரை வாழ்க்கையை உயர்த்திறத்துக்கு.

மாநாட்டின்ரை பின்னணி தெரியாமல் கூட்டத்துக்கு பல்கலைக் கழகத்திலை இருந்தும் ஆக்கள் வந்திருந்தினம். அரசாங்க அதிபர்களும் வேறையும் பெரிய புள்ளியள். அவைக்குச் சங்கதி தெரியேல்லைப் போலை. வேறை ஒரு பிரளயத்தை மூடி மறைக்கத்தானாம் உந்த நாடகம் எண்டு. மாநாட்டுக்கு வந்த ஆக்கள் கதைச்சுக் கொண்டு இருந்தவை. ஆனால் சத்தியமா எனக்கு ஒண்டும் தெரியாது எண்டு சொல்லமாட்டன்.

அதுக்கை ஒரு பகிடி தெரியுமே? எங்கடை அரசாங்க அதிபர் அந்த மாநாட்டுக்கு நல்லாச் செண்டுதான் வந்தவர். அவரை அவசர அவசரமா மேடைக்குக் கொண்டு போய் விருதும் குடுத்துப் பேசச் சொன்னால், வெய்யிலுக்குள்ளாலை வந்த களைப்போ இல்லாட்டி ரணில் வாற ரென்சனோ தெரியாது அவற்றை பேச்சிலை பிசுறுகள் கனக்க.அவர் பேசேக்கை ஒரு இடத்திலை சொன்னவர், இப்ப கிட்டடியிலை பேப்பரைப் பாக்கேக்கைதான் தனக்கு தெரிஞ்சுதாம் தினமும் ஆயிரக்கணக்கான பொம்பிளையள். இலங்கையிலை பஸ் பயணத்திலை பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகினமெண்டு. எப்பிடிக் கதை?


உந்தக் கதை ஆருக்குக் காதிலை பூச் செருகிற கதை? ஒரு நாளைக்கு எத்தினை கூட்டங்களுக்குப் போறியள்? எத்தினை துறப்புவிழாவுக்குப் போறியள்? மெயின் றோட்டாலைதானே போறியள் வாறியள்? அப்ப பாக்கேல்லையோ சனத்தை ஆடு மாடு மாதிரி அடைஞ்சு கொண்டு மினி பஸ் போறதை? உங்களைச் சுத்தி இருக்கிறவை உதைச் சொல்லேல்லையோ? நீங்கள் ஒபிசிலை இருக்கிறதையும் விட்டிட்டு றோட்டிலை திரியிறதுதான் கூடவாம் எண்டு சனம் கதைக்கிது. அப்ப உங்களுக்குத் தெரியாதோ மினி பஸ்ஸிலை ஏறிச் சனம் படுகிற பாடு. நீங்கள் ஒரு உண்மையான மனுசன் எண்டால் ஒரு நாள் தன்னும் மினி பஸ்ஸிலை காங்கேசன்துறையிலை ஏறி யாழ்ப்பாணரவுனுக்கை இறங்கிப் பாத்திருக்க வேணும்.சனம் கட்டின சாரத்தைக் கையிலை பிடிச்சுக் கொண்டு 'இறங்கிறதை. அதிலையும் விசேஷமாப் பொம்பிளையள் படுகிறபாடு. இல்லைத் தெரியாமல்தான் கேக்கிறன், நீங்கள் எப்ப பஸ்ஸுக்கை கடைசியா ஏறின்னீங்கள்? சரி அப்பிடி ஏறித்திரிய உங்கடை பதவிதான் உங்களை விடேல்லை எண்டு வைச்சுக் கொள்ளுவம், கடைசி கச்சேரிக்கு வேலைக்கு பஸ்ஸிலை வாற பெடிச்சியளைத் தன்னும் கூப்பிட்டுக் கேட்டிருக்கலாம் எல்லே? பஸ் பிரயாணம் எப்பிடி? வசதியா வாறியளோ? எண்டு. அதைவிட்டிட்டு சும்மா கதைக்குக் கதைக்கிறது. தயவு செய்து இனியும் தமிழ் சனத்தின்ரை காதுக்குப் பூ வைக்காதையுங்கோ. கனக்க வைச்சிட்டினம். இனி வைக்க இடமும் இல்லை.

உவையளைப் போல ஆக்கள் பவறிலை இருக்கிறதாலைதான் எங்கடை சனம் நாறிப்போய்க் கிடக்கினம்..! விட்டிட்டுப் போங்கோவன் வீட்டை?

● வில்லங்கம் விநாசி

# கூட்
# ரெ
# வில

நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் 'எதிரொலி'க்கு சிறப்பு நேர்காணல்.



**நேர்காணல்: ஔவண்யன்**

**கேள்வி: ஆயுதப்போராட்டத்தில் நுழைந்து பின்னர் அரசியல் பாதைக்குத் திரும்பியவர் நீங்கள். மக்களுக்காகப் போராடும் போராளி, மக்களுக்காக உழைக்கும் அரசியல்வாதி இந்த இரண்டில் எதுவாக இருப்பது கடினமானது? ஏன்?**

பதில்: உண்மையாகச் சொல்வதானால் அரசியல்வாதியாக இருப்பதுதான் கடினமாக உள்ளது. போராளியாக இருக்கும் போது பயிற்சி, தயார் நிலை, எதிரியிடம் இருந்து எச்சரிக்கையாக இருத்தல் என ஒருசில படிநிலைகளே இருந்தன. வாலிப வயது, ஆயுதத்தின் துணை, தோழர்களின் நட்பு என அதுவொரு வித்தியாசமான அனுபவம்.

ஆனால் அரசியல்வாதி எனும் போது அப்பப்பா... போராட்ட வழிமுறையில் வந்தவன் என்பதால் வழக்கமான அரசியல்வாதிகளுக்கு உரிய பண்புகளைக் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. சுய இயல்புகளை மறைத்துக் கொண்டு சில வேளைகளில் போலியாக நடிக்க வேண்டி இருக்கிறது. அரசியல்வாதியாக எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஒன்றல்ல இரண்டல்ல. வாக்களித்த மக்களின் தேவைகளோ அதிகம். எதிர்க்கட்சி வரிசையில் இருந்து கொண்டு அனைத்தையும் நிறைவேற்றுவது சிரமம். மக்களின் துயரங்களைக் கண்ணால் பார்த்தும் எதுவுமே செய்ய முடியாத கையறுநிலை. மனம் முழுதும் வலி. மறுபுறம் தேர்தல் அரசியல், பங்காளிக் கட்சிகளுடனான உரசல்கள். இன்னும் பல.

**கேள்வி: எப்போதாவது "போயும் போயும் இந்த மக்களுக்காகப் போராடினேனே" என்று உங்களை நீங்களே நொந்ததுண்டா? காரணம்?**

பதில்: இந்தக் கேள்விக்கு இல்லை என்று பதில் தரலாம். எமது மக்கள் அப்பாவிகள். போராளிகளாய் நாம் அவர்கள் காலடிக்குச் சென்றபோதும் எம்மை ஆதரித்தார்கள். அரசியல்வாதிகளாகச் சென்றபோதும் ஆதரவு தந்தார்கள்.

அத்தகைய மக்களை நினைத்து நொந்துகொள்ள என்ன இருக்கிறது. மக்கள் என்ன செய்வார்கள் பாவம்.

அவர்களுக்கு என்று சொந்தக் குரல் இருக்கிறதா என்ன? குறை சொல்லவேண்டுமானால் மக்களை வழிநடத்தும் தலைவர்களையே குறை கூற வேண்டும். அதில் நானும் அடக்கம்.

**கேள்வி: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் புலிகளே உருவாக்கினார்கள் எனச் சொல்லப்பட்டது. ஆனால் அதனைக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் 2009க்குப் பின்னர் பலமுறை மறுதலித்துள்ளார். உண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எப்படி உருவானது?**

பதில்: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விடுதலைப் புலிகள் தாமே உருவாக்கியதாக என்றுமே உரிமை கோரவில்லை.

உண்மையில் மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர்களே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தோற்றுவாய்.

அமரர் சிவராம் தலைமையில் ஜி.நடேசன் உள்ளிட்ட ஊடகவியலாளர்களின் அயராத முயற்சியிலேயே கூட்டமைப்பு தோற்றம் பெற்றது. இதில் நானும் கலந்து கொண்டேன் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த விடயத்தில் விடுதலைப் புலிகளும் உறுதுணையாக இருந்தனர். அதனாலேயே எதிரிகள் அவர்களைக் கொலை செய்யும் சூழல் உருவானது.

**கேள்வி: புலிகளின் அழைப்பின் பேரிலேயே ரெலோவும் கூட்டமைப்பில் இணைந்ததா? அல்லது வேறு சக்திகள் ரெலோவைக் கூட்டமைப்பில் இணைத்தனவா?**

பதில்: கூட்டமைப்பில் எமது கட்சியை இணைப்பது தொடர்பில் எம்மோடு முதலில் பேசியவர்கள் மட்டக்களப்பு மாவட்டப் பத்திரிகையாளர்களே. 2001 ஆம் ஆண்டில் அது நடைபெற்றது. மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர்கள் கூட்டமைப்பின் தேவையை வலியுறுத்தி எம்மோடு கலந்துரையாடிய வேளை, அதிலுள்ள அவசியத்தையும், அவசரத்தையும் உணர்ந்து கொண்டு சம்மதித்தோம். அந்த வேளையில் நாம் தீர்க்கமான பல முடிவுகளை எடுக்க வேண்டி இருந்தது, பாரிய தியாகங்களைச் செய்ய வேண்டி இருந்தது. பின்னாளில் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் அரசியல் துறைப்பொறுப்பாளர் கரிகாலனைச் சந்திப்பதற்குக் கூட மட்டக்களப்பு மாவட்ட பத்திரிகையாளர்களே என்னை அழைத்துச் சென்றிருந்தனர்.

**கேள்வி: ஒரு காலத்தில் புலிகளால் "தேசத்துரோகிகள்" என்று அடையாளமிடப்பட்ட அமைப்புகளில் ரெலோவும் அடக்கம். பின்னர் எப்படி அந்தத் துரோகிப் பட்டம் இல்லாமல் போனது?**

பதில்: இதற்குக் காரணம் எமது செயற்பாடுகளே. கூட்டமைப்பில் நாம் இணைவதற்கு முடிவை மேற்கொண்ட போது, இராணுவத்துடனான எமது உறவைத் துண்டித்துக் கொண்டோம். தொடர்ந்தும் இராணுவத்துடன் செயற்பட்ட எமது உறுப்பினர்களைக் கட்சியில் இருந்து வெளியேற்றினோம். அடுத்ததாக எமக்கு வழங்கப்பட்ட துரோகிப்பட்டம் அடிப்படை அற்றது. நீங்கள் கூறியது போன்று அது விலக்கிக் கொள்ளப்பட்டதில் இருந்தே நான் கூறுவதை உறுதி செய்ய முடியும். எங்கள் இயக்கம் ஈழ விடுதலைப் போராட்டத்தின் முன்னோடி இயக்கம், ஒரு காலகட்டத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கூட எமது இயக்கத்தில் இணைந்திருந்தார் என்பது எத்தனை பேருக்குத் தெரியும்? வரலாறுகளை மாற்றி எழுத முனைந்தால், வரலாறே தன்னைத் திருத்திக் கொள்ளும்.!

**கேள்வி: ரெலோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைவதற்கு முன்னர் கப்பம் கோரல், ஆட்கடத்தல், கொலை போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட்டதோடு, இலங்கை இராணுவத்தின் துணை இராணுவக்குழுவாகவும் இயங்கியதாகக் குற்றம் சாட்டப்படுவது குறித்து என்ன சொல்கிறீர்கள்?**

# ட்டமைப்பை விட்டு ரெலோ ஒருபோதும் லகாது

பதில்: விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடும் இயக்கங்களிடையே வரி அறவிடல் என்பது இயல்பான ஒரு விடயம்.

அதன் பொருளை ஒவ்வொருவரும் தமக்குத் தேவையானவாறு வியாக்கியானம் செய்து கொள்கிறார்கள்.

விடுதலைப் புலிகள் கூட வரி அறவிட்டார்கள் இதனைக் கப்பம் என ஏன் நீங்கள் வர்ணிப்பதில்லை? ஏன் என்றால் அவர்கள் தொடர்பில் உங்கள் பார்வை வேறு. நாங்கள் புனிதர்கள் என்று கூற முயலவில்லை, அதேவேளை நாங்கள் அயோக்கியர்கள் இல்லை என்பதை அறுதியாகக் கூற விரும்புகிறேன். ஒரு சில அத்துமீறல்களை வைத்துக் கொண்டு முழு வடிவம் தர முயற்சிப்பது தவறு.

**கேள்வி: 2018 உள்ளூராட்சித் தேர்தலில் தொகுதிப் பங்கீட்டில் எழுந்த பிரச்சினைகளால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டு ரெலோ வெளியேறுவதாக அறிவித்து, ஈ.பி.ஆர்.எல்.எப் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியவற்றோடும் பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தது. ஆனால் பின்னர் தடாலடியாக மீண்டும் கூட்டமைப்பிலேயே போட்டியிடுவதாகஅறிவித்தது. ஏன் இந்த முரண்பாடும், சரணடைவும் நிகழ்ந்தது?**

பதில்: ஒரு ஜனநாயக அரசியல் கட்சியில் கருத்து முரண்பாடு ஏற்படுவது சகஜம். கருத்து முரண்பாடு ஜனநாயகத்தின் பண்புகளில் ஒன்று. தேர்தல் என்று வரும்போது இத்தகைய கருத்து முரண்பாடுகள் அதிகமாக வெளித் தெரியும் இது இயல்பு. அடுத்ததாக தேர்தலில் வெற்றி பற்றியும் கவனம் செலுத்த வேண்டி உள்ளது. அதை நீங்களும் ஒத்துக்கொண்டே ஆக வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழரசுக் கட்சியின் போக்கு அனைவரும் அறிந்ததே. அவர்களின் சிந்தனைப் போக்கு வேறு. எனவே உரசல்கள் தவிர்க்க முடியாது. தாயகம், தேசியம், தன்னாட்சி என்ற தத்துவங்களின் அடிப்படையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கம்பெற்றது. அதன் ஸ்தாபகக் கட்சிகளுள் எங்கள் கட்சியும் ஒன்று. எனவே எங்களுக்கு வாதாடும் உரிமை இருக்கிறது மற்றும்படி முரண்பாடு, சரணாகதி என்பதெல்லாம் ஊடகங்களின் கற்பனை.

**கேள்வி: கூட்டமைப்பை விட்டு வெளியேறினால் குழுக்களின் பிரதித் தவிசாளர் பதவி பறிபோய்விடும் என்று நீங்கள் தான் ரெலோவை மீண்டும் கூட்டமைப்போடு சங்கமமாக்கியதாகச் சொல்லப்படுகிறதே?**

பதில்: சிறந்த கற்பனை. 2018 ஆம் ஆண்டின் சிறந்த நகைச்சுவை. உயிரைப் பணயம் வைத்து விடுதலைக்காகப் போராடிய ஒரு இயக்கத்திடம் இத்தகைய கேள்வியைக் கேட்க உங்கள் மனச்சாட்சி எப்படி இடம் தந்தது என்பது புரியவில்லை. நாங்கள் தேர்தல் அரசியலுக்கு வந்தது ஒரு தற்செயல் நிகழ்வு. தேர்தலில் போட்டியிடுவதற்காக இயக்கம் கட்டியவர்கள் அல்ல நாங்கள். பதவிகள் எங்களுக்கு கால்தூசு. மக்கள் பணியே எங்களின் முதன்மைக் குறிக்கோள்.

**கேள்வி: உள்ளூராட்சித் தேர்தலின் போதும், அதன் பின்னர் சபைகளில் ஆட்சியமைக்கும் போதும் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான தமிழரசுக் கட்சி நியாயபூர்வமாக நடந்து கொண்டதா, நடந்து கொள்கிறதா?**

பதில்: கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நாங்கள் அதில் அங்கம் வகிக்கும் மற்றொரு பங்காளிக் கட்சி தொடர்பில் பகிரங்கமாக ஊடகங்களில் பேசுவது பொருத்தமற்றது. எங்கள் பிரச்சினைகளை நாங்களே பேசித் தீர்த்துக்கொள்வோம். அது எங்கள் உரிமை.

**கேள்வி: தற்போது மீண்டும் கூட்டமைப்புக்கும்–குறிப்பாகச் சொன்னால் தமிழரசுக் கட்சிக்கும் – ரெலோவுக்கும் இடையே பல விடயங்களில் முரண் நிலை தோன்றியுள்ளது. மாகாண சபைத் தேர்தலில் அதிக தொகுதிகளைக் கேட்டு வாங்கவே இப்படி மோதல் போக்கை ரெலோ கடைப்பிடிப்பதாகச் சொல்லப்படுவது குறித்து..?**

பதில்: எங்கிருந்து உங்களைப் போன்றவர்களுக்கு இத்தகைய கேள்விகள் எழுகின்றன எனத் தெரியவில்லை.

இன்றைய நிலையில கூட்டமைப்பில் 3 கட்சிகளே உள்ளன. அதில் இரண்டாவது பெரிய கட்சியாக நாங்கள் உள்ளோம். அதுமட்டுமின்றி ஆரம்பம் முதலாக நாங்கள் அங்கம் வகித்து வருகின்றோம். முன்னர் 4 கட்சிகளுக்குள் பங்கிடப்பட்ட இடங்களைத் தற்போது 3 கட்சிகளுக்கு இடையில் பங்கிடக் கேட்கிறோம்.

இதில் என்ன தவறு? எங்களுக்கும் வாக்கு வங்கி இருப்பதனாலேயே தொடர்ந்து தேர்தல்களில் வெற்றி பெற்று வருகின்றோம். அதேவேளை நீங்கள் கூறுவதைப் போன்று சிறுபிள்ளைத்தனமான விளையாட்டுக்களில் நாங்கள் ஈடுபடுவதில்லை. அதற்கு எங்களுக்கு நேரமும் இல்லை.

**கேள்வி: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டு ரெலோ வெளியே வந்தால், அதன் அரசியல் இருப்பைத் தக்க வைத்துக் கொள்ள முடியுமா?**

பதில்: எதற்காக நாங்கள் வெளியே வர வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கியதில் பங்கு கொண்டவர்கள் நாங்கள். எங்களுக்குக் கூட்டமைப்பில் அனைத்து உரிமைகளும் இருக்கின்றன. எங்கள் கட்சியின் உரிமைக்காக நாங்கள் விட்டுக்கொடுக்காது போராடுவோம். நாங்கள் அடிப்படையில் போராளிகள். எப்போது எத்தகைய உத்தியைப் பாவிக்க வேண்டும் என நன்கு அறிந்தவர்கள் நாங்கள். எனவே உங்கள் கேள்விக்கு அடிப்படையே இல்லை.

**கேள்வி: வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தற்போதைய முதலமைச்சர் விக்னேஸ்வரனை ஓரங்கட்டிவிட்டு, வேறு நபர்களை முதலமைச்சர் வேட்பாளராக அறிவித்தால் அதனை ரெலோ ஆதரிக்குமா, எதிர்க்குமா?**

பதில்: மக்களுடைய சுதந்திரமான வாழ்க்கைக்கும் அவர்களுடைய வாழ்வாதாரத்தை நிலைகொள்ளச் செய்யவும் ஒற்றுமை மிகவும் அவசியம். அவர்களின் ஒற்றுமையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் வலியுறுத்தவும், தேர்தலுக்கு முன்னர் முதலமைச்சர் வேட்பாளர் தொடர்பான எமது கருத்துக்களை நிச்சயம் வெளிப்படுத்துவோம்.

**கேள்வி: முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்ட போதும், கடந்த 16 ஆம் திகதி மாகாண சபையில் முதலமைச்சருக்கு எதிரான சிறப்பு அமர்வின் போதும் ரெலோ நடந்து கொண்டவிதம் முதலமைச்சருக்குச் சார்பானதாகவே இருந்தது. எனவே சில சந்தர்ப்பங்களில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டு முதலமைச்சர் விக்னேஸ்வரன் வெளியேறி புதிய கூட்டணி ஒன்றை அமைத்தால், அதில் ரெலோ இணையுமா?**

பதில்: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்குவதில் முக்கிய பங்கு கொண்டவர் என்ற ரீதியிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலவீனப்பட்டுவிடக்கூடாது என்பதற்காக முதலமைச்சருக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கை இல்லாத் தீர்மானத்துக்கு எதிராக ஆதரவு வழங்கினோம். ஒற்றுமை கருதியே எங்களுடைய கருத்துக்கள் இருந்து கொண்டிருக்கின்றன. எங்களுடைய பிரிவால் தென்னிலங்கையைச் சேர்ந்த சிங்களக் கட்சிகள் வலுவாகக் காலை ஊண்டுவதற்கான அபாயம் இருக்கிறது. சில சந்தர்ப்பங்களில் கூட்டாட்சி என்று வருகின்றபோது யாரிடம் பேசப்போகிறோம் என்ற கேள்வி எழும் எனவே நாங்கள் ஒற்றுமையாக இல்லாவிட்டால் பாரிய பின்னடைவைப் பொறுப்பேற்க வேண்டிவரும்.


ஆகவே ஒற்றுமைக்காக நாங்கள் உழைப்போம். மக்களுடைய விடுதலை என்று சொல்லுகின்ற தமிழ்க் கட்சிகள் யாருமே பிரிவினையைத் தோற்றுவிக்கும் வாய்ப்பை உண்டுபண்ணக்கூடாது. இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், விக்கினேஸ்வரன் ஐயாவுக்கும்ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கும் பொருந்தும்.

**கேள்வி: வடக்கில் வாக்கரசியலிலும் ஆதிக்கம் செலுத்தும் முன்னர் ஆயுதக் குழுக்களாக இருந்து அரசியல் பாதைக்கு வந்த ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், ஈ.பி.டி.பி என்பன, கிழக்கு மாகாணத்தில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியளவுக்கு வாக்கரசியலில் வெற்றிகளை எட்டமுடிவதில்லையே. இது ஏன்?**


பதில்: கிழக்கு மாகாணத்தில் எங்களுடைய மக்களுடைய இருப்பைத் தக்கவைக்கின்ற பாரிய பொறுப்பு எங்களுக்கும் இருக்கிறது. அதைப் பல வழிகளிலும் நாங்கள் நிரூபித்து வருகின்றோம். வாக்கரசியலுக்கு அப்பால் கிழக்கு மாகாணத்திலே குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் தமிழர்களின் இருப்பு கேள்விக் குறியாக்கப்படுகின்ற செயற்பாடுகள் அங்கு அதிகம் இடம்பெறுகின்றன. அதற்காக ஆயுதமேந்திய போராட்ட இயக்கங்களான ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் குரல் கொடுத்து வருகிறோம். இணைந்த வடக்கு, கிழக்கிலே எங்களுடைய மக்களின் இருப்பைத் தக்க வைக்கின்ற பாரிய பொறுப்பும் கடமையும் எங்களுக்கு உண்டு. ஆகவே இந்தக் கேள்வி எங்களை சிறுமைப்படுத்துவது போல் தோன்றுகிறது.

இந்தக் கேள்விக்கு முதலில் பதில் கூறக் கடமைப்பட்டவை ஊடகங்களே. உங்கள் கேள்வியில் கூட நீங்கள் எங்களை "ஆயுதக்குழு" என்ற வரையறைக்குள் அடக்கவே விரும்புகிறீர்கள். நாங்கள் ஓர் ஆயுதக்குழுவா?

கொள்ளையடிப்பதற்காகவா நாங்கள் இயக்கம் நடத்தினோம்? மக்கள் மத்தியில் எங்களைப் பற்றிய விசக் கருத்துக்களைப் பரப்புபவை ஊடகங்களே. நீங்கள் உங்கள் போக்கை மாற்றிக் கொண்டால் மக்களின் அபிப்பிராயமும் நிச்சயமாக மாறும். நாங்கள் அன்றும் இன்றும் நாங்களாகவே உள்ளோம்.



# பிரபாகரன் அவர்களை ஏன் சந்தித்தார்?



கருணாகரன்

முள்ளிவாய்க்கால் பேரவலத்தையும் விட பெரிய அவலமெல்லாம் அதற்குப் பிறகுதான் நடக்கின்றனவா? என்று சிலவேளை எண்ணத் தோன்றுது.

ஏனென்றால், "பிரபாகரனுக்கு நிகராக இதோ இன்னொரு பிரபாகரன், எங்கள் பிரபாகரன்" - என்று சீமானைப் பற்றிப் பகிரங்கமாகப் பாராட்டிப் பேசியிருக்கிறார் பாரதிராஜா. சீமானே தானே புலிகளின் வாரிசு. தமிழர்களின் திசைகாட்டி. புதிய வரலாற்றுப் படைப்பாளி என்றெல்லாம் சொல்கிறார். இதையெல்லாம் எப்படிச் சகித்துக் கொள்வது என்று தெரியவில்லை. இவ்வளவுக்கும் இவர்கள் இருவரும் ஒரேயொரு தடவைதான் பிரபாகரனை நேரில் பார்த்திருக்கிறார்கள். அதுவும் அரசியல் ரீதியான சந்திப்பாகவோ ஆயுதப்போராட்டத்தை முன்னெடுப்பதற்கான சந்திப்பாகவோ இருக்கவில்லை. பிரபாகரன் அப்படியொரு சந்திப்பை பொதுவாக வெளியே யாரோடும் செய்வதில்லை. அவர் தன்னுடைய தீர்மானத்தின்படியே போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றார். தன்னுடைய அரசியலிலும் போராட்ட வழிமுறைகளிலும் யாரையும் அவர் கலக்க விடுவதில்லை.

பாரதிராஜாவும் சீமானும் பிரபாகரனைச் சந்தித்தது, 2004 ற்குப் பிறகே. அதற்கு முன்பு 1980 களில் தமிழ்நாட்டில் பிரபாகரன் தங்கியிருந்த காலத்தில் பாரதிராஜாவை அவர் சந்திக்கவில்லை. அவர் மட்டுமல்ல, புலிகளின் தரப்பிலிருந்து எவரும் சந்திக்கவில்லை. அதற்கு அவசியமும் இருக்கவில்லை. ஆனால் அப்பொழுதே பாரதிராஜா சினிமாவில் புகழடைந்திருந்தார். இருந்தாலும் பாரதிராஜாவைச் சந்திக்க வேணும் என்று புலிகள் எண்ணவில்லை. பாரதிராஜாவையே அக்கறைப் படாதவர்கள் சீமானையா தேடியிருப்பார்கள்? அப்படியொரு பெயரே அப்பொழுது இருந்திருக்கவே இல்லை.

2002இல் ரணில் - பிரபா உடன்படிக்கையில் மலர்ந்திருந்த போர் நிறுத்தக் காலத்தில் இந்தியாவில் இருந்து சில பிரபலங்கள் வன்னிக்கு வந்திருந்தனர். கூடுதலாகச் சினிமாத்துறை சார்ந்தவர்கள். "உதிரிப்பூக்கள்" மகேந்திரன், அவருடைய மகன் ஜான் (விஜய் நடித்த சச்சின் படத்தின் இயக்குநர்), பாரதிராஜா, கவிஞர் அறிவுமதி, ஓவியர் மருது, தங்கர் பச்சான், சீமான், இயக்குநர் புகழேந்தி, ஓவியர் புகழேந்தி, ஒளிப்பதிவாளர் சந்தோஸ், பாடகர்கள் எஸ்.என். சுரேந்திரன், ரீ.எல். மகாராஜன், நடிகர்கள் நந்தா, மணிவண்ணன், மதுமிதா, நீலிமா எனப் பலர்.

இவர்களில் எவரோடும் பிரபாகரன் அரசியல் பேசவேயில்லை. அதற்காக அவர்கள் வரவும் இல்லை. அரசியலுக்காகவோ போராட்டத்துக்காகவோ (ஆட்லறி அடிப்பதற்காக) புலிகள் அவர்களை அழைக்கவும் இல்லை. அவர் (பிரபாகரன்) பேசியதெல்லாம் புலிகளுக்கான சினிமா, புலிகளின் இசைத்துறை, கலைத்துறை போன்றவற்றின் வளர்ச்சிக்கு ஏதாவது செய்ய முடியுமா என்று மட்டுமே.

வந்தவர்கள் எல்லாம் புலிகளைப் பார்த்துப் பிரமித்துப் போய் நின்றனர். அநேகமாக சினிமா நாயகப் பிம்பங்களோடு வாழ்ந்தவர்களுக்கு நிய நாயகர்கள், நிஜ வீரர்களாக நின்றது அதிர்ச்சியையோ ஆச்சரியத்தையோ உண்டாக்கியிருக்கலாம். அப்படியே அசந்து போனர்கள்.

"உங்களுக்காக எதையும் செய்வோம். இதைக்கூடவா எங்களால் செய்ய் முடியாது" என்று உருகினார்கள். சிலர் சொன்னார்கள், "இனி ஈழத்தில் எடுக்கப்படும் சினிமாவே உலக சினிமாவை ஆளப் போகிறது. தமிழ்ச்சினிமாவுக்குப் புதிய முகவரியே கிடைக்கப்போகிறது" என்றெல்லாம்.

இதையிட்டு பிரபாகரன் நிச்சயமாக உள்ளுக்குள்ளே சிரித்திருப்பார். ஆனாலும் வெளியே அவர் அதைக் காட்டிக் கொள்ளவில்லை.

இதற்காக வன்னிக்கு அழைக்கப்பட்ட அத்தனை பேருடைய செலவையும் புலிகளே பார்த்துக் கொண்டனர்.

வந்தவர்களில் மகேந்திரன் பெறுமதியான வேலைகள் சிலவற்றைச் செய்தார். புலிகளின் திரைப்படத்துறையைச் சேர்ந்த போராளிகளுக்கும் கலைஞர்களுக்கும் சினிமாவைப் பற்றிக் கற்பித்தார். ஏறக்குறைய நான்கு மாதங்களுக்கு மேலாக வன்னியில் தங்கியிருந்தார் மகேந்திரன்.

அப்பொழுது "திரைக்கதை என்பது" "நடிப்பு என்பது" என இரண்டு புத்தகங்களை எழுதினார். அவற்றை "நிதர்சனம்" சார்பில் வெளியிட்டேன். தங்கியிருந்த காலத்தில் உலக சினிமா முதல் தமிழ் சினிமா வரையில் பல படங்களைக் காண்பித்தும் விளக்கியும் புதிய சினிமாவைப் பற்றிய சிந்தனையை உருவாக்கினார். கூடவே சில குறும்படங்களையும் உருவாக்கினார். அதில் முக்கியமானது, எழுத்தாளர் தாமரைச்செல்வியின் "இடைவெளி" சிறுகதையை "1996" என்ற பெயரில் எடுத்த படம். 22 நிமிடங்கள் கொண்ட இந்தப் படத்தை மகேந்திரனின் மேற்பார்வையில் புலிகளின் திரைத்துறை உருவாக்கியது. முல்லை யேசுதாசனும் மகிழும் முக்கிய பாத்திரங்களில் நடித்திருந்தனர். அடுத்த படம் "பாதணி". அதை மகேந்திரனின் மகன் ஜான் இயக்கினார். அதைத் தொடர்ந்து "ஆணி வேர்" என்ற முழுநீளப்படம் உருவாக்கப்பட்டது. இதில் நடிப்பதற்காக இந்தியாவிலிருந்து நந்தா, மதுமிதா, நீலிமா போன்றோர் வந்திருந்தனர். இந்தப் படத்தையும் ஜானே நெறிப்படுத்தினார்.

தங்கர் பச்சான் புதிய சினிமா ஒன்றுக்கான கதை, களம் போன்றவற்றைப் பற்றிப் பேசினார். கொக்கிளாய் தொடக்கம் மண்டைதீவு, நெடுந்தீவு வரை சென்று லொக்கேசன் பார்த்தோம். ஆனால், அவருடைய முயற்சிகள் எதுவும் பிறகு வன்னியில் நடக்கவில்லை.

இயக்குநர் புகழேந்தி ஏற்கனவே தான் எடுத்திருந்த "காற்றுக்கென்ன வேலி" என்ற படத்தின் நிமித்தமாக அழைக்கப்பட்டிருந்தார். அடுத்துப் புதிய படமொன்றை உருவாக்கப்போகிறேன் என்று சொன்னார் புகழேந்தி. அதற்குப் பிறகு அப்படியொன்று வந்ததாகச் சேதியில்லை.

சீமான் வந்திருந்து இனத்தனித்துவம் பற்றியே பேசினார். "தமிழினத்தின் சிறப்பு என்ன என்று தெரியுமா?" என்று கேட்டு விளக்கமளித்தார். "தமிழர்களுக்கெல்லாம் தலைவராக இன்று யார் இருக்கிறார் என்று அறிவீர்களா?" என்று கேட்டார். "நீங்கள் யாருமே பிரபாகரனைச் சரியாக அறியவில்லை" என்று கடிந்தார்.

இதையெல்லாம் கேட்டுப் பலர் குழம்பியே விட்டார்கள். குறிப்பாகப் போராளிகளின் சந்திப்பொன்றில் இப்படிச் சீமான் கேட்கவும் "இதையெல்லாம் தெரியாமல் தான் நாங்கள் முப்பது வருசமாகப் பிரபாகரனோட நிற்கிறமாக்கும்" என்றார் ஒரு புலித்தளபதி. "சீமான் எங்களுக்கு எந்தப் புதுச் சாமானையும் காட்ட வேண்டியதில்லை" என்றார் புலிகளின் மூத்த உறுப்பினர் ஒருவர். மற்றும்படி சீமான் சினிமாவுக்கும் ஒன்றும் செய்யவில்லை. போராட்டத்துக்கும் ஒன்றும் பங்களிக்கவில்லை. விருந்தாளியாக வந்து அப்படியே திரும்பிச் சென்றார். போனவர் பிறகொருபோது சொன்னார், தான் ஈழத்தில் பாதிக்கப்பட்ட பெண் போராளி ஒருவரையே திருமணம் செய்து கொள்ளப்போவதாக. ஆனால், நடந்ததோ வேறு.

அப்படித்தான் பாரதிராஜாவின் வருகையும் எந்தப் பெறுமதிகளையும் வன்னிக்குக் கொடுக்கவில்லை. வன்னிக்கு மட்டுமல்ல, ஈழத்தமிழருக்கே கொடுக்கவில்லை என்றே சொல்ல வேணும். பாரதிராஜா கிளிநொச்சியில் திரைத்துறையில் ஈடுபட்டவர்களையும் கலைஞர்களையும் சந்தித்தார். கிளிநொச்சி திருநகரில்தான் சந்திப்பு நடந்தது. அப்பொழுது, "மணிரத்தினத்தின் "கன்னத்தில் முத்தமிட்டால்" படத்தையும் கமல் ஹாசனின் "தெனாலி"யையும் ஏற்றுக் கொள்ள முடியாது. அவை இரண்டும் ஈழத் தமிழரின் போராட்டத்தைக் கொச்சைப்படுத்துகின்றன. ஈழ அரசியலும் ஈழ நிலவரமும் தெரியாமல் எடுக்கப்பட்ட படங்கள். இதைப்பற்றி உங்களுடைய நிலைப்பாடென்ன?" என்று ஒரு கேள்வியை எழுப்பினார் போராளிக் கலைஞர் ஒருவர்.

மடியிலேயே ஆட்லறி செல் விழுந்து வெடித்தமாதிரி இருந்தது பாரதிராஜாவுக்கு. சத்தமில்லாமல் சிரித்துக் கொண்டிருந்தார் இரண்டு நிமிசத்துக்கும் மேல். பிறகு "கமலும் மணியும் என்னுடைய நண்பர்கள். அவர்கள் நல்லவர்கள்" என்றார்.

"நல்லவர்கள் இப்படிச் செய்யலாமா?" என்று எழுந்தது மறு கேள்வி.

கையில் கட்டியிருந்த மணிக்கூட்டில் நேரத்தைப் பார்த்தார் இயக்குநர் சிகரம். நிலைமையைப் புரிந்து கொண்ட நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் "இத்துடன் நிகழ்ச்சியை முடிக்கப்போகிறோம். இயக்குநர் வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது" - என்று மணிரத்தினத்தையும் கமலையும் பாதுகாத்த பாரதிராஜாவைப் பக்குவமாகக் காப்பாற்றிச் சென்றனர்.

ஆனால், எல்லோரும் தமிழ்நாட்டுக்குப் போன பிறகு வன்னிக்குப் போனோம். (ஏதோ தங்களின் செலவில், சுய முயற்சியில் போனதைப்போல) அங்கே புலிகளைச் சந்தித்தோம், பிரபாகரனைக் கண்டோம், பேசினோம் என்றெல்லாம் பேட்டி கொடுத்தனர். சிலர் வாரப்பத்திரிகைகளில் விறுவிறுப்பான தொடரே எழுதிக் காசு சம்பாதித்தனர். கூடவே பிரபாகரனோடும் புலிகளோடும் நின்ற படங்களையும் பிரசுரித்துப் புகழுயர்த்தினர்.

இவர்களெல்லாம் புலிகளையும் பிரபாகரனையும் சந்தித்து பத்து ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. இந்தப் பத்தாண்டு காலத்தில் ஒரு படத்தையாவது ஈழப்பிரச்சினையை வைத்து உருப்படியாக எடுத்தார்களா? அல்லது ஈழச்சினிமா முயற்சிகளுக்கும் பிற கலைத்துறை மேம்பாட்டுக்கும் எப்போதாவது உதவியிருக்கிறார்களா?

ஆனால், மேடைக்கு மேடை, வார்த்தைக்கு வார்த்தை புலி என்றும் பிரபாகரன் எனவும் சொல்லியே பொழுதைப் போக்குகிறார்கள்.

இப்பொழுது பார்த்தால் "புதிய பிரபாகரனையே" "இயக்குநர் சிகரம்" உருவாக்கி விட்டார்.

சினிமாவில் சில பாத்திரங்களை உருவாக்குவது உண்டு. அவை வெறும் பிம்பங்களே. நிஜமல்ல. நிஜம் போலத்தோன்றும் பாத்திரங்கள். பாரதிராஜா தன்னுடைய சினிமாவில் மறக்க முடியாத பல பாத்திரங்களை உருவாக்கியவர்.

ஆனால், சீமானை வைத்து எதை உருவாக்கப்போகிறார்? என்ன மாதிரியான பிம்பத்தை? அல்லது எத்தகைய பாத்திரத்தை?

எல்லாவற்றுக்கும் அப்பால் புலிகளும் பிரபாகரனும் இப்போது யாரும் எப்படியும் (ஊறுகாய்போல) பயன்படுத்திக் கொள்ளலாம் என்றாகி விட்டதா? முள்ளிவாய்க்கால் அவலத்தையும் விட இந்த அவலம் புலிகளுக்குப் பெரிதே. ■

■எஸ்.பிரதா

# மலைநாடு மறந்த மகாத்மா!



அடக்குமுறையாலும்,வறுமையின் கோரத் தாண்டவத்தாலும் வாழ்க்கையை இழந்து தவிக்கும் மக்களின் வாழ்வில், ஒளிபிறக்க வேண்டி தமது வாழ்வையே அர்ப்பணிப் பவர்களையும், சொத்து, பணமென அனைத்தையும் மக்களுக்காகவே வாரி வழங்கிய எவ்வித பந்தாவும் கட்டாமல் எளிமையாகவே வாழ்ந்து மடியும் மனி தர்களையும் இன்றைய நவீன உலகில் சினிமாப் படங் களில் மட்டுமே காணக்கூடியதாக இருக்கின்றது.

ஆனால், நிஜவாழ்விலும் இப்படியான மகான் கள் வாழ்ந்திருந்தாலும் அவர்கள் தற்புகழைத் தேடிச் செல்லாமையால் வரலாற்றிலிருந்து இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளனர் என்பது கசப்பான உண்மை யாகும். அவர்கள் பற்றி நாம் அனைவரும் கட்டாயம் அறிந்து வைக்கவேண்டும்.

இப்படித்தான் மலையக மக்களுக்கு கல்விக்கண் ணைத் திறப்பதற்காகவும், தொழிலாளர்களின் உரி மைகளை வென்றெடுப்பதற்காகவும் சொத்துகளை யெல்லாம் விற்று, கிடைத்த அரச சேவையையும் துறந்து திருமணம் கூட முடிக்காமல் செத்து மடியும் வரையும் மக்களுக்காகவே வாழ்ந்தவர்தான் மலைய கக் காந்தியெனப்போற்றப்படும் கே. இராஜலிங்கம்.

இன்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸா கவும் அன்று இலங்கை- இந்தியக் காங்கிரஸாகவும் இருந்த அமைப்பின் ஸதாபகப் பொதுச்செயலாளர் இவர்தான். அவ்வமைப்பின் தலைமைப் பதவியை யும் அலங்கரித்தவர். நாடாளுமன்ற உறுப்பின ராகவும் செயற்பட்டவர். புஸல்லாவை சரஸ்வதி மத் தியக்கல்லூரியின்ஸ்தாபகராகவும்இருந்தவராவார்.

தோட்டத் தொழிலாளர்களுக்காக இவர் செய்த சேவைகளையும்,தியாகங்களையும் வெறும் வார்த் தைகளால் மட்டும் விபரித்துவிட முடியாது.

இப்படியானதொரு மகானை வரலாற்று ஏட் டில்ல் இடம்பெறவைக்கும் நோக்கில் அவர் வாழ்ந்த வீடு தேடிச் சென்று தகவல்களைத் திரட்டினோம்.

### பிறப்பும் கல்வியும்

18 ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் தலைவிரித் தாடிய பெரும் பஞ்சத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி தொழிலாளர்களைக் கைக்கூலிகளாக இலங்கைக்கு அழைத்து வந்தது முதலாளிவர்க்கம்.

இவ்வாறு இடம்பெயர்ந்து வந்தவர்களில் ராமன் என்பவரும் ஒருவர். கம்பளையிலிருந்து புல் லாவை நோக்கிச் செல்லும் வழியிலுள்ள சங்கு வாரித் தோட்டத்தில் குடியேறினார் ராமன் . கடின உழைப்பால் காலப்போக்கில் பெரிய கங்காணியா கவும் நியமிக்கப்பட்டார். இவரின் மூத்தமகன் தான் காளிமுத்து. இவரும் சங்குவாரித் தோட்டத்தில் பெரியகங்காணியாகப் பதவிவகித்தார்.

காளிமுத்துக்கங்காணிக்கும்,காளியம்மாளுக்கும் பிறந்த ஆறு குழந்தைகளில் மூத்தவர் தான் நமது நாயகன்கே. ராஜலிங்கம். 1909 ஆம் ஆண்டு டிசெம்பர் 3 ஆம் திகதி பிறந்தஅவர்,சிறுவயது முதலே கல்வி மீதும்,சமூகம் மீதும் அதிக பற்று வைத்திருந்தார். தனது தந்தை பெரியகங்காணியென்பதால் ஆரம்பக் கல்வியை கம்பளை,அன்றூஸ் கல்லூரியில் பயின்றார்.

உயர்கல்வியை கண்டி,புனிதஅந்தனீஸ் கல்லூ ரியில் கற்றார். கல்வியில் சிறந்துவிளங்கிய இவர், தமிழ், ஆங்கிலமென இரண்டுமொழிகளிலும் பாண் டித்தியம் பெற்றிருந்தார். சர்வதேசப் பரீட்சைக ளிலும் சித்தியடைந்தார். இதனால்,தமது பாட சாலைக்கே இவரை ஆசிரியராக நியமித்தது பாட சாலை நிர்வாகம்.

### சரஸ்வதி பாடசாலை உதயம் - 1932

கற்பிப்பதற்காக இவர் பாடசாலைசெல்லும் போது,தோட்டப்பகுதியிலுள்ளபிள்ளைகள்,தேயிலை மலைகளுக்கோரம் காலை முதல் மாலைவரை இருப்பதைகண்டுள்ளார். ஏன் எமது மக்கள் இவ் வாறு ஒதுக்கப்படுகின்றனர், ஓரங்கட்டப்படுகின்றனர் எனச் சிந்தித்த அவர்,தோட்டப்பகுதிப் பிள்ளைக ளுக்கு கல்வி அமுதூட்டும் முடிவுக்கு வந்தார். இதனால்,ஆசிரியர் பதவியைத் துறந்து சங்குவாரித் தோட்டத்தில் கூடாரம் அமைத்துப் பாடசாலை அமைத்தார். தோட்டங்களுக்குச் சென்று கல்வி விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்தினார்.

இதற்காக தனது தந்தையிடமும், சகோதரர்களி டமுமே பணம் பெற்றார். ஏனைய தோட்டப் பகுதிகளிலுமுள்ளவர்கள் பயிலவேண்டும் என்ற நோக்கில் புஸல்லாவை சரஸ்வதி வித்தியாலயத்தை 1932 இல் ஆரம்பித்தார்.

தனது தந்தைக்குச் சொந்தமான தேயிலைத் தோட்டமொன்றை விற்பனை செய்தே பாட



சாலையை அவர் நிறுவினார். (கம்பளையிலிருந்து, புஸல்லாவைக்குச் செல்லும் வழியில்,அட்டபாகை எனும் நகரம் தாண்டியதும் உள்ள பாஸ்ரோக் தோட்டமே விற்கப்பட்டது). அதன் பின்னர் ஆசி ரியர்களுக்கான சம்பளம் உள்ளிட்ட சேவைகளுக் காக வீட்டிலிருந்த தங்க ஆபரணங்களையும் அவர் விற்றார்.

குடும்ப உறுப்பினர்கள் ஆரம்பத்தில் அவரின் இந்த முயற்சிக்கு எதிர்ப்பு வெளியிட்டனர். எனி னும், மக்களுக்காக அவற்றைப் பொருட்படுத்தாது தன் முயற்சியை ராஜலிங்கம் தொடர்ந்தார். இத னால், அவரது தந்தையும், சகோதரர்களும் பொரு ளாதார மட்டத்தில் கீழிறங்கினர். இவரால் ஆரம் பிக்கப்பட்ட சரஸ்வதி வித்தியாலயம், இன்று ஒரு தேசியப் பாடசாலையாகச் சிறந்துவிளங்குகின்றது.

தோட்டப்பகுதிகளிலுள்ளஆயிரக்கணக்கான மாணவர்கள் அங்கு பயில்கின்றனர். சமூக மாற் றத்துக்கு கல்விப் புரட்சியே சிறந்த வழி. அதை அன்றே உணர்ந்தவர்தான் கே. இராஜலிங்கம்.

### இலங்கை, இந்தியகாங்கிரஸ் உதயம் - 1939

இலங்கை, இந்திய காங்கிரஸ் 1939 ஆம் ஆண்டு உதயமானது. மகாத்மாகாந்தியின் சிறப்புப் பிரதி நிதியாக நேரு கொழும்பு வந்திருந்தார். அவரின் மத்தியஸ்தத்துடனேயே அவ்வமைப்பு உதயமானது. அதன் ஸ்தாபகப் பொதுச்செயலாளராக இராஜ லிங்கமே நியமிக்கப்பட்டார்.

காந்தி,நேரு ஆகியோர் இலங்கை வந்தபோதெல் லாம் அவர்களைச் சந்தித்து பெரும் வரவேற்றை பெற்றிருந்ததால், இவர்களின் ஆசியுடனேயே பொதுச்செயலாளர் பதவி அவருக்கு வழங்கப்பட் டது. தனது பேச்சை உரைபெயர்ப்பதற்கு இராஜ லிங்கத்தையே நேரு அழைப்பார்.

1940 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி இலங்கை, இந்திய காங்கிரஸின் முதலாவது மாநாடு கம்பளையில் நடைபெற்றது. தொண்ட மானுடன் இணைந்து இவரே மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தார். 47 முதல் 50 வரை இ.தொ.கா.வின் தலைவராகவும் பதவி வகித்தார். அன்று சந் தாப்பணம் இருக்கவில்லை. இதனால்,சொந்தப் பணத்தைப் பயன்படுத்தியே இவர் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டார். ஜெனிவா மாநாடு உட்பட பல இடங்களுக்குச் சொந்தப் பணத் திலேயே தொழிலாளர்களுக்காகச் சென்றுள்ளார்.

சௌமியமூர்த்தி தொண்டமானின் நம்பிக்கைக் குரிய பாத்திரமாகத் திகழ்ந்தவர். ஏன்,தளபதி என்று கூடசொல்லாம். அஸீஸ்,வெள்ளையன், வேலுப் பிள்ளையென முக்கிய தலைவர்கள் கட்சிலிருந்து வெளி யேறும் போது தொண்டமானுக்குப் பக்கபலமாக இவரே கை கொடுத்தார். 42 இல் அஸீஸ் காங்கிர ஸைக் கைப்பற்றியபோது தொண்டமான் பக்கம் நின்று குரல்கொடுத்தார். இப்படி இன்றுள்ள இ.தொ. காவின் வளர்ச்சியில் இவருக்குப் பெரும் பங்குண்டு.

### காரை விற்றுப் பணம் கொடுத்த கர்ணன்

தொழிலாளர்களுக்காக அவர் பல இடங்க ளுக்குச் செல்வதால், தந்தையால் காரொன்று வாங்கிக் கொடுக்கப்பட்டது. நாவலப்பிட்டிய, லட் சுமித் தோட்டத்தில் நடைபெற்ற போராட்டத் துக்குச் சென்றிருந்த அவர், அங்கு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் சாப்பிடாமல் இருப்பதை அறிந்தார். உடனே காரை விற்பனை செய்த அவர், அந்தப் பணத்தைத் தொழிலாளர்களுக்கு வழங்கி விட்டு, பாதி தூரம் கால்நடையாகவும், மீதித் தூரம் பஸ்ஸிலூமாக வீடு வந்து சேர்ந்தார்.

1947 ஆம் ஆண்டு நாவலப்பிட்டிதேர்தல் தொகுதி ஊடாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவான அவர், எந்தவொரு சலுகையையும் பெற்றதில்லை. திருமண வாழ்வில் இணைந்தால் குடும்பத்தைச் சுமக்க வேண்டிவரும் என்பதால் அதை நிராகரித்தவர். இப்படி மக்களுக்காகவே வாழ்ந்த அவர், 1963 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி எம்மை விட்டுப் பிரிந்தார்.

காந்தியின் காங்கிரஸ் கொள்கைகளையும், அணுகுமுறைகளையும் இலங்கையில் அமுல்படுத் தியதால் மலையகக் காந்தியெனப் போற்றிப் புகழப் பட்டார். அவரின் சமாதி சங்குவாரித் தோட்டத் தில், நுவரெலியா பிரதான வீதிக்கு மேலுள்ளது. வீதி அபிவிருத்தியின்போது அதை உடைப்பதற்கு முயற் சிக்கப்பட்டாலும் பின்னர் அது கைவிடப்பட்டது.

தனது குடும்பத்துக்காக அவர் எதையுமே சேமித்து வைக்கவில்லை. வீடொன்று மாத்திரமே இருக்கின்றது. அதற்கும் சட்டபூர்வமான ஆவணம் இல்லை. அதையாவது பெற்றுத் தருவதற்கு மலை யக அரசியல்வாதிகள் நடவடிக்கையெடுக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்.

சின்னையா,தங்கவேல், ராஜரட்ணம், தவமணி யம்மாள், ராஜமணியம்மாள் ஆகியோர் இராஜ லிங்கத்தின் சகோதர,சகோதரிகளாவர். இதில் தவ மணியம்மாள் என்பவரே இவரின் அனைத்துத் தக வல்களையும் ஆணவப்படுத்தி வைத்துள்ளார். அதை தற்போது சீ. இராஜலிங்கம் என்பவர் பராமரித்து வருகிறார்.

இராஜலிங்கத்தின் தம்பியின் மகனே இவர். இரா ஜலிங்கம் தொடர்பில் 'சிங்களத் தீவினில் தீனர்களின் தெண்டர் கே.இராஜலிங்கம்'எனும் நூலும் வெளி யிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ■




கலைஞரும் ஜெயா அம்மையாரும் தமது சுயநலங்களுக்காக எப்படி புலிகள் மீதான தடையை நீடித்து வருகின்றனரோ அதேபோல் புலிகள் மீதான தடைக்கு உதவும் முகமாக சிறப்பு முகாமையும் மூடாமல் பாதுகாத்து வருகின்றனர். அப்பாவி ஈழத்தமிழ் அகதிகளைப் பிடித்து புலிகள் எனக் கணக்குக் காட்டி சிறப்பு முகாமில் அடைத்து வருகின்றனர். தமது கறுப்புப் பூனை பாதுகாப்புக்காக அப்பாவி அகதிகளைப் பலி கொடுக்கின்றனர். ஆனால் இவர்கள் தான் ஈழத் தமிழர்களுக்கு விடுதலை பெற்றுக் கொடுப்பவர்கள் என்று இன்றும்கூட பல்லாயிரம் தமிழர்கள் அப்பாவித்தனமாக நம்புகின்றார்கள்.

**முன்னாள் காவல்துறை அதிகாரியின் வாக்குமூலம்**


ராஜீவ் காந்தி கொலையில் தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன் ஒரு அப்பாவி எனப் பலர் ஆரம்பம் முதல் கூறி வந்தனர். ஆனால் அதை நீதிமன்றம் ஏற்கவில்லை. இந்திய அரசும் ஏற்கவில்லை. ஆனால் அந்த வழக்கை விசாரணை செய்த ஓர் அதிகாரி பேரறிவாளனின் வாக்குமூலத்தை தான் மாற்றிப் பதிவு செய்ததால்தான் அவர் தண்டனைக்குள்ளானார் என ஒப்புதல் வாக்குமூலம் அளித்த பின்பே அப்பாவி பேரறிவாளன் அநியாயமாகத் தண்டிக்கப்பட்டார் என்பதை அனைவரும் ஒத்துக்கொண்டனர். இருந்தும் பேரறிவாளன் இன்னும் விடுதலை செய்யப்படவில்லை. ஆனால் அவர் ஓர் அப்பாவி என்பது ஒரு அதிகாரி மூலம் வெளி உலகிற்கு நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

சிறப்பு முகாம் அகதிகளைப் பொறுத்தவரையில் ஓர் உயர் காவல்துறை அதிகாரியே "அகதிகள் அப்பாவிகள் என்றும் சட்ட விரோதமாக அவர்கள் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்" என்றும் தெரிவித்தும்கூட அது குறித்து யாருமே அக்கறை கொள்ளாதது பேரறிவாளனைவிட மோசமான நிலையிலேயே ஈழத் தமிழ் அகதிகளின் நிலை தமிழ்நாட்டில் உள்ளது என்பதை எடுத்துக் காட்டுகிறது.

முன்னாள் காவல்துறை தலைவரான வைகுந் "நான் சமாளித்த சவால்கள்" என்னும் தலைப்பில் புத்தகம் ஒன்றை எழுதியுள்ளார். அதில் அவர் சிறப்பு முகாம் குறித்து பல தகவல்களைத் தெரிவித்துள்ளார். ஈழ அகதிகளை அடைத்து வைப்பது பற்றி அவர் குறிப்பிடுகையில்,

"வெளிநாட்டைச் சேர்ந்தவர்களை இங்கு வைத்து நாம் பாதுகாக்கும் போது அதை முழுமையாக உறுதி செய்வதற்குச் சட்டரீதியிலான அதிகாரம் நமது காவல்துறைக்குத் தரப்படவில்லை என்பதை நாம் இங்கு குறிப்பாகக் கவனிக்க வேண்டும். வெளிநாட்டவர் சட்டத்தின் 2(2)(இ) பிரிவின்படி உப்புச் சப்பில்லாத சட்டப்போர்வையில் அதுவும் ஐந்தாண்டுகள் வெளிநாட்டவரை வெளியே சுதந்திரமாக நடமாட முடியாதபடி முழுமையாக ஒரு இடத்தில் அடைத்து வைப்பதற்கு நமக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது." என்று தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் "வெளிநாட்டவர் சட்டப்படி பிறப்பிக்கப்பட்டிருக்கும் உத்தரவைத் தவிர அவர்களைச் சிறப்புமுகாம்களில் அடைத்து வைத்திருக்க வேறு எந்த சட்டரீதியான அதிகாரத்தையும் நாம் பெற்றிருக்கவில்லை என்பதுதான் உண்மை. அந்த வகையில் பார்த்தால் அவர்கள் கைதிகளும் இல்லை. விசாரணைக் கைதிகளும் இல்லை. ஆகவே அவர்களை சிறைத்துறை விதிகளைக் கொண்டு எந்த வகையிலும் கட்டுப்படுத்த முடியாது என்பதுதான் யதார்த்த நிலையாக இருந்தது" என்கிறார்.



[சித்திரவதை தொடரும்]

# இந்த வாரம் உங்களுக்கு...

## மேடம்

சாதுர்யமான பேச்சால் சாதித்துக் காட்டுவீர்கள். சுக்கிரன் வலுவாக நிற்பதால் உயர்ரக மின்சார சாதனங்கள் வாங்குவீர்கள். வாகன விபத்து, வாகனப் பழுது வந்துபோகும். மனைவியுடன் கருத்து மோதல் வரும். உறவினர்கள் ஒரு சிலரின் இரட்டை வேடத்தைப் பார்த்து வேதனைப்படுவீர்கள். மற்றவர்களுக்காகப் பணம் வாங்கித் தருவதில் குறுக்கே நிற்க வேண்டாம். குடும்ப அந்தரங்க விடயங்களை எல்லாம் வெளியாட்களிடம் சொல்லிக் கொண்டிருக்காதீர்கள். வெளி வட்டாரத்தில்மற்றவர்களை தாக்கிப் பேசாதீர்கள். விவசாயிகளுக்கு விளைச்சல் அதிகரிப்பால் சந்தோஷம் நிலைக்கும்

## இடபம்

வீடு, மனை வாங்குவீர்கள். எதிர்பார்த்த பணம் வரும். வங்கிக் கடன் கிடைக்கும். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். வெளிநாடு செல்லும் வாய்ப்பு வரும். பிள்ளைகளுக்கு இருந்து வந்த கோப ,தாபம் குறையும். பாகப்பிரிவினை நல்ல விதத்தில் முடியும். வாகனத்தை மாற்றுவீர்கள். தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். தன்னிச்சையாகச் செயற்படத் தொடங்குவீர்கள். உங்கள் ரசனைக்கேற்ற வீடு அமையும். உங்களைப் பற்றிய வதந்திகள் அதிகமாகும்.

## மிதுனம்

முன்கோபத்தால் நல்லவர்களின் நட்பை இழந்து விடாதீர்கள். காரசாரமாகப் பேசிப் பெயரைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள். கன்னிப் பெண்களின் காதல் கசந்து இனிக்கும். உயர்கல்வியைப் போராடி முடிப்பீர்கள். மாணவர்கள் விளையாட்டின் போது கவனம் தேவை. விரும்பிய பாடப்பிரிவில் சேர கொஞ்சம் போராட வேண்டியிருக்கும். வியாபாரத்தில் புதிய திட்டங்கள் வகுத்து இலாபத்தைப் பெருக்க முற்படுவீர்கள்.

## கடகம்

எதிர்பார்த்த வகையில் பணம் வரும். பழைய கடனைத் திருப்பிச் செலுத்த வழி கிடைக்கும். அதிக வட்டிக்கு வாங்கியிருந்த கடனை கொடுத்து முடிப்பீர்கள். வேலைச் சுமை அதிகரிக்கும். சில வேலைகளை இரண்டு, மூன்று முறை முயன்று முடிக்க வேண்டி வரும். எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியாதபடி செலவுகள் துரத்திக் கொண்டேயிருக்கும். சில செலவுகளை நீங்கள் கட்டுப்படுத்தி சிக்கனமாக இருந்தாலும் பணப்பற்றாக்குறை நீடிக்கும்.

## சிம்மம்

வழக்கில் வெற்றியுண்டு. பிரபலங்களின் நட்பு கிடைக்கும். பழைய கடனைத் தீர்க்க புது வழி பிறக்கும். உடன்பிறந்தவர்களிடையே இருந்து வந்த மனக்கசப்புகள் விலகும். சொத்துப் பிரச்சினைகள் சுமுகமாக முடியும். என்றாலும் குடும்ப விஷயங்களைப் பற்றி விவரிக்க வேண்டாம். வியாபாரத்தில் நெளிவு, சுளிவுகளைக் கற்றுக் கொள்வீர்கள். தள்ளிப் போன ஒப்பந்தங்கள் மீண்டும் கைக்கு வரும்.

## கன்னி

தன்னம்பிக்கை துளிர்விடும். அழகு, இளமை கூடும். தன இலாபம் அதிகரிக்கும். உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். செல்வாக்கு உயரும். குடும்பத்தில் அமைதி உண்டாகும். கணவன், மனைவிக்குள் அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளால் செலவுகள் இருக்கும். ஆனால், அதே நேரத்தில் அவர்களால் பெருமை தரக்கூடிய சம்பவங்களும் நிகழும். புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள். அரசியல்வாதிகள் கட்சிமேல்மட்டத்தில் மதிக்கப்படுவீர்கள். வீட்டில் சுப நிகழ்ச்சிகள் ஏற்பாடாகும்.

## துலாம்

பழைய நண்பர்கள் உதவுவார்கள். கௌரவப் பதவிகள் தேடி வரும். ஆரோக்கியம்பாதிக்கும். தலை வலி, அடிவயிற்றில் வலி, தூக்கமின்மை, செரிமானக் கோளாறு வந்து நீங்கும். பெரிய நோய்கள் இருப்பதைப்போல அவ்வப்போது நினைத்துக் குழம்புவீர்கள். எதிலும் வெற்றி உண்டு. விலை உயர்ந்த ஆபரணங்கள் வாங்குவீர்கள். வீடு, மனை வாங்குவது, விற்பது இலாபகரமாக முடியும். பணப்புழக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் அமைதி உண்டாகும். கணவன், மனைவிக்குள் நெருக்கம் ஏற்படும். பிரிந்திருந்தவர்கள் ஒன்று சேருவீர்கள். மனைவி வழியில் உதவிகள் உண்டு.

## விருச்சிகம்

உறவினர், நண்பர்கள் வீட்டு நிகழ்வுகளை முன்னின்று நடத்த வேண்டிய சூழ்நிலை வரும். பழைய நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். நட்பு வட்டம் விரிவடையும். கணவன், மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். மனைவி வழி உறவினர்கள் உறுதுணையாக இருப்பார்கள். தைரியமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வெளிநாடு சென்று வருவீர்கள். வேற்று மதத்தவர்கள், மொழியினரால் திடீர் திருப்பம் உண்டாகும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகமாகும். இடம் மாற்றம் வரும்.

## தனுசு

காலச்சூழ்நிலைக்கு தகுந்தாற் போல் உங்களை மாற்றிக் கொள்வீர்கள். தன்னம்பிக்கை பிறக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். கல்வியாளர்கள், அறிஞர்களின் அறிமுகம் கிடைக்கும். இழுபறியாக இருந்த வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். வீட்டை மாற்றுவது, விரிவுபடுத்திக் கட்டுவதுபோன்ற முயற்சிகள் வெற்றியடையும். செலவுககள் அதிகரிக்கும். உறவினர்களில் ஒருசிலர் உங்களை உதாசீனப்படுத்த வாய்ப்பிருக்கிறது.

## மகரம்

வெளுத்ததெல்லாம் பால் அல்ல என்பதை உணர்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். தனித்திறமையை வெளிப்படுத்துவீர்கள். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். மேலதிகாரி அதிசயிக்கும்படி நடந்து கொள்வீர்கள். புது வாய்ப்புகளும் தேடி வரும். சம்பளப் பணம் கைக்கு வரும். கலைத்துறையினருக்குச் சின்னச் சின்ன தடுமாற்றங்கள் இருந்தாலும் புகழ் கூடும்.

## கும்பம்

கொள்கைக் கோட்பாடுகளை விட்டுக் கொடுக்க மாட்டீர்கள். கன்னிப் பெண்கள் மனதை அலைபாயவிடாமல் ஒருநிலைப் படுத்துங்கள். பழைய தோழிகள் உதவுவார்கள். மாணவர்களுக்கு அவ்வப்போது மறதி, மந்தம் வந்து விலகும். ஆசிரியர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பார்கள். வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். வேலையாட்களை அனுசரித்துப் போங்கள். முக்கிய வேலைகளை நீங்களே முன்னின்று முடிப்பது நல்லது.

## மீனம்

வேலைச்சுமை குறையும். வாகனப் பழுது சரியாகும். எதிர்வீடு, பக்கத்து வீட்டுக்காரர்களுடன் இருந்து வந்த மனத்தாங்கல் நீங்கும். பயணங்களும் அடுத்தடுத்து இருக்கும். தவிர்க்க முடியாத செலவுகளும் அதிகமாகும். பணப்பற்றாக்குறை ஏற்படும். பழைய கடனை நினைத்தும் அவ்வப்போது அச்சப்படுவீர்கள். சகோதரர்கள் உங்களைப் புரிந்துக் கொள்ளாமல் பேசுவார்கள். கன்னிப் பெண்களுக்கு காதல் கைகூடும். பெற்றோர் உங்களைப் புரிந்து கொள்வார்கள்.

## சுசியின் டயறியில் இருந்து

சமூகச் செயற்பாட்டாளராகவும், உளவியல் ஆலோசகராகவும் இயங்கிக்கொண்டிருக்கும் சுசி, வன்கொடுமைகள், துன்புறுத்தல்கள், அடக்குமுறைகளுக்குள் சிக்கி, அதில் இருந்து மீளமுடியாமல் முடங்கிப்போய் இருக்கும் பல பெண்களைத் தனது சொற்களால் தூக்கிவிட்டு, மீட்டெடுக்கும் அரிய பணியை மேற்கொண்டு வருகின்றார். அவர் சந்தித்த பல பெண்களை இனிமேல் நீங்களும் ஒவ்வொரு வாரமும் சந்திக்கப் போகின்றீர்கள்.

# முகவரி தொலைத்த முகநூல் காதல்

(கடந்தவாரத் தொடர்ச்சி)

வட்ஸ் அப், வைபர், பேஸ்புக் என அத்தனையும் அவளிடம் இருந்தன. அவளுக்கு முகநூலில் கிடைத்த நட்புகளில் ஒருவன்தான்விச்சு. வயது 19. கொழும்பு கொச்சிகடையைச் சேர்ந்தவன். தன் இன்னொரு முகநூல் நட்புக்கூடாக இணைந்து கொண்டவன். பெரிதாகப் பழக்கமில்லை. முதலில் "ஹாய்! பாய்! சாப்பிட்டாச்சா? ரீலோட் போடு" என்று ஆரம்பித்து ,மூன்றே மாதத்தில் 'சந்திக்கலாமா' எனக் கேட்க, கமலாவும் சம்மதிக்கவே அவர்கள் சேட்டை ஆரம்பித்தது. இரண்டாவது சந்திப்பே கொழும்பில் ஒரு பிரபல விடுதியில். முதலில் வார்த்தைகள், ரீசார்ஜ், பணம், படம் என்று தொடங்கி நாளடைவில் உடல்களும் பரிமாறப்பட்டன. அதன் விளைவோ கல்யாணம் ஆகாமலேயே அவள் ஆறு மாதக் கர்ப்பிணி. பாட்டி பதறினாள். யாரிடமும் சொல்லவும் முடியாது. விச்சுவோ வேலை முடிந்ததும் கைகழுவி விட்டான். எடுக்கும் அழைப்புகளுக்கும், குறுந்தகவல்களுக்கும் ஒரே பதில் தான். போன் ஸ்விட்ச் ஓப். இந்த நிலையில், மனச்சோர்வால் பாதிக்கப்பட்டு வெளியுலகுக்குத் தலை காட்ட முடியாமல், அவமானத்தால் கூனிக் குறுகி, தன்னையும் கவனிக்காமல், தான் சுமக்கும் சிசுவையும் கவனில்லாமல் வாழ்கையை சூனியமாய் கழித்தாள் கமலா. இந்தநிலையில் நண்பி ஒருத்தியின் உதவியுடன் என்னிடம் வந்து சேர்ந்தாள்.

அவனைப் பற்றித் தேடிப் பார்த்தேன். சட்ட ரீதியாகவே அணுகவேண்டியிருந்தது. சட்ட ரீதியாக அணுகுவதற்கு முதலில் ஆதாரங்களைத் திரட்டத் தொடங்கினேன். திரட்டிய ஆதாரங்கள் முகத்தில் அறைந்தன. விச்சுவுக்குப் பத்தொன்பதே வயது. பாவிக்காத போதைவஸ்து இல்லை. பல பெண்களோடு சவகாசம். இந்த வருடம் மாத்திரம் அவன் குறிப்பிட்ட விடுதிக்கு இளம்பெண்களுடன் பதினேழு தடவை சென்றிருக்கின்றான்.

இத்தனை விடயங்களையும் அறிந்த பின்னர், இருவரையும் அழைத்தோம். கமலாவின் முடிவு அவளுடைய கையிலேயே விடப்பட்டது. அவளுடைய தவறுகளும், பிழைகளும் சுட்டிக்காட்டப்பட்டன. அவளுக்குக் கொடுக்கப்பட்ட உளவளத்துணை வேலை செய்யத் தொடங்கியது. எனவே அவள் முடிவுகளை எடுக்கத் தொடங்கினாள். விச்சு தன் வாழ்க்கைக்குத் தேவையில்லை என்றும், அவனுக்குத் தக்க தண்டனை சட்ட ரீதியாக கொடுப்பட வேண்டும் என்றும் முடிவு செய்தாள். குழந்தையில்லாப் பெற்றோருக்குத் தன் குழந்தையைத் தத்துக் கொடுத்தாள். விச்சு ஒட்டுமொத்தக் குற்றங்களுக்காகவும் சிறைத் தண்டனை அனுபவிக்கிறான். தப்பு செய்தவருக்கு தண்டனை நிச்சயம். ஆனால் பாதிக்கப்பட்டவர் முன்வருவது அவசியம். ■

# குர்ஆனின் பெயரால்...



ரௌத்திரம் பழகு

உங்கள் வீட்டுக்கு குர்ஆனைக் கற்பிக்க வந்தவர், உங்களைச் சார்ந்த ஒரு பெண்ணின் மேல் கை வைத்தால் மறைத்து விடுவீர்களா? வலிக்கிறது மனது .

சில காலத்துக்கு முன் என் வீட்டை நாடி வந்த ஓர் அநாதைச் சிறுமியைத் தத்தெடுக்கத் திட்டமிட்டேன். அந்தச் சிறுமி வேற்று மதக் குடும்பத்தில் பிறந்தவள். அவளிடம் எந்தவிதமான கல்வியறிவும் இருக்கவில்லை. எனக்கு அவளைப் பிடித்துப்போக நான் அவளுக்குரிய சகல கடமைகளையும் செய்தேன். பள்ளிவாசல் மௌலவி ஒருவரை வீட்டுக்கு வரவழைத்து, அவளுக்கு குர்ஆனைக் கற்றுக் கொடுக்க வைத்தேன். மிகவும் ஆசையாகக் குர்ஆனை கற்றுக்கொண்டிருந்த அந்தச் சிறுமியின் முகத்தில் மாற்றத்தைக் கண்டேன். ஆனாலும் நான் எதுவும் கேட்கவில்லை. ஒரு நாள் மௌலவி ஓத வரும் நேரத்தில் அந்தச் சிறுமி இன்றைக்கு ஓத முடியாது என மறுத்தாள். நான் அவளைத் திட்டினேன். "வீடு நாடி வரும் மௌலவி அவர். சும்மா இல்ல நான்பணம்கொடுக்கிறேன்" என்றேன். அமைதியாக இருந்த அந்தச் சிறுமி இரண்டு நாட்களில் கேட்டாள், "நான் ஓதாவிட்டால் என்னை ஏற்றுக்கொள்ள மாட்டீங்களா" என்று. "உன்னை என் கூடப் பிறந்த சகோதரியாக நினைக்கிறேன். நீ ஓதினால் இறைவனுடன் நெருக்கமாகி விடுவாய் அதனால்தான் ஓதச் சொல்கின்றேன்" என்றேன். என் வார்த்தைக்காக மீண்டும் ஓதுவதற்குத் தயாராகிய சிறுமி மௌலவியின் வருகைக்காகக் காத்திருந்தாள்.

அவரும் வந்தார். வழமை போல் போய் விட்டார். ஆனால் மறு நாள் வரவில்லை. ஒரு வாரமாகி விட்ட பின்னும் அவர் வரவில்லை. பள்ளிவாசலுக்கு ஆள் அனுப்பிக் கேட்டேன். மௌலவி இடமாற்றலாகிப் போனதாகக் கூறினார்கள். அதிர்ச்சியாக இருந்தது. நான் அந்தச் சிறுமியிடம் கோபப்பட்டுக் கேட்டேன். அப்போது அவள் அழத்தொடங்கி விட்டாள். "நான் எங்க ஊருக்கே போறேன் . எனக்கு ஓத முடியாது. அந்த மௌலவி எனக்கு ஓதித் தந்து விட்டுப் பாடம் கேட்கும் போது, ஒவ்வொரு நாளும் என் மார்பில் கை வைக்கிறார். நெருக்கமாக இருக்க அழைக்கிறார். ஐந்து நாட்களுக்கு மேல் இப்படியே நடந்தது." என்றாள்.

சிறுமியின் விடயத்தைப் பற்றி என் குடும்பத்தாரிடம் கூறியும், யாரும் பெரிதாகப் பொருட்படுத்தவில்லை. அந்தச் சம்பவத்தால் என் மனசாட்சி உறுத்துகிறது. அவளைப் பாதுகாக்க நான் தவறிவிட்டேன். அவளை அவர்கள் உறவினரிடமே விட்டுவிட்டேன் .

மொளலவிமார் மேல் எனக்கு வெறுப்பு. நீங்கள் ஒன்றும் பெரிய உத்தமர்கள் கிடையாது.எல்லா இச்சைகளும் உள்ள பலகீனம் படைத்த மத வேஷமிடும் சாதாரண மனிதர்கள் தானென்று உறுதிப்படுத்தி விட்ட பின், உங்கள் மார்க்க பிரசாரத்தைச் செவிசாய்க்க வேண்டியதில்லை. அசிங்கமாக இருக்கிறது. உங்கள் மனைவிமாரைப் போர்த்தி உள்ளே வைத்து விட்டு மார்க்க சட்டமா பேசுகிறீர்கள் ?

- ரமீ

# இது புதுசு



பெண்கள் அணியும் குர்தா என்பது சுடிதார், ஜீன்ஸ் என்று எதன் மீதும் போட்டுக் கொள்ளக்கூடிய ஓர் ஆடை. இதன் மொடல்கள் அவ்வப்போது இளம் பெண்களின் ரசனைக்கேற்ப மாறிக் கொண்டே இருக்கும். இந்த வருடத்தில் சில புதிய டிசைனர் குர்தாக்களைப் பற்றி பார்ப்போம்.

### அம்ப்ரெல்லா கட் டிசைனர் குர்தா

இந்த டிசைன் பெரும்பாலும் ஜோர்ஜட் துணியில், கொலர் கழுத்து கொண்ட மொடலாக இருக்கிறது. இந்தக் குர்தா நீண்டு அரை வட்டமாகக் குடை போல் வெட்டப்பட்டிருக்கும்.

### கைட் (காற்றாடி) டிசைனர் குர்தா

இந்தக் குர்தா இடுப்புவரை சாதாரணமாக வந்து இடுப்பில் இருந்து கீழே வரும் பகுதி முக்கோண வடிவில் இருக்கும். இந்த முக்கோணப் பகுதி முழங்கால் வரையோ அல்லது கணுக்கால்வரையிலோ நீண்டிருக்கலாம்.

### ஹை–லோ டிசைனர் குர்தா

இந்த மொடல் குர்தா முன்புறம் குட்டையாகவும், இருபுறங்களிலும் நீண்டும் பல அடுக்குகளாக இருக்கும்.

### பேட்–விங் டிசைன் குர்தா

இது சிறகை விரித்த வௌவால் போல் தோற்றம் தரும் இந்த டிசைன் அணிந்து கொள்ள வசதியாக இருக்கும்.

### ஃப்ரொக் டிசைன் குர்தா

இது மேலே இருந்து இடுப்பு வரை உடலோடு ஒட்டியும், அதற்கு கீழே மடிப்புகளுடன் அகன்றும் ஃப்ரொக் போல தோற்றம் தரும்.

### லேயர்ட் டிசைன் குர்தா

இது பல அடுக்குகளாக இடுப்பில் இருந்து முழங்கால் வரையிலோ, கணுக்கால் வரையிலோ நீண்டிருக்கும். மிகவும் தளர்வாக இருக்கும் இந்த டிசைன் வயதான பெண்களுக்கும் கூட பொருத்தமாக இருக்கும்.

# உலகை உலுக்கியவள்: ஹிமா தாஸ்!

இந்தியாவின் அசாம் மாநிலத்தில் உதைபந்தாட்டமும், பொக்ஸிங்கும் பிரசித்தம். அசாமில் திங் என்னும் கிராமத்தில் நெல் வயலில் வெறுங்கால்களுடன் உதைபந்து விளையாடிக் கொண்டிருந்த ஹிமாவை , ஒரு போட்டியில் கண்ட தடகளப் பயிற்சிவிப்பாளர் நிபுண்தாஸ் அவளுக்குள் ஒரு தடகள வீராங்கனையைக் கண்டறிந்தார். விவசாயத்தின் மூலம் மட்டுமே வரும் பொருளாதாரத்தை நம்பிய பின்தங்கிய 16 பேர் கொண்ட ஒருகூட்டுக்குடும்பத்தைச் சேர்ந்தவர் ஹிமா தாஸ். கௌஹாத்தியில் தங்கிப் பயிற்சிகளை எடுத்துக்கொள்வதற்கான செலவுகளை எதிர்கொள்ள முடியாத நிலை. "அனைத்துச் செலவுகளையும் நானே ஏற்றுக் கொள்கின்றேன்" என்று உறுதியளித்தார் பயிற்சியாளர் நிபுண். 'மூன்று வேளைச் சாப்பாடு போட்டாப் போதும்' என்றார் தந்தை. ஓடினாள், ஓடினாள்.. புயலாய்ப் பாய்ந்தாள். பின்லாந்தில் நடைபெற்ற சர்வதேச தடகள கழகத்தின் இருபது வயதுக் குட்பட்டவர்களுக்கான சம்பியன்ஸ் தொடரில் பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் தங்கம் வென்றாள் ஹிமா.




இது அவளுக்கான முதல் தங்கம் மட்டுமல்ல. இந்தியாவுக்கான முதல் தங்கம் கூடத்தான். சர்வதேசத் தடகளப் போட்டியில் இந்தியா இதுவரை தங்கம் வென்றதில்லை என்ற வாக்கியத்தைத் தன் ஓட்டத்தால் மாற்றினாள் ஹிமா தாஸ். இந்தப் போட்டி ஆரம்பித்த 35 நொடிக்குள் ஓடிய முதல் மூவரில் ஹிமா இல்லவே இல்லை. யாருடைய கவனமும் அவள் மீது இல்லை. ஆரம்பத்தில் மெதுமெதுவாகத் தொடங்கிப் போகப் போக ஒரு புயலாக மாறி தங்கப் பதக்கம் வென்றாள். வெற்றியைப் பகிர்ந்த போது "நீங்கள் எல்லாம் உறங்கிக் கொண்டிருந்தீர்கள். நான் இந்த உலகை உலுக்கிக் கொண்டிருந்தேன்" என்று இந்தியத் தேசியக் கொடியைத் தன் மேல் போர்த்திக் கொண்டு , தேசிய கீதம் இசைத்தபோது கூடவே முணுமுணுத்தபடி உணர்ச்சிப் பெருக்கில் அழுதாள் அந்தச் சின்னப் பெண் ஹிமா தாஸ்.

வாழ்த்துக்கள் திங் எக்ஸ்பிரஸ்.

**கவிஞர் பிரேம்ராஜ், கொழும்பு**

## பாலியல் தொல்லைகளை பகிரங்கம் செய்வோம்

'எதிரொலி' வாசகிகளே! நீங்களும் உடைத்துப் பேச விரும்பும் விடயங்களைப் பொதுவெளியில் பதிவு செய்யுங்கள். உங்கள் இரகசியம் காக்கப்படும். நீங்கள் சந்தித்த பாலியல்சார் பிரச்சினைகளையும், அதைக் கையாண்ட விதத்தையும் எழுதுங்கள். உங்கள் அனுபவம் பல பெண்களைப் பாதிப்புறாமல் காக்கட்டும்.

**'ரௌத்திரம் பழகு'**
அம்பலம் பதிப்பகம்,
இல. 241,
கைதடி - மானிப்பாய் வீதி,
உடுவில், யாழ்ப்பாணம்.
**அல்லது**
ethirolimedia@gmail.com

எதிரொலி
Ethiroli

08- 14 ஒகஸ்ட் 2018

# பூவைக் கசக்கி வாசம் நுகரும் புலமைப் பரிசில்

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

புலமைப்பரிசில் பரீட்சைப் பாடத்திட்டத்தில் பிள்ளைக்கிருக்கும் தேர்ச்சியையோ அல்லது அடிப்படை கற்றல் தேர்ச்சியையோ பரிசோதிக்கும் அமைப்புச் சோதனையாக இருந்தாலும் கூட அதனையிட்டு பிள்ளையை வருத்துவதையும் - நோற்பதையும் கூட நியாயப்படுத்த முடியும்.

முழுமையாக எண்ணறிவையும் - தாய்மொழி எழுத்தறிவையுமாவது சோதனைக்குள்ளாக்கும் கட்டமைப்பைக் கூடக் கொண்டிராத நுண்ணறிவுச் சோதனையொன்றுக்குப் பின்னால் பிள்ளையை மட்டுமல்லாது மொத்தக்குடும்பத்தையும் தொங்கித்திரிய வைத்திருப்பதுதான், எங்களது கல்விமுறையின் வெற்றியென்று கொண்டாடுவதால் பிறகொரு பதினைந்து வருடங்களில் சமூகச் சூழலுக்கு சற்றும் பொருந்தாத காகிதவெளியீடுகளைத் துப்புவதை தவிர வேறேது வழி?

புலமைப்பரிசில் பரீட்சை தருகின்ற நேர்விளைவுகள் எதிர் மறைவிளைவுகள் என்ற ஒப்பீடு, மடுவுக்கும் மலைக்கும் இணையானது. உதவித்தொகை மற்றும் பிரபல பாடசாலை அனுமதியில் சமத்துவம் போன்ற மிகச் சிறியளவிலான அனுகூலப்பக்கங்களைக் காரணமிட்டுக்கொண்டு உடலளவிலும் மனதளவிலும் அதீத வளர்ச்சித்தேவையுடைய - வெவ்வேறு திறன் மீளெழுகை தேவைப்பாடுடைய பத்து வயதுக் குழந்தைச் சமூகமொன்றை, மாதிரி வினாக்களின் பின்னாலும் - ஒப்புவிக்கப்படுகின்ற கேள்வி - பதில் முறைமைக்குப் பின்னாலும் - மனப்பாடமாக்கி ஒப்படைக்கும் வாந்தியெடுப்புக்கும் - ஓய்வில்லாத மூளை உழைப்புக்குள்ளும் தள்ளிவிட்டு அதனால் விளையும் வெற்றியைக் கொண்டாடுவதும், மொத்தச்சமூகத்தின் சித்தசுவாதீனமற்ற இழிநிலையில்லையா?

தன்னையும் - தனதயலவனையும் - தன் வாழ் சூழலையும் நிபந்தனையற்றுப் பேரன்பினால் போசித்து நேசிக்கும் அதியுன்னதமான மனிதத்தினை - பரீட்சை வினாக்கள் மூலமாக எக்காலத்திலும் உட்புகுத்திடல் இயலாதது.

ஒழுக்கத்தையும் - வாழ்க்கை அறத்தையும் - விழுமியக்கூறுகளையும் பிள்ளைக்குள்ளிருந்து அளவிடும் புள்ளித்திட்டமென்று ஏதுமில்லை பெற்றவர்களே!

அவர்களின் சிறகுகளை இயல்பொழுங்கில் விரிக்க உதவுங்கள். பெருவானத்தின் சுவை அறிந்து நிறைந்தொழுகட்டும் எம் மகவுகள். ■

# காடு எங்கட வரம்

● நவீன சவாரித்தம்பர்



ஒவ்வொரு கிழமையும் சந்தை, கடைத் தெருவுகளுக்கு வாறநேரத்தில, இதாலை வந்து உங்களோடை எப்பன் மனமாறக் கதைச்சுப் போட்டுப் போற எனக்கு, போன கிழமை இஞ்சாலிப்பக்கம் வரேலாமல் போச்சுப் பாருங்கோ.

கிழமைக்கொருக்கா இதிலை என்னைக் காணுற ஆட்களும் - "என்ன இண்டைக்கு தம்பற்ரை சிலமனைக் காணேல்லை..." எண்டு விசாரிச்சுப் போட்டும் போனவையாம்.

போனகிழமை நான் வராதுக்கு என்னபிரச்சினையெண்டால், எனக்கு ஒரு கிழமையாகத் தலையிடி, காய்ச்சல், பித்தம், அது இதெண்டு உடம்புக்குள்ளை ஏகப்பட்ட வருத்தங்கள் தாண்டவமாடினதாலை வெளியில தலைகாட்டேலாமல் போயிட்டுது.

இப்ப எறிக்கிற வெய்யிலும் அப்பிடித்தானே பாருங்கோ. றோட்டில நடந்துபோற மனிதரை ஒவ்வொரு நாளும் பலியெடுத்துக் கொண்டுதானே போகுது. ஏன் இப்பிடி நடக்குது எண்டு விசாரிக்கப் போனால், எல்லாற்ர வாயிலையும் 'காலநிலை மாற்றம்' எண்ட சொல்லு வருகுது.

காலநிலை மாற்றம்...எண்டது அது இயற்கையோடு சம்பந்தப்பட்ட விடயம் கண்டியளே. இயற்கையை அனுசரிச்சு அதோடை சேர்ந்து வாழ்ந்த எங்கட மூதாதையருக்கு பாரதூரமான எந்த வருத்தங்களும் வந்ததாக நான் இதுவரையிலும் அறியேல்லைப் பாருங்கோ. எப்ப இந்த மனிசர் கூட்டத்தில ஒருபகுதி, தங்களைப் படிச்ச மனிசரெண்டு வெளிக்காட்டிக்கொண்டு, இயற்கையில கை வைக்கத் தொடங்கிச்சுதுகளோ, அண்டையிலயிருந்து பெயருகள் தெரியாத கொள்ளைநோயளும் கோதாரியுமாகத்தானே கிடக்குது.

காடு எண்டது இயற்கை எங்களுக்கு இனாமாகக் கொடுத்த ஒரு அளப்பரிய வரம். இந்த வரத்தைநம்பி மனிசன் உட்பட, எத்தனையோ பறவையள், மிருகங்கள் சீவிக்குதுகள். மரநிழல்தாற குளிர்ச்சியைப்போல எந்தவொரு நவீன 'ஏ . சி' வசதிகளும் தாறதில்லை. அது இயற்கை. இது செயற்கை.

காட்டு வளத்தில மனிசர் கைவைக்கத் தொடங்கியதிலிருந்து, வெய்யிலின் அகோரமும் கூடிக் கொண்டே போகுது. காட்டு மரங்கள் இல்லாததால ஒட்சிசன் பற்றாக்குறையும் ஏற்படத் தொடங்கியிருக்குது. காட்டில ஒரு மரத்தை அழிக்கிறதுக்குக் காட்டுற ஆர்வத்தையும் வேகத்தையும் அதை நட்டு வளர்க்கவேணு மெண்ட தில கொஞ்சம்கூட ஒருத்தருக்கும் அக்கறை இல்லைப் பாருங்கோ.

இப்ப கனக்க வேண்டாம்... உதாரணத்துக்கு ஒண்டைச் சொல்லுறன் கேளுங்கோ.

மகிந்தராசா புலியளைத் தோற்கடிச்சு ஆட்சிக்கு வந்தகாலத்தில, வடக்கு - கிழக்கில வீதி அகலிப்பு வேலை நடந்ததல்லோ! உந்த வீதி அகலிப்புக்காக வன்னிப் பகுதியில றோட்டுக்கரையோரம் வளர்ந்து நிண்ட பாலை, முதிரை, விண்ணாங்கு, பசறி, சடவக்கை, காட்டாமணக்கு, வாகை, வீரை...இப்படி நிழல் தாற மரங்களையெல்லாம் அடியோடை பிரட்டி எறிஞ்சுபோட்டு, வீதியை அகட்டி விட்டிருக்கினம்.


இப்ப என்னடாவெண்டால் - றோட்டில வெய்யிலின்ர அகோரம் தாங்கேலாமல் மயங்கி விழவேண்டிக் கிடக்குது. இந்தக் கொடுமை மனிசருக்கு மட்டுமில்லைப் பாருங்கோ.பட்டி மாடுகளுக்கும் தான்.

சரி...இதை விடுவம். எங்களால தெரிவு செய்யப்பட்ட எம். பிமாரும், தம்பிமாரும் இருக்கினமல்லோ! அவையளுக்கும் உந்த வன்னியில காடு அழியிறதைக் குறிச்சு கரிசனை இல்லை.

ஏதோ ஒரு ஒப்புக்கு ஒருநாளைக்கு 'மரநடுகை விழா' எண்ட பெயரில குடை, கொடி, ஆலவட்டப் பரிவாரங்களோடை வந்து றோட்டில ஒருமரத்தை நட்டுப் போட்டு, அது அடுத்த நாளைக்கு பேப்பரில படமாக செய்தியாக வந்திருக்கொண்டு பார்க்கிற தோடை சரி. பிறகு, தான் நட்டமரம் வளர்ந்திருக்கோ... பூத்திருக்கோ... காய்ச்சிருக்கோ...பழம் பழுத்து கொட்டை மண்ணில விழுந்திருக்கோ...

எண்டு கேட்கிறதுமில்லை விசாரிக்கிறதுமில்லை போய்ப் பார்க்கிறதுமில்லை.


இனிவாற காலங்களில மரம் நடுகிற சட்டத்தைக் கட்டாயமாக்கினால்தான் ஒட்சிசனுக்கும்பஞ்சமிருக்காது. ஒரு நோய்நொடியளும் எம்மைத் தீண்டாது. ■



# காசநோய்ச் சிகிச்சைக்கு ரோபோ கண்டுபிடிப்பு

காசநோயைக் கண்டுபிடிக்கும் பொருட்டு சிறிய வகை ரோபோ ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது கனடாவின் புறோக் பல்கலைக்கழகத்தால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த ரோபாவால் குருதியில் உள்ள நோயை வெறும் 30 நிமிடங்களில் கண்டுபிடிக்க முடியுமாம். காச நோய்க்குக் காரணமான பக்டீரியாவில் ஏற்படக் கூடிய மாற்றங்களைக் கூட இந்த ரோபோக்களால் கண்டுபிடிக்க முடியுமாம். இது வருங்காலத்தில் காச நோய்க்கெதிராகப் பயன்பாட்டில் இருக்கப் போகிறது என்பதில் ஐயமில்லை.

# ஹேக்கர்களிடம் தப்பிக்க கூகுளின் புதிய சாதனம்!



ஒன்லைனில் பயன்படுத்தும் கணக்குகளைப் பாதுகாக்க இதுவரை காலமும் கடவுச் சொற்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எனினும், இவற்றைக் ஹேக் செய்து கணக்குகள் தொடர்பான தகவல்களைச் சேகரிக்கக்கூடியதாக இருக்கின்றது. எனவே இதனைத் தடுப்பதற்கு கூகுள் நிறுவனம் புதிய முயற்சி ஒன்றை மேற்கொண்டுள்ளது.


இதன்படி Google Titan Security Key எனும் வன்பொருள் சாதனம் ஒன்றை அறிமுகம் செய்துள்ளது.

இதனைப் பயன்படுத்தி மின்னஞ்சல், கூகுள் பிளஸ் மற்றும் யூ-டியூப் போன்ற பல்வேறு கணக்குகளைப் பாதுகாக்க முடியும். தற்போது இந்தச் சாதனத்தைக் கூகுள் நிறுவனத்தில் பணியாற்றும் 85 ஆயிரம் பணியாளர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.இவை விரைவில் பயநர்களின் பயன்பாட்டுக்காக விற்பனை செய்யப்பட உள்ளன.

இந்தச் சாதனத்தின் விலை 20 டொலருக்கும் குறைவாகவே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# இயற்கைக்கு சவால் விடும் ரஷ்யத் தொழில் நுட்பம்

இயற்கைக்குப் பெரும் அச்சுறுத்தலான காரணிகளுள் நிலநடுக்கமும் ஒன்று. தரையைப் பொறுத்தமட்டில் அது நகரங்களைத் தரைமட்டமாக்குகின்றது. மின்சாரக் கம்பிகளை கவிழச் செய்கின்றது. கடலில் இது சுனாமியைத் தோற்றுவிக்கின்றது. இதன் விளைவாக எத்தரப்பட்டோரும் பாதிக்கப்படுகின்றனர். இதிலிருந்து மக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ரஷ்ய கண்டுபிடிப்பாளர் ஒருவர் புவிநடுக்கத்திருந்து பாதுகாப்பளிக்கும் மெத்தை ஒன்றைக் கண்டு பிடித்துள்ளார். இது புவிநடுக்கம் ஏற்படும்வரையில் சாதாரண மெத்தை போன்று செயற்படுகிறது. புவிநடுக்கம் ஏற்படுகையில் சிறு அரண் போன்று தொழிற்படத் தொடங்கும். இந்த உற்பத்தி 2015 இல் முதன்முதலாக தன் கவனத்தை ஈர்த்திருந்தது. ஆனாலும் தற்போது அது சமூக வலைதளங்களில் பெரும் வைரலாகி உள்ளது.



எதிரொலி
Ethiroli





# ஈழத்து அரங்க வெளியின் வரலாற்றுப் பாய்ச்சலில் யாழ். பல்கலைக்கழகம்

**களம் 2**


■ செல்வி

## அழகியலின் இயங்கியலில் வெறுவெளியின் அரங்க மேலாண்மை

அரங்கு என்பது ஒரு பிரதியையோ அல்லது பிரதியல்லாத படிமங்களையோ நடிகனின் உடலை முதன்மை மூலகமாகக் கொண்டு, அதற்கான வெளியில் நிகழ்த்துதல் என்பதனை அடிப்படையாகக் கொண்டது. ஆயினும் நடிகனை மட்டும்வைத்துக்கொண்டு ஆற்றுகையொன்றினைச் செய்யும் சில அரங்கப்போக்குகள் இருந்தாலும் கூட, அரங்கக் கலையானது, நடிகன், நெறியாளன், காண்பிய வடிவமைப்பாளர், காண்பியக் கட்டமைப்பாளர், ஒளியமைப்பாளர், இசையமைப்பாளர், வேடவுடை ஒப்பனையாளர் என்ற அரங்கின் அழகியல் சார்ந்தவர்களினதும் அரங்க முகாமையாளர்கள், அரங்கு சார்ந்த நிர்வாக வேலைகளை மேற்கொள்ளும் நிறுவனம் சார்ந்தவர்களினதும் கூட்டுமுயற்சியால் உருவாகும் கூட்டுக்கலையாகவே காணப்படுகின்றது. அரங்க அனுபவத்துக்காக வரும் பார்வையாளர்களை கூட்டு அனுபவத்திற்கு உள்ளாக்குவது என்னும் பிரதான நோக்கம் அரங்க விழாவில் காணப்படுகின்றது. கலைகளினதும் கலைஞர்களினதும் கூட்டுழைப்பின்றி, அரங்கில் ஓர் இயக்கத்தைத்தானும் நிகழ்த்திவிட முடியாது. ஆனால் பொதுவாக நாடகம் அல்லது அரங்கு பற்றிப் பேசுபவர்கள் அதன் பிரதி பற்றியும், நடிகர்கள், நடிப்பு என்றவாறு பாத்திரங்களை மையப்படுத்தியும் நெறியாளரினதும் அவரது வெளியையும் பற்றி கருத்தாடல்களைச் செய்வதற்கும் இசை ஒளி காண்பியங்களை அழகியல் ரீதியில் நோக்குவதற்கும் மட்டுமேபெரும்பாலும்பழக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அதன் பின்னாலுள்ள மனித உழைப்பின் வலுவைப் பற்றி பேசுவதில்லை.

இன்றைய சூழலில் நிறுவனம் சார்ந்து அரங்க விழாவினைக் கொண்டாடுதல் என்பது அவ்வளவு இலகுவானதல்ல. பல்கலைக்கழகச் சூழலைப் பொறுத்தவரையில் நாடகத்திற்கென ஒதுக்கப்படும் பாதீட்டினை வைத்துக்கொண்டு ஓர் அரங்கவிழாவினைச் செய்தல் என்பதும் சாத்தியமற்றது. எண்ணிக்கையளவில் சிறுபான்மையான மாணவர்களையும் விரிவுரையாளர்களையும் கொண்ட துறையொன்றில், திட்டமிடுதல் தொடக்கம் விழாவினை நடத்தி முடித்து அதன் பின்னூட்டங்களை நோக்குதல்வரைக்கும்நடத்திமுடித்திருப்பதென்பது பல மனித மணித்தியாலங்களும் மனித உடலின் தகவமைப்பை விடவும் அதிகமான உழைப்பும் செலுத்தப்பட்டிருப்பதன் மூலமே மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டுமென்ற முடிவுக்கு இட்டுச் செல்கின்றது. பல்கலைக்கழக சமூகத்தில் பல துறைகளும் தனியாகவும் கூட்டாகவும் பல விழாக்களையும் மாநாடுகளையும் நிகழ்த்திவருகின்றனர். ஆனால் அரங்கவிழா என்பது அவற்றுடன் ஒப்பிடப்பட முடியாதது. அரங்கவிழாவின் ஒவ்வொரு கணமும் ஒரு உயிரியுடனும் அந்த உயிரியின் இயக்கத்துடனும் தொடர்புபட்டது. அவர்களை ஒன்று சேர்த்து ஒரே தளத்தில் நிறுத்துவதென்பது அவ்வளவு இலகுவான விடயமல்ல என்பது மனித வளங்களுடன் ஊடாடும் ஒவ்வொருவருக்கும் தெரியும். இரவுபகலாக மாணவர்களும் மாணவிகளும் விரிவுரையாளர்களும் நின்று உழைத்து இந்த விழாவினை நிகழ்த்திக் காட்டியிருக்கிறார்கள் என்று விழாவின் அறிமுகவுரையில் துறைத்தலைவர் கலாநிதி தா.சனாதனன் அவர்கள் குறிப்பிட்டிருந்தது இங்கே நினைவுகூரத்தக்கது. பல்கலைக்கழக நடைமுறைகளின்படி, ஒரு சிறிய விடயத்தை நகர்த்துவதற்குக் கூட எழுத்துமூலமான ஒப்புதல்கள் பெறப்பட்டிருத்தல் முதன்மையானது. அந்த வகையில் காகித கட்டுக்களின் மேல் தான் இந்த அரங்க விழாவும் நடத்தப்பட்டிருக்கலாம் என்பது எனது ஊகமாகின்றது. அந்த நிர்வாகம் சார்ந்த விடயங்களைக் கையாள்தல் என்பது, நிகழ்வினை மேலாண்மை செய்வதன் முதற்படியாகின்றது. அந்த வகையில் நுண்கலைத்தலைவரும் விழாக்குழுவும் வெறுவெளி அரங்கக் குழுவும் பாராட்டுக்குரியவர்கள்.

அரங்கவிழாவின் கையேடு முதல் அதன் சுவரொட்டிகள், விழா நுழைவுச்சீட்டு வரையில் காண்பிய ரீதியிலும் வடிவமைப்பு ரீதியிலும் மரபார்ந்த அழகியலை பேணியிருந்தமை குறிப்பிடத்தக்கது. கல்விசாரந்த ஒரு விழாவாக, பிறமொழிப் பார்வையாளர்களுக்காக ஆங்கில மொழியையும் பயன்படுத்தி இருக்கலாம். விழாவினுடைய அறிவிப்புக்கள் பெரும்பாலும் யாழ்ப்பாண அனைத்து இடங்



களிலும் காணக்கிடைத்தது. யாழ்ப்பாணம் முதல் வல்வெட்டித்துறை வரை அரங்கவிழாவின் சுவரொட்டிகள் ஆங்காங்கே காணப்பட்டன. ஆயின் கால மேலாண்மை என்பது அடுத்த அரங்கவிழாவில் இன்னமும் கவனஞ்செலுத்தப்பட வேண்டியதொரு விடயமாக இருக்கிறது. பல்கலைக்கழக நடைமுறைச் சிக்கல்களினால் விழாவின் காலம் தீர்மானிக்கப்பட்டிருப்பினும், பாடசாலை மாணவர்களை முழுமையாக உள்வாங்குவதில் அரங்கவிழாவின் காலத் தெரிவு முட்டுக்கட்டையாக இருந்திருக்கிறது. பாடசாலைகளில் நடுத்தேர்வுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தமையால் வழமையாக பல்கலைக்கழக நாடகங்களுக்கு அலைமோதுகின்ற மாணவர்கள் கூட்டத்தைக் காணமுடியவில்லை. அரங்கு நிறைந்த பார்வையாளர்களைக் கொண்டிருந்தாலும் அரங்க விழா அதன் நோக்கம் சார்ந்து, இன்னொரு தளத்திற்கு கொண்டுசெல்ல வேண்டிய இளைய சமுதாயத்தை முதன்மைப் பார்வையளர்களாக உள்வாங்குவதை தொடரவிருக்கும் அரங்கவிழாக்களில் உறுதிப்படுத்துவது நல்லது. ஆயினும் குழந்தைகளின் வரிசை நிரம்பியே இருந்தது. சிறுவர் ஆற்றுகைகளுக்கு மழலைகளின் எதிர்வினைகளும் அவர்களது இரசனைத் துலங்கல்களும் அழகியல் இடைவெளி குழந்தைகளுக்கு கிடையாது என்பதை உணர்த்திச் சென்றன. அந்தக் கைதட்டல்களும் சிரிப்புக்களும் ஆற்றுகையாளர்களுடன் பார்வையாளர் பகுதியிலிருந்தே பேசிய மழலைக் குரல்களும் அரங்க விழாவில் சிறுவர் ஆற்றுகைகளை உள்ளடக்கியதற்கு அர்த்தம் கூறி நின்றன. நேர முகாமைத்துவம் சார்ந்து பல ஆற்றுகைகளில் கவனம் செலுத்தியிருப்பினும், சில இடங்களில் அது சர்ச்சைக்குரிய ஒன்றாக இருந்திருக்கிறது.

காண்பியம் என்னும் மூலகத்தை அடிப்படையாகக் கொண்டு பார்வையாளரின் அழகியல் அனுபவத்தை மூலதனமாகக் கொண்டு வெளி என்னும் தளத்தில் கட்டமைக்கப்படும் அரங்க வெளியில் பார்வையாளன் காலங்களை, நேரங்களை கடந்து, பல வெளிகளில் பல பாத்திரப் புனைவுகளுடன் பயணிக்கிறான். அவனுடைய அந்த அழகியல் பயணத்தை காண்பியக்கூறுகளே சாத்தியமாக்கியிருக்கின்றன. நாடகப் பிரதியினூடாக நெறியாளரின் வியாக்கியானங்களை பார்வையாளர்களுக்கு எடுத்துச்செல்வது காண்பியக் கட்டமைப்புக்களே. காண்பியக் கட்டமைப்புக்களின் இலாவகமான கையாள்கையிலேயே அரங்க வெளி அதன் அழகியல் பெறுமானத்தை எடுத்துக்கொள்கிறது. ஆற்றுகை வெளியின் கட்டமைப்பு தொடக்கம் மேடைப்பொருட்கள், கைப்பொருட்கள், வேடவுடை, ஒப்பனை, வேடமுகங்கள் என அரங்கத்தின் கூறுகளனைத்தும் தமக்குள் இணைந்தும் தனித்து நின்றும் நடிகனுடைய அசைவியக்கத்துக்குள் அழகியலை உருவாக்குகின்றன. அரங்கவிழாவைப் பொறுத்தவரையில் அதன் முழுமையில் வெற்று வெளிகளை பிரதிகளின் அசைவியக்க வெளிகளாக்கி, வெளியின் இயங்கியலை சிறப்பாகக் கட்டமைத்திருக்கிறார்கள். மாணவ ஆற்றுகையாளர்களை பாத்திரங்களாக மிகவும் தேர்ந்த முறையில் நிலைமாற்றம் செய்திருக்கிறார்கள் வேடவுடை,ஒப்பனை வடிவமைப்பாளர்கள். மரபுவழி ஆற்றுகைகளாகட்டும், நவீன ஆற்றுகைகளாகட்டும் யதார்த்த ஆற்றுகைகளாகட்டும் கோடுகளும் வண்ணங்களும் இழைமங்களும் வடிவமைப்பாளரிடத்தே நன்றாய் வசப்பட்டிருக்கின்றன. மரபு ஒப்பனைகளும் முழுமையாக மரபினை மறுத்த நவீனங்களும் கவனம் செலுத்தப்பட்டிருக்கின்றன எனலாம்.

படைப்பு வெளியானது அதன் கண அசைவியக்கத்தில் பார்வை என்ற விஞ்ஞானத்தின் புள்ளியிலிருந்து அதற்கான இலக்கணத்தையும் அழகியலையும் வடிவத்தையும் பெறுகிறது. படைப்பினுடைய வெளியீட்டுத் தன்மை என்பது பார்வையாளன் அதனை எவ்வாறு புரிந்துகொண்டு நகலெடுக்கிறான் என்பதிலேயே தங்கியிருக்கும். பார்வையாளன் எதனை புரிந்துகொள்ளவேண்டுமென்பதை நெறியாளரின் வியாக்கியானம் தீர்மானிக்கும். ஆனால், நெறியாளரின் கருவியாக ஒளியமைப்பு இங்கே பாகமாடும். படைப்புக்களின் வடிவங்களும் ஒளியமைப்பின் கோணங்களும் குவிகையில் அங்கே கலை அனுபவம் பார்வையாளர்களிடத்தே சென்றுசேரும். அந்த வகையில் ஒளியமைப்பு நுட்பம் சார்ந்து, பல்கலைக்கழகத்தில் காகிதங்களில் மட்டும் ஒளியமைப்பைக் கற்கும் சூழமைவிலே, அரங்கவிழாவின் படைப்புவெளியில் ஒளியும் நிழலும் அவற்றின் கோணங்களின் விகிதசமனில் அரங்க விழாவினை இன்னொருதளத்திற்குஇட்டுச்சென்றிருக்கின்றன. காண்பியங்களின் வெளியீட்டின் முழுமையை நுண்கலைத்துறையின் முன்னைய வெளியீடுகளான மாணவர்களே சாத்தியமாக்கியிருப்பது, துறையின் தொழிண்மை சார் மாணவ உருவாக்கத்தின் சான்றுகளாகும். அந்த கூட்டுழைப்பின் பேறு, அரங்கவிழாவின் காண்பியப் பெறுதியைச் சுட்டிநிற்கின்றது.

ஈழத்து அரங்கவெளியானது இன்று குழுமங்களின் தனித்த இருப்புக்களையும் அவர்களது அடையாளச் சிக்கல்களையும் பேசுகின்ற அல்லது உள்ளடக்கிய ஒரு தளமாக மாறிவிட்டிருக்கிறது. அவ்வாறான அடையாளச் சிக்கல்களுக்குள் இருந்து கொண்டு புறத்தாக்கங்களின் கருத்தியல்களின் வழி தோன்றும் படைப்புக்களை இனங்காணவேண்டிய தேவை எமக்கு இருக்கிறது. படைப்பாளிகள் சிலரின் புகழ்வாஞ்சைக்கும் ஈழத்துவெளி பலியாகிக் கொண்டிருக்கின்றது. ஈழத்து அரங்க வெளியின் இத்தகைய பிரச்சினைகளைப் பின்னணியாகக் கொண்டு, சமகால அரங்கின் சவால்களும் பிரச்சினைகளும் என்ற கருத்தாடலும் சமகால அரங்கப் பயில்வைக் கையாள்தல் என்ற கருத்தாடலும் படைப்புத் தளம் தொடர்பான ஆழமான அனுபவம், சமூகம் குறித்த பார்வை, ஏற்கனவே அந்த வெளியில் பேசப்பட்டு வரும் சர்ச்சைகள், படைப்பு வெளி குறித்த புதிதான கருத்தியல்கள், அந்த சமூகம் சார்ந்த அரசியல் என மிகவும் ஆழமாக, பயில்நிலை மாணவர்கள் படைப்புவெளி பற்றிய தளத்தைப் புரிந்து கொண்டு தங்களைத் தகவமைத்துக்கொள்வதற் குரிய ஆழமான பார்வையுடன் நிகழ்த்தப்பட்டிருந்தன.

குறிப்பு : இதற்கு முந்தைய கட்டுரையில் வெறுவெளி அரங்கக் குழுவின் கொடியுடன் விழா ஆரம்பமாகியது எனக் குறிப்பிட்டிருந்தேன். ஏற்றப்பட்ட கொடி வெறுவெளி அரங்கக் குழுவினுடையது அல்ல. அது அரங்கவிழாவின் கொடி என திருத்தி வாசிக்கவும். தவறுக்கு வருந்துகிறேன்.

**(காட்சி தொடரும்)**



# ஜூங்கா

## ஒரு பார்வை



தமிழ்த் திரையில் இதுவரை மிகையாக ஊதப்பட்ட நாயக பிம்பங்கள் நொறுங்கி வீழத் தொடங்கியிருக்கும் பின்நவீனத்துவக் காலக்கட்டம் இது. முந்தைய சினிமாக்களில் நாயகன் என்பவன் நன்மையின் ஒட்டுமொத்த அடையாளமாக இருப்பான். தீய குணம் ஒன்று கூட அவனிடம் இருக்கவே இருக்காது. உதாரணம் எம்.ஜி.ஆர். இதைப் போலவே வில்லன் தீமைகளின் ஒட்டுமொத்தக் குத்தகைக்காரனாக, கொடூரமானவனாக இருப்பான். பி.எஸ். வீரப்பா, நம்பியார் வகையறாக்கள் இதற்கு உதாரணம். துல்லியமாகப் பிரிக்கப்பட்ட இந்தக் கறுப்பு, வெள்ளைச் சித்திரங்கள் இயல்புக்கு மாறானவை.

ஒரு காலக்கட்டத்துக்குப் பிறகு இந்தச் சித்திரங்களில் சில மாற்றங்கள் ஏற்பட்டன. சூழல் மற்றும் சந்தர்ப்பம் காரணமாக நாயகனும் தீமையின்பால் தற்காலிகமாக வசீகரிக்கப்பட்டு பிறகு திருந்துவான். வில்லனிடம் இருந்த லேசான நற்குணங்களும் சித்தரிக்கப்பட்டன. இது போலத்தான் டான் பாத்திரமும். பயங்கரமான வில்லர்களுக்கு என ஒதுக்கப்பட்ட இந்தப் பாத்திரத்தில் பிற்பாடு நாயகர்களும் நற்குணம் கொண்ட டான்களாக நடிக்கத் தொடங்கினர். ரோபின்ஹூட் சாயலில் பணக்காரர்களிடமிருந்து கொள்ளையடித்து ஏழைகளைக் காப்பாற்றினார்கள். இந்த வகையில் ரஜினியின் பாட்ஷா, தளபதி, கமலின் நாயகன் போன்றவை முக்கியமான திரைப்படங்கள் .


ஆனால் அசலான டான்களின் மறுபுறத்தில் நகைப்புக்கு இடமான விஷயங்களும் இருந்தன. எந்த நேரத்திலும் நிகழக்கூடிய உயிராபத்தின் காரணமாக உள்ளூர மறைத்துக் கொண்ட அச்சமும் நடுக்கமும் கொண்டவர்களாக இருக்கிற டான்களும் நிஜத்தில் இருக்கிறார்கள். இந்தச் சித்திரத்தின் கச்சிதமான உதாரணமாக வடிவேலுவின் கைப்புள்ள பாத்திரத்தைச் சொல்லலாம். பிரம்மாண்டமாக வெற்றி பெற்ற இந்தக் குணாதியசத்தைப் பிறகு பல படங்களில் நடித்துத் தீர்த்து விட்டார் வடிவேலு. வடிவேலு ஏற்ற இந்தப் பாத்திரத்தின் பெரும்பாலான சாயலை ஒரு நாயகனே ஏற்றால் எப்படியிருக்கும்? அதுதான் ஜூங்கா.

இந்தத் திரைப்படத்தில் வரும் சிக்கனமான, அற்பமான கஞ்சத்தனம் உடைய டானை நீங்கள் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாது. அப்படியொரு ரகளையான பாத்திரத்தில் நடித்திருக்கிறார் விஜய் சேதுபதி. நானும் ரவுடிதான் என்று இதே போன்றதொரு பாத்திரத்தில் அவர் ஏற்கெனவே நடித்திருந்தாலும் முற்றிலும் வேறு மாதிரியான சித்திரம் இது. இதையொட்டி தமிழ் சினிமாக்களின் தேய்வழக்குகளை கிண்டலடித்திருக்கிறார்கள். கூடவே சில அரசியல் பகிடிகளும். தமிழ் படம் 2 வெளிப்படையாக முன்வைத்ததை ரசிக்கக்கூடிய அமைதியுடன் சாதித்திருக்கிறது ஜூங்கா.

முதல் பாதியில் ரகளையாக நகரும் திரைப்படம், பரிஸூக்கு இடம் மாறியவுடன் தொய்வடைந்து விடுகிறது. மீண்டும் இறுதிப் பகுதியில்தான் கலகல வுணர்வு திரும்புகிறது. ஒரு கொமெடியான டான், இத்தாலிய மாஃபியா மற்றும் பிரெஞ்சுக் காவல்துறை ஆகியவர்களுடன் மோதி சாகசம் செய்வது, பணக்கார ஹோட்டலில் தங்குவது உள்ளிட்ட பல காட்சிகளில் தர்க்கமில்லை. இது போன்ற காட்சிகள் படத்தின் மீதான நம்பகத் தன்மையைக் குறைத்துச் சோர்வூட்டுகின்றன. நகைச்சுவைத் திரைப்படம்தானே என்று இந்த லொஜிக் மீறல்களைச் சமாதானப்படுத்திக் கொண்டாலும், பலவீனமான திரைக்கதை உண்டாக்கும் சோர்விலிருந்து வெளியே வர முடியவில்லை. இதற்கு யாறாக படத்தின் முதல் பாதியின் வேகத்தை அப்படியே தக்க வைத்திருந்தால் இன்னமும் ரசிக்கக்கூடிய திரைப்படமாகியிருக்கும் ஜூங்கா. இந்தக் கதாபாத்திரத்தின் தன்மையை சிதைக்காமல், முழு திரைப்படத்தையும் நகர்த்தியிருந்தால் மேலதிகமாக ரசிக்க வைத்திருப்பான் ஜூங்கா.

**சுரேஸ் கண்ணன்**





# இன அரசியலைப் பேசும் போராளிக்கு இட்ட பெயர்

ஆங்கிலத்தில் 'டயஸ்பேறா' எனும் சொல் புலம்பெயர் மக்கள் என்ற கருத்துடையது. ' ஒரு சமயப் பிரிவினர் அல்லது இனக்குழுமத்தினர் நிர்ப்பந்தமான சூழலில் கூட்டமாக வெளியேறிச் சிதறிப்பரவுதல்" .

யுத்த சூழ்நிலை காரணமாக இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்த மக்கள் மாறுபட்ட சூழலில் தமது சுயம் இழந்த நிலையில் வாழ்ந்தனர். தமது அடையாளங்களையும், பண்பாட்டையும் பதிவு செய்ய வேண்டிய தேவை அவர்களிடம் இருந்தது. அவர்கள் துணிந்தனர். அதற்கு அவர்கள் அனைத்துப் படைப்பிலக்கிய முயற்சிகளுடன் சினிமாக்கலையையும் பயன்படுத்தினர்.

அந்த வகையில் புலம்பெயர் படைப்பாளியான சதா பிரணவனின் 'பேராளிக்கு இட்ட பெயர்" எனும் குறுந்திரைப்படம் ஈழப்போராட்டத்தின் பின்னர் தனிமனிதன் எதிர் நோக்கிய வலிகளையும் சவால்களையும் குறிக்கின்றது. போருக்குப் பின் அந்த சூழலின் தாக்கங்களையும் வினைகளையும் சந்தித்த ஒருவன், அவன் உளப் போராட்டம், அதனால் அவனுக்குள் விளைந்த சினம் போன்றன இந்தக் குறுந்திரைப் படத்தில் வெளிக்காட்டப்பட்டுள்ளது.

கதையின் நாயகனின் உளவியல் போராட்டம் தனிமனிதன் மீது இந்திய இராணுவம் செலுத்திய அரசியல் நிர்ப்பந்தங்கள் மற்றும் சித்திரவதைகளையும் இந்தக் குறுந்திரைப் படம் பதிவு செய்துள்ளது. இலங்கைப் போராளிகளை வளர்த்துவிட்ட இந்திய அரசியலால் அதே குழுக்கள் பிரிக்கப்பட்டமையும், பொது மன்னிப்பு எனும் போர்வையில் வஞ்சிக்கப்பட்ட அவர்கள் சமூகத்தில் சந்தித்த உளவியல் தாக்கத்தையும் இதில் காணலாம்.

'எங்களைப் பொறுத்தவரை எமது இன அரசியலைப் பேசாமல் எங்கள் இந்தக்கால எந்தக் கலைப் படைப்பும் முழுமைக்கு அருகிலும் வர முடியாது என்பது எனது திண்ணமான எண்ணம், சினிமா இதற்கு விதிவிலக்கல்ல" என்கின்றார் புகலிடப் படைப்பாளி சதா பிரவணண்.

**யாமினி**



# ஸ்ரீரெட்டி புயலில் இருந்து கரை சேர்வாரா லோரன்ஸ்

தமிழகத்தைக் கடந்த சில வாரங்களாக ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும் ஸ்ரீரெட்டி புயலில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும் பிரபலங்களில் நடன இயக்குநரும், நடிகருமான ராகவா லோரன்ஸூம் ஒருவர். ஸ்ரீரெட்டி இவர் மீது பாலியல் குற்றச்சாட்டைச் சுமத்தியிருந்தார். நல்லவர் போல நடித்து தாம் அடுத்து இயக்கவிருக்கும் திரைப்படங்களில் நடிக்க வாய்ப்பளிப்பதாக உறுதியளித்து ராகவா லோரன்ஸ் தம்மிடம் முறையற்று நடந்து கொண்டதாகவும், ஆனால், தம்மைப் பயன்படுத்திக் கொண்ட பின்னர் ராகீவா லோரன்ஸ் சொன்ன சொல்லைக் காப்பாற்றவில்லை என்றும் ஸ்ரீரெட்டி தனது முகநூலிலும், செய்தி ஊடக நேர்காணல்களிலும் முறைப்பாடு தெரிவித்திருந்தார்.

இதை மறுக்கும் விதமாக நடிகர் ராகவா லோரன்ஸ் சமீபத்தில் கருத்துத் தெரிவித்துள்ளார்.

"ஸ்ரீரெட்டி கூறுவது முற்றிலும் பொய். அவர் தவறு நடந்ததாகக் குறிப்பிடும் சமயத்தில் நான் தெலுங்கில் பிரபாஸ் நடிப்பில் ரிபெல் திரைப்படத்தை இயக்கிக் கொண்டிருந்தேன். அந்தத் திரைப்படம் வெளிவந்து கிட்டத்தட்ட 7 வருடங்களாகின்றன. இத்தனை நாட்களாக முறைப்பாடு அளிக்காமல் அவர் என்ன செய்து கொண்டிருந்தார்?

எனக்கு ஸ்ரீரெட்டியைப் பார்த்தால் இப்போதும் கோபம் வரவில்லை. அவரது நேர்காணல்களைக் காணும்போது அவரது நிலையை எண்ணி வருத்தமாகத் தான் இருக்கிறது. இப்போதும் ஒன்றும் கெட்டுவிடவில்லை. நான் பத்திரிகையாளர்களைக் கூட்டுகிறேன். ஸ்ரீரெட்டி அங்கே வந்து நான் சொல்லும் காட்சிக்கு நடித்துக் காட்டி தனது நடிப்புத் திறனை நிரூபிக்கட்டும். சில நடன அசைவுகளைக் கற்றுத் தருகிறேன்.

அதன்படி ஆடிக் காட்டி அவர் தனது திறமையை நிரூபிக்க வேண்டும். நான் வைக்கும் சோதனையில் ஜெயித்து தனது நடிப்பு மற்றும் நடனத் திறமையை நிரூபித்தால் எனது அடுத்த திரைப் படத்தில் அவருக்கு வாய்ப்பு வழங்க நான் தயார்" என ராகவா லோரன்ஸ் தெரிவித்துள்ளார்.

(1505 முதல் 1948 வரையான யாழ்ப்பாணத்தின் வரலாற்றைக் கட்டுரையாளர் இங்கு தொடராகப் பதிவு செய்யவுள்ளார். இங்கு கூறப்பட்டுள்ள தகவல்கள் பெரும்பாலும் ஆங்கில மூலங்களில் இருந்து பெறப்பட்டவை. தகவல்களில் வேறுபாடு காணப்படும் சந்தர்ப்பங்களில் இரண்டு தகவல்களையும் இங்கு தரவுள்ளதாகவும், அவை தொடர்பில் தான் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை எனவும் கட்டுரையாளர் தெரிவித்துள்ளார்.)




ந.பரமேஸ்வரன்
parames35@gmail.com

நல்லூருக்குள் நுழைந்த பறங்கிப்படைகளுக்கும் சங்கிலியின் படைகளுக்குமிடையே கடும் போர் மூண்டது தமிழ் நாட்டுத் துருப்புக்களும், முஸ்லிம் துருப்புகளும் பறங்கி துருப்புகளுக்கு எதிராக ஓர்மத்துடன் போர் புரிந்தன. இரண்டாம் நாள் போர்த்துக்கேய படைகள் நல்லூரைக் கைப்பற்றின. சங்கிலி கோட்டைக்கு நெருப்பு வைத்து விட்டு கோப்பாய்க்குச் சென்றான். பறங்கி படைகள் நல்லூரை சூறையாடின. பறங்கி படைகள் கோப்பாய் கோட்டையை நெருங்கிய போது சங்கிலி கோப்பாயிலிருந்து சரசாலைக்குச் சென்று அங்கிருந்து பச்சிலைப்பள்ளிக்கு தப்பிச் சென்றான். பச்சிலைப்பள்ளியில் வைத்து ஆயிரத்து ஐந்நூறு பேர் கொண்ட பறங்கிப்படை சங்கிலியைச் சுற்றி வளைத்தது. சங்கிலி வன்னி அரசனின் உதவியுடன் வுன்னிக்கு தப்பி சென்றான்.

போர்த்துக்கேயருடன் யுத்தம் செய்வதை விட சமாதான மாக போவதே உசிதமானதென மந்திரிமார் கூறிய ஆலோசனையை ஏற்றுப் போர்த்துக்கேயருடன் சமாதானம் செய்ய சம்மதித்தான் சங்கிலி.இரு வாரங்கள் நடைபெற்ற இழுபறியின் பின் தமிழிலும் போர்த்துகேய மொழியிலும் சமாதான ஒப்பந்தம் எழுதப்பட்டு கைச்சானது. ஒப்பந்தத்தின் சாரம்சம் வருமாறு,

1. போர்த்துகேய அரசை யாழ்ப்பாண அரசன் மேலரசாக ஏற்றுக் கொண்டு யாழ்ப்பாணத்தை சங்கிலியே தொடர்ந்தும் ஆட்சி செய்தல்.

2. வருடாந்தம் 12 கொம்பன் யானைகளும் ஆயிரத்து இருநூறு பதக்குப் பணமும் திறையாக யாழ்ப்பாண அரசன் செலுத்த வேண்டும்.

3. தாமாகவே சுயமாக கிறிஸ்தவ மதத்தை பின்பற்ற விரும்புவோருக்கு கிறிஸ்தவ மதத்தை பின்பற்ற அனுமதியளித்தல்.

4. வித்திய பண்டார என்ற சிங்கள தளபதியிடம் அபகரித்த புத்த தந்தத்தை போர்த்துக்கேயரிடம் கையளித்தல்.

5.மன்னாரை போர்த்துக்கேயருக்கு கையளிப்பது.

6.அவற்றுக்குப் பிணையாக சங்கிலியின் மகனை போர்த்துக்கேயரிடம் கையளிப்பது.

உடன் படிக்கையின் சாராம்சம் அதுவே ஒப்பந்தப்படி செகராசசேகரன் அரசாளத் தொடங்கினான். திடீரென ஒரு நாள் சங்கிலி பொது மக்களின் உதவியுடன் பறங்கிகளின் மீது தாக்குதல் நடத்தினான். மக்களும் கண்ணில் கண்ட பறங்கிகளின் மீது தாக்குதல் நடத்தினார்.பறங்கிகள் சங்கிலியின் மகனை கைது செய்து கொண்டு கப்பலில் ஏறித்தப்பினர்.

ஆனையிறவில் அருந்த பிறகன்சாவும் வள்ளம் மூலம் கப்பலை அடைந்தான். சங்கிலி கையளித்த புத்த தந்த தாதுவையும் போத்துக்கேயர் தம்முடன் எடுத்துச் சென்றனர்.

**சமர் தொடரும்**

# அதிரவைத்த 10 வயது சிறுவன்

ஒலிம்பிக்கைத் தன் வீட்டு முற்றத்து நீச்சல் குளம் போல, தனது கைக்குள் போட்டுக் கொண்ட - ஆண்ட ஒருவர்தான் அமெரிக்காவின் மைக்கல் பெல்ப்ஸ்.

1985ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் திகதி அன்று பிறந்த அமெரிக்கரான, இவர் நீச்சல் போட்டிகளில் தனக்கென ஓர் இடத்தைத் தக்கவைத்துள்ளார்.

அவர் ஒலிம்பிக்கில் 28 பதக்கங்களை வென்று உலகளவில் அதிக பதக்கங்களை வென்ற வீரர் என்ற பெருமையைத் தன் வசம் வைத்துள்ளார்.

2004ஆம் ஆண்டு ஏதென்ஸ், கிரீசில் நடந்த ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் 8 பதக்கங்களை (6 தங்கங்கள், 2 வெண்கலங்கள்) வென்றிருந்தார். இதன் மூலம் அதிக பதக்கங்களை வென்ற வீரரானார்.

அத்துடன், 2008 ஒலிம்பிக்கில் 8 தங்கப் பதக்கங்களை வென்றதன் மூலம் ஓராண்டின் ஒலிம்பிக் போட்டிகளில் அதிக தங்கங்களை வென்ற வீரரான இவர் உயர்ந்தார்.

2004, 2008ஆம் ஆண்டுகளில் தலா 8 பதக்கங்களை வென்றதன் மூலம் அதிக தடவைகள் அதிக பதக்கங்களை வென்ற வீரராகவும் இவர் விளங்குகிறார்.

இதேவேளை, இவர் தனது சிறுவயதில் இன்னொரு சாதனையையும் படைத்திருந்தார். 1995ஆம் ஆண்டு நடைபெற்ற நீச்சல் போட்டி ஒன்றில் 100 மீற்றர் தூரத்தை 1:10.48 விநாடிகளில் நீந்திக் கடந்து சாதனை படைத்தார். இவருக்குப் பிறகு இந்தச் சாதனையை எவரும் எட்டவில்லை.

ஆனால், இவரது இந்தச் சாதனையை தற்போது 10 வயதுச் சிறுவன் ஒருவன் அசால்ட்டாக முறியடித்துள்ளான் என்றால் நம்ப முடியுமா? ஆனால், நம்பித்தான் ஆகவேண்டும்.

கலிபோர்ணியா மாகாணத்தில் அண்மையில், வெவ்வேறு வயதுப் பிரிவுகளில் சம்பியன் ஷிப் போட்டிகள் நடைபெற்றன. இவற்றின் ஒரு போட்டியில், அமெரிக்காவைச் சேர்ந்த கிளார்க் கென்ட் அப்வாடா என்ற 10 வயதுச் சிறுவன் பங்கேற்றான்.


மைக்கல் பெல்ப்ஸ்


கிளார்க் கென்ட்

பட்டர்பிளை நீச்சல் பிரிவில் பங்கேற்ற இந்தச் சிறுவன், 100 மீற்றர் போட்டித் தூரத்தை வெறும் 1:09.38 விநாடிகளில் கடந்தான்.

இந்தச் சிறுவன் குறித்த தூரத்தைக் கடந்து முதலிடத்தைப் பிடித்ததைவிட, 1:09.38 என்ற இலக்கங்கள், மைதானப் பகுதியில் பொருத்தப்பட்டிருந்த நவீன பெரும் பலகையில் காட்டப்பட்டபோது அரங்கம் மாத்திரம் அல்ல, உலகமே அதிர்ந்தது.

அதாவது, ஒலிம்பிக்கில் ஜாம்பவானாக வலம் வந்த மைக்கல் பெல்ப்ஸ், 23 ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்த்திய சிறுவயதுச் சாதனையை முறியடித்தவன் என்ற பெருமையை தனதாக்கிக் கொண்டான் இந்தச் சிறுவன்.

தனது மூன்று வயதில் நீச்சல் கற்றுக்கொண்ட கிளார்க், 7 வயது முதல் நீச்சல் போட்டிகளில் பங்கேற்று வருகிறார். நீச்சல் தவிர, இசை, தற்காப்புக் கலை உள்ளிட்ட துறைகளிலும் தனது பங்களிப்பை அளித்து வருகிறான்.

வரும் காலங்களில் இன்னும் பல சாதனைகளை அவன் படைப்பான என உலகம் எதிர்பார்க்கும் அளவுக்கு அவன் உலகை அதிரவைத்துள்ளான்.







எதிரொலியின் ஓராண்டு நிறைவையொட்டி அகில இலங்கை ரீதியில்

பாடசாலை அணிகளுக்கு இடையிலான

# 'எதிரொலியின் சொற்கணை-2018' மாபெரும் விவாதப் போட்டி

**தொடுங்கள் சொற்கணையை!** **வெல்லுங்கள் பரிசுகளை!!!**



விண்ணப்ப முடிவுத் திகதி: **15-09-2018**

முதற் பரிசு **1,00,000/=**

## போட்டியில் பங்கு கொள்ள என்ன நிபந்தனைகள்?

- இலங்கையில் உள்ள சகல பாடசாலைகளும் இதில் பங்கு கொள்ளலாம்.
- ஒரு பாடசாலையில் இருந்து ஓர் அணி மாத்திரமே பங்கு கொள்ளலாம்.
- ஓர் அணியில் மூவர் மட்டுமே விவாதிக்க முடியும். இருவர் மேலதிகமாக அணிக்குள் உள்ளடக்கப்படலாம்
- அணிப்பட்டியலில் உள்ளவர்கள் மாத்திரமே போட்டியில் பங்கேற்க முடியும்
- அணி விபரம் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்படல் வேண்டும்
- போட்டிகள் யாவும் செப்ரெம்பர் மாதம் நடைபெறும்.
- விவாதத் தலைப்புகள் போட்டி இடம்பெறுவதற்கு முன்னதாக, போட்டி நடைபெறுமிடத்தில் வைத்தே வழங்கப்படும்.
- பங்குகொள்ளும் சகலருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- முதல் மூன்று இடங்களைப் பெறும் அணியினருக்கு பதக்கங்களும், பணப்பரிசில்களும்.
- விண்ணப்பங்களை தபாலிலோ, நேரிலோ கையளிக்கலாம்.

மேலதிக தகவலுக்கும் தொடர்புக்கும்

**'எதிரொலியின் சொற்கணை-2018'**
அம்பலம் பதிப்பகம், இல. 241, கைதடி - மானிப்பாய் வீதி, உடுவில், யாழ்ப்பாணம்.
ethirolimedia@gmail.com, 0212243818

இப்பத்திரிகை மானிப்பாய் வீதி, உடுவில் என்ற முகவரியிலுள்ள அம்பலம் பதிப்பகத்தால், 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 08.08.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.